
இலவச வெளியீடு: GERMANY , ENGLAND மாசி. Feb. 2015
Free Circulation
# வெற்றிமணி
Vettimaniy
மணி 65
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
தொடர் மலிவு விற்பனை!
விபரம் பக்கம் 17
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836



# அறுபது ஆண்டு தமிழர் பிரச்சினையை ஒரு ஆட்சி மாற்றத்துடன் தீர்க்க முடியும்?

## யேர்மனியில் பூத்துக்கிடக்கும் காதலர் பூட்டுக்கள்!



Feb 14
Happy Valentine's day



## காதல் பரிசாக ஜப்பானியக் காதல் பாடல்கள்!

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 09

ATHAVAN TV
ஆதவன் தொலைக் காட்சியின் யேர்மனி முகவர்
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740
விபரம் பக்கம் 26

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 6ம் பக்கம்

Ceylon Imbiss Page.32
Tel:0231 7252859

Lucky Fly page.17
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696

S.K.Silks & Gold Paraadise
Mr.P.Sritharan.
Proprietor





என்றும் அழகிய பட்டுச் சேலைகளும்
பஞ்சாபிகளும் உங்கள் மனம்போல்
குவிந்திருக்கும்.
சிறுவர்களின் ஆடைகளுக்கும் மற்றும்
தங்க நகைகளுக்கும்
என்றும் எம்மை நாடுங்கள்.
Adler str 33 - 44137 Dortmund



டோட்மூண்ட் நகரில்
மாபெரும் ராஜமுத்திரை
Tel:0231 9501 647




# நம்பமுடியாத உண்மைகள்

மாதவி

## திருமணம் செய்ய காதலிக்கு காதலன் சொன்ன பாதை!




திருமணம் செய்ய காதலிக்கு காதலன் சொன்ன பாதை!
ஒரு காதலன் தனது காதலிக்கு சொன்னார். நாம் முதல் முதல் சந்தித்த இடத்திற்கு நான் சொல்லும் பாதையால் செல்லவேண்டும். காதலியும் அப்படியே சென்றாள். சென்று முடிந்ததும் அவள் சென்ற பாதையை GPS tracker காட்டினார். அந்தப்பாதையின் வடிவம் MARRY ME என்று இருந்தது.

## 1950 கணனியின் அளவு!




உங்களுக்கு இன்று ஒரு computer ஓடர்பண்ணினால் 3 நாட்களுக்குள் வீடுவந்து சேர்ந்துவிடும். கணனியின் அளவு சிறுவர்களே தூக்குமளவிற்குத்தான் இருக்கும். சில கணனிகள் தாபால் பெட்டிக்குள்ளும் போட்டுவிடும் அளவிற்குத்தான் இருக்கும்.
ஆனால் அன்று பாருங்கள் அதாவது 1950 இல் ஒரு கணனிவந்து இறங்குகின்றது லொறியில். எத்தனைபேர் நின்று இறக்குகின்றார்கள். இன்று அவர்கள் இருந்தால் அத்தனைபேரது பாக்கெற்றிலும் சிறு கொம்பியூட்டர்கள் இருந்திருக்கும்.
இதுமட்டுமா இன்று உடம்போடு ஒட்டிய ஒரு உறுப்பாக உள்ளது கைத்தொலைபேசி. இது இன்று பேப்பர் வெயிட்டுக்கு வந்துவிட்டது. (யப்பான் அதற்கும் ரெடி) பாக்கெட்டில் இருப்பதுகூடத்தெரியாது அவ்வளவிற்கு கனம் இல்லை. எதாவது மசேச்வரும்போதுதான் இதயம் துடிப்பது போன்று மெல்லியதாக அதிரும்.

இதோ ஒரு தொலைபேசி 1985 இல் எப்படி இருந்தது தெரியுமா? ஒரு குழந்தையை இடுப்பில் தூக்கி கொண்டு போவதற்கு ஒப்பானதாக இருந்துள்ளது. அதன் எடை 4.7 கிலோ. இதன் இன்றைய விலை மதிப்பீடு 4.600 பவுண். இந்த தொலைபேசி உபையோகிக்கும் இருவரும் இரண்டு பெரிய செங்கட்டிகளை தூக்குவதுக்கு ஒப்பாக இருக்கும். இதனை இங்கிலாந்து அன்று தயாரித்திருந்தது.

### 1985 கைத்தொலைபேசி





2015

### இறந்தவர்களையும் தத்தெடுக்கும் நாடு.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது (1939-1945) உயிர்நீத்த அமெரிக்ப் போர்விரர்களது உடலை அடக்கம் செய்த இடம் (The World War II Margraten Holland/ Netherlands American Military Cemetery and Memorial) நெதர்லாந்தில் உண்டு. அங்கு ஒவ்வொரு ஆண்டும் நினைவுதினம் அனுட்டிக்கப்படும்போதும் நெதர்லாந்து மக்கள் அங்குள்ள 6,801 போர்வீரர்களது இடத்தையும் ஆளுக்கொருவர் தத்தெடுத்துக்கொள்வர். அத்துடன் வீரர்களுக்கு பூவைத்து அஞ்சலியும் செய்வர். இங்கு ஒரு சுவையான சம்பவம் ஒன்று முன்பு நடந்தது. 25 வருடங்களுக்க முன் ஒரு நெதர்லாந்து பெண் ஒரு போர் வீரனை தத்தெடுத்து அவ்வீரனுக்கு பூக்களை வைத்தும் அவ்விடத்தை பராபரித்தும் வந்தாள்.



திடீர் என ஒரு நாள் அவ்விடத்தில் வேறு ஒரு பெண் வந்து பூவைத்து கலங்கிநிற்பதைக்கண்டு ஆச்சரியமடைந்தாள். அந்தப் பெண் அமெரிக்காவில் இருந்து வந்தவள். அவள் தற்போதுதான் யுத்தத்தில் மாண்ட தனது காதலன் எந்த நாட்டில் அடக்கம் செய்ப்பட்டுள்ளார் என்ற விபரம் அறிந்துள்ளாள். எனவேதான் அங்கு வந்து தனது காதலனுக்கு இறுதிமரியாதை செய்கின்றாள். இதுவரை 25 வருடங்களாக பூவைத்து வந்த அந்தப்பெண் இறந்த அப்போர் வீரனை தான் 25 வருடங்களாக காதல் செய் கின்றேன் என்ற குண்டைத் தூக்கிப்போட்டாள். முன்பின் அறியாத அப்போர்வீரனது சமாதியில் ஒவ்வொரு தடவை பூவைக்கும் போதும், தனக்கு இனம்புரியத ஒரு காதல் அதிர்வு மனதுக்குள் தோன்றியதாக அப்பெண் சொன்னாள்.

உண்மையான காதலிக்கு அது ஆச்சரியமாக இருந்தாலும். பின் இரு பெண்களும் நட்பானார்கள். பின்னர் நெதர்லாந்து பெண் முன்பு எப்படி அவர் இருந்தார் என்று எல்லா விபரத்தையும் அமெரிக்கப் பெண்ணிடம் கேட்டு கேட்டு மகிழ்ந்தாளாம். அவளும் இறந்தபின்னர் ஒருவரைக் காதலிக்கும் அதிசயம் கண்டு மகிழ்ந்தாளாம்.

இது ஒரு உண்மைச்சம்பவம்.நெதர்லாந்து நாட்டை காப்பதற்காக உயிர்துறந்தவர்கள் என்ற நன்றி உணர்வு இன்று வரை அம்மக்களுக்கு உண்டு. அந்த நன்றியைக் காட்ட அவர்களுக்கு ஒரு நாடும் அரசும் உண்டு.







## வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 221


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

"ஓவியக்கலைவேள்"

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com



Company No: 8876276


**"வெற்றிமணிமொழி"**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Vettimaniy Ltd

Sanje:07824 61 83 83

vai g (U.K) 00 44 7788 195962



Vettimaniy has no responsibility of the contents of the articles and advertisements


# அறுபது ஆண்டுக்கு மேற்பட்ட தமிழர் பிரச்சினையை வெறுமனே ஒரு ஆட்சி மாற்றத்துடன் தீர்க்க முடியும்?

## புதுடில்லியில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர கூறியது என்ன?

பிரிபடாத இலங்கைக்குள் தீர்வு என்றால் அது எவ்வாறு அமைய வேண்டும் என்ற பொருள்கோடலை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வற்புறுத்த வேண்டும். இல்லையேல் வடக்கு கிழக்கில் ஏதோ ஒரு வழியில் அமைதி ஏற்பட்டால் போதும் என்ற நிலைதான் ஏற்படும்.

-அ.நிக்ஸன்-

இராணுவம் அபகரித்த காணிகளை மீண்டும் பொதுமக்களிடம் கையளிப்பதற்கு 13ஆவது திருத்தச் சட்டம் அவசியம் இல்லை என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புதுடில்லியில் கூறியிருக்கின்றார். இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை இந்திய ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவேண்டும். அதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு உறுதியாக வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பு உள்ளது. அந்த எதிர்ப்பார்ப்புக்கு உள்ளேதான் வடக்கு கிழக்கு மாகாண பிரச்சினைக்கும் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா கவனமாகவுள்ளது என்ற முடிவுக்கு வரலாம்.

மூன்று விடயங்கள்

மங்கள சமரவீர புதுடில்லியில் மூன்று விடயங்களை கூறியிருக்கின்றார். ஒன்று 13ஆவது திருத்தச்சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தினாலும் அந்த சட்டத்தின் பிரகாரம் உள்ள காணி பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க வேண்டிய தேவை இல்லை என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இரண்டாவது இராணுவம் கைப்பற்றிய காணிகளை பொதுமக்களுக்கு வழங்குவதில் பிரச்சினை இல்லை என்றும் ஆனாலும் தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் வடக்கு கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் சிலவற்றை தொடர்ச்சியாக வைத்திருக்க வேண்டிய அவசியம் பற்றி வலியுறுத் தியுள்ளார். மூன்றாவது ஜெனீவா மனித உரிமைச் சபையின் இலங்கை மீதான சர்வதேச விசாரணையின் முக்கியத்துவத்தை குறைப்பது என்ற கருத்தையும் கூறியிருக்கின்றார். இந்த மூன்று விடயங்களையும் மங்கள சமரவீர புதுடில்லிக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் சுஸ்மா சுவராஜ் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரை சந்தித்து உரை யாடியபோது இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு தொடர்பான விடயங்களை மங்கள சமரவீர கேட்டு அறிந்து கொண்டார். அத்துடன் மைத்திரிபால அரசாங்கம் எதிர்காலத்தில் எப்படி செயற்பட வேண்டும் என்ற இந்திய மத்திய அரசின் எதிர்ப்பார்ப்புகள் குறித்தும் மங்கள சமர வீரவுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மங்கள சமரவீரவைப் பொறுத்தவரை இந்திய மத்திய அரசின் இலங்கை தொடர்பான நிலைப்பாடுகள் எதுவாக இருந்தாலும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இலங்கை அரசாங்கம் விரும்புகின்ற ஒன்றையே இந்தியா ஏற்க வேண்டும் என்பதில் அவதானமாக இருந்தார் என இந்திய செய்தி நிறுவனம் ஒன்று கூறியுள்ளது.

**இந்திய வெளிவிவகார அமைச்சு**

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் வடக்கு கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக பேசியபோது காணி அபகரிப்பு விடயங்கள், இராணுவ எண்ணிக்கைகளை குறைத்தல், சிவில் நிர்வாக செயற்பாடுகளுக்கு இடமளித்தல், மற்றும் வடமாகாண சபையின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு இடமளித்தல் போன்ற விடயங்களுக்கு முக்கியமளித்திருக்கின்றார். அதற்கு சாதகமான பதில் வழங்கிய மங்கள சமரவீர அனைத்துக் கட்சிகளின் இணக்கத்துடன் குறித்த விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியிருக் கின்றார். அதேவேளை படிப்பினைகள் மீளிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்தும் சுஸ்மா சுவராஜ் யோசனை முன்வைத் திருக்கின்றார்.

இங்கு நரேந்திரமோடி அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்புடன் மேலும் இரண்டு விடயங்களை பிரதானமாக எதிர்ப்பார்க்கின்றது. ஒன்று இனப்பிரச்சினை விடயத்தில் மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் எடுக்கின்ற எந்த நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவது. அதாவது இந்திய நிலை பாட்டுக்கு ஏற்ற வகையிலான இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஆதரித்தல். இரண்டாவது. வடக்கு கிழக்கில் இந்திய உதவித் திட்டங்களுக்கு இடமளிப்ப துடன் அபிவிருத்தி என்ற பெயரில் அங்கு வேறு எந்த நாடுகளின் தலையீடுகளுக்கும் இலங்கை அரசாங்கம் இடமளிக்கக் கூடாது என்பது.

கூட்டமைப்பின் நிலைப்பாடு

ஆட்சி மாற்றத்தின் மூலம் ஜனநாயகத்தை ஏற்படுத்துவது குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுவது என்ற கோசம் சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் சிங்கள மக்களுக்கும் ஏன் முஸ்லிம் மக்களுக்கும் சாதகமாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு அது சாதகமாக இருந்தாலும் கூட வடக்கு கிழக்கில் இராணுவம் நீக்கப்பட்ட ஜனநாயக கட்டமைப்பு ஒன்றை எதிர்ப்பார்க்கின்றனர். இனப்பிரச்சினை தீர்வுக்கு முன்னர் அந்த ஜனநாயகக் கட்டமைப்பு அவசியம் என்பதை தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் வலியுறுத்தியிருந்தது. இந்த விடயம் குறித்து புதுடில்லியில் கருத்து வெளியிட்ட மங்கள சமரவீர தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை எடுத்து விட்டால் அந்த ஜனநாயகக் கட்டமைப்பு இயல்பாக வந்து விடும் என்று கூறியிருக்கின்றார்.

இந்த இடத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக எழுகின்ற கேள்வி என்னவென்றால் 60 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தமிழர் பிரச்சினையை வெறுமனே ஒரு ஆட்சி மாற்றத்துடன் தீர்க்க முடியும் என்ற கருத்தை இந்திய மத்திய அரசுக்கு அல்லது மைத்திரி பாலசிறிசேன அரசாங்கத்துக்கு சொன்னார்களா? அமைச்சுப் பதவியை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஏற்க வேண்டும் என்று மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை சந்தித்து பேசியபோது கோரிக்கை விடுத்திருந்தார். ஆகவே மங்கள சமரவீர புதுடில்லியில் அவ்வாறு நம்பிக்கையுடன் கூறியிருக்கின்றார் என்றால் அமைச்சுப் பதவியை ஏற்கும் விடயம் குறித்து ஏதோ மறைமுகமாக உறுதிமொழி வழங்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.

தொடர்ச்சி 04 ம் பக்கம்


உலகை வலம்வர உற்றதுணை நாங்கள்!

Tel: 0231 5896557,
Tel: 0231 5574319
Fax: 0231 5844665

Rhenische Strasse 29
44137 Dortmund.Germany

இந்தியாவுக்கான
விசா பெற்றுத்
தரப்படும்



website : www.centurytravels.de
Mayuran 01772330010

Century Travels & Tours
email : info@centurytravels.de

Last Minute Tickets:
குறைந்த விலையில்
பயணச்சீட்டுக்கள்
நேரடியாகத்
தொடர்பு கொள்ளுங்கள்!
நேரடித்தொர்பு:
0231 985 333 27
Number: 017621682149



Ram Nishanthan
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
017621682149

# அது காதல்

## நடிகர் சிவகுமார்

காதல் என்பது இனவிருத்திக்கான ஓர் அடிப்படை ஈர்ப்பு. ஈ எறும்பு யானை என்று சகல ஜீவராசிகளும் இனவிருத்தி செய்கின்றது. சேவல் சிறகடிச்சு கொக்கக்கோ என்று கத்திக் கத்தி சுத்திவந்து கோழியைத் தயார்பண்ணுவது மாதிரி, மனிதர்கள் கவிதை, வசனம், பாசம், அன்பு, என்று அந்த ஈர்பை வெளிப்படுத்திறார்கள்.

20 மைல் தூரம் வேகாத வெய்யிலில் சைக்கிளில் சென்று, மல்லிகைப்பூவும், வியர்வையும் கலந்த வாடையோடு பீச்சில் காதலியைப் பார்க்கிறபோது ஏற்படுகின்ற அதே பரவசம்,....

அந்தப் பெண்ணு கல்யாணத்திற்குப் பிறகு விடியற்காலையில் தலையைவிரிச்சுப்போட்டு, வாயிலை பிரஷ்ஷைவைத்துக்கொண்டு, கண்ணாடி முன் பல் துலக்கையும் இருக்கமா? அப்பவும் இருந்திட்டா அந்தக்காதல் அடுத்தகட்டத்திற்கு நகாத்தலாம். அது காதல்.

**அறுபது ஆண்டுக்கு ...** 3ம் பக்கத் தொடர்சி



## எந்த வழியிலாவது அமைதி?

இந்தியாவைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கில் எந்த வழியிலாவது அமைதி ஏற்பட்டு விட்டால் போதும் என்ற மனநிலை உண்டு. ஏன் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகளும் அவ்வாறான கருத்துக்களை கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 60 ஆண்டுகால அரசியல் பிரச்சினைக்கு தீர்வாக இலங்கைத் தேசியம் என்ற வரையறைக்குள் விட்டுக் கொடுத்தால் இந்தியா அதனை வரவேற்கும். ஏனெனில் தேசிய இனங்கள் தனித்துவ அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதை இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் விரும்புவதில்லை. ஆகவே இலங்கை அரசாங்கத் துடன் அல்ல இலங்கை அரசு என்ற கட்டமைப்பில்தான் பிரச்சினை என்பதை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தொடர்ந்து வலியுறுத்தவில்லை என்ற குற்றச் சாட்டுக்கள் எழுகின்றன.

சர்வதேச அரசுகள் என்பது தமது அரசியல் பொருளாதார நலன்களில் மாத்திரமே கவனம் செலுத்தும். வேறு நாடுகளில் இடம்பெறுகின்ற தேசிய இனங்களின் பிரச்சினைகளை மனிதாபிமானமாக பார்த்தாலும் பிரச்சினைப்படுகின்ற இனங்கள் இணங்கிப் போகுமானால் அவர்களும் அதுதான் சிறந்த ஜனநாயகம் என்று கூறுவார்கள் பரிசுகளையும் வழங்குவார்கள். ஆகவே பிரிபடாத இலங்கைக்குள் தீர்வு என்றால் அது எவ்வாறு அமைய வேண்டும் என்ற பொருள்கோடலை கூட்டமைப்பு வற்புறுத்தவில்லையானால் இந்தியாவும் இலங்கையும் விரும்புகின்ற தீர்வுதான் கிடைக்கும்.




பாடல் :சேவியர் - இசை : சஞ்ஜே சிவா.- பாடியவர் : பென்சிகா அல்பம் மன்மதா
வெளியீடு TBB -வெற்றிமணி -2014

நெனச்சான்
நெனச்சான்
எனை நினைச்சான்
ஒரு கால நேரம்
பாக்காமலே வதச்சான்

ரசிச்சான்
ரசிச்சான்
எனை ரசிச்சான்
என் பேச்சும், மூச்சும்
ஓரக் கண்ணால் ரசிச்சான்

நானொரு அழகிய
பம்பரமா
உந்தன் கையிலே
பம்பரமா
உன்னைச் சுத்தற
பம்பரமா, பம்பரமா

நூலில் ஆடற
பம்பரமா
தோளில் ஆடற
பம்பரமா
கண்ணில் ஆடற
பம்பரமா, பம்பரமா ?

கண்ணினோரம்
நெஞ்சினோரம்
காதல் தட்டுதோ
தத்தளிக்கிற
பாய்மரமா
கரையில் தட்டுதோ

அட
கண்ணு ரெண்டும் கட்டிக் கிட்டு
காட்டில் விட்ட தாரு
எட்டுத் திக்கும் எப்பவுமே
காதலென்று ஆச்சு

ஒண்ணு ரெண்டு மூணு கூட
மறந்திங்கு போச்சு
மூச்சுக்குள்ள நீ தானே
கிசு கிசுப் பேச்சு

கெஞ்சிக் கெஞ்சிப் பாத்தேன்
தூக்கம் வரவில்லை
பஞ்சணைக்கு கொஞ்சம் கூட
கூச்சம் வரவில்லை
கண்ணிமையில் கத்தி ரெண்டு
தொங்க விட்ட தொல்லை
என்னுடைய நிலமையை
வேறென்ன சொல்ல

அவளொரு தேவதை
அவளொரு மேனகை
அவளொரு பூங்கிளி
அவளொரு பூங்கொடி
அவளொரு அதிசயம்
அவளொரு பரவசம்
அவளொரு பாச்சரம்
அவளொரு புதுசுரம்

தந்திரனோ
மந்திரனோ
அவனொரு அழகிய சுந்தரனோ

அதிசயமோ
பரவசமோ
அவனது காதலும் என்வசமோ

மயங்கிடுமோ
பயந்திடுமோ
சொல்லிட உதடுகள் தயங்கிடுமோ

பூத்திடுமோ
காய்த்திடுமோ
உயிரிலே காதலின் கனிவருமோ



# ஆண்களின் கதி அதோகதியாகும் காலம் வருமா?

## அப்போது நான் எங்கே!



கையில் சிவத்தமிழுடன் 2007

**அதிபர் கனக்ஸ்**


பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். பிறேசில் நாட்டு விஞ்ஞானிகள் அங்கே அழிந்து போகும் இடர்ப்பாடு கூடிய இனங்களைக் காப்பாற்றுதற்கான முயற்சியில் ஈடுபடுகிறார்களாம். அந்நாட்டில் உள்ள விலங்கினங்களில் எட்டு இனங்கள் அழியக் கூடிய நிலையில் உள்ளனவாம். இவற்றின் அழிவைக் காப்பாற்றும் முயற்சியில் தான் இந்த உயிரியல் விஞ்ஞானிகள் ஈடுபாடு காட்டுகிறார்கள். இந்த விலங்குகளில் முக்கியமானது Maned Wolf எனும் பிடரி மயிர் ஓநாய். உலகம் முழுவதுமாக இந்த விலங்கின் எண்ணிக்கை 23,600 வரை உள்ளதாம் அதில் பெரும் தொகை ஓநாய்கள் பிறேசில் நாட்டில் உள்ளன.இவ்விலங்குகளைக்

எப்படிக் காப்பாற்றப் போகிறார்களாம்? நீங்கள் சில வருடங்களுக்கு முன்னர் கேள்விப்பட்ட முளைவகையாக்கல் (Cloning) முறையினால் தான் இதனை செய்ய எண்ணியுள்ளார்கள். ஏற்கனவே பல நாடுகள் தமது நாட்டின் அழியவுள்ள மிருகங்களைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகளில் ஒன்று தான் இந்த முளைவகையாக்கல். ஆனால் அந்த நாடுகள் இது வெற்றியைப் பயக்கவில்லை எனக் கூறியபோதும் பிறேசிலின் முயற்சி சக்கிடுத்தார் ஏறிச் சறுக்கி விழுந்த கதையாகத் தான் முடியுமோ? அவர்கள் கையாளும் முளைவகையாக்கல் முறை கேட்கும் போது மிகவும் சுலபமான விசயம் போலத் தெரிகிறது. ஓநாயின் தோலில் உள்ள ஒரு கலத்தினை எடுத்து அதன் கருவினைத் தனிப்படுத்துவார்கள். சாதாரண நாயினது முட்டை ஒன்றினை எடுத்து அதன் கருவை நீக்கிட்டு ஓநாயின் கருவினை அந்த முட்டையுள் செலுத்தி விடுவார்கள். இந்த முட்டையை இப்போது ஒரு நாயினது கருப்பையின் உள்ளே பதித்து ( implanting) விடுவார்கள். அங்கே அந்த முட்டை விருத்தியுற்று நாய் சுகப்பிரசவம் செய்கின்ற பொழுது அது நக்கிக் கொடுப்பது நாய்க் குட்டியாயில்லாமல் ஓநாய் குட்டியாகவே இருக்கும்.

நாய் இங்கே ஈன்றாள் ( Surrogate mother). குயிலின் முட்டையைக் காகம் அடைகாத்துக் கொடுப்பது தெரிந்ததே. அதுவும் ஒரு வகை ஈன்றாள் தானே. அங்கே பொரித்த குயில் குஞ்சு தனது குரலால் தான் யாரெனப் புலப்படுத்தியதும் காகம் ஓட ஓட விரட்டுவதைப் பலர் கண்டிருப்பீர்கள். இப்போ மறந்திருக்கலாம். ஊருக்குப் போனாலும் அக்காட்சியைக் காண்பது அரிது. உயர்ந்த மரங்கள் பெரும்பாலும தறிபட்டுத் தரையில் கிடக்கின்றனவே. குயில் குஞ்சின் அத்தகைய நிலை ஓநாய்க் குட்டிக்கு ஏற்பட மாட்டாது. விஞ்ஞானிகள் பேணிக் காத்து விடுவார்கள்.

ஏன் விஞ்ஞானிகள் ஓநாயின் முட்டையை விட்டு நாயின் முட்டையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஓநாய் முட்டையை உபயோகிப்பது சுலபம் தான் ஆனால் காட்டுக்குள் சென்று பெண் ஓநாயைக் கொண்டு வந்து கூட்டில் அடைத்துப் பராமரிப்பதிலும் றோட்டில் திரியும் நாயினை உபயோகிப்பது சுலபமல்லவா.

பொதுவாக முளைவகையாக்கலின் போது ஒரு இனத்தினது பெண்ணினது முட்டையின் கருவினை அகற்றி விட்டு அதே இனத்தின் உடற்கலத்தில் ( somatic cell) உள்ள கருவினையே முட்டையுள் செலுத்துவார்கள். இதற்கு விதி விலக்காகச் சில் விலங்கினங்கள் உள்ள. அந்த இனங்களில் மாத்திரமே இனத்துக்கிடையான கலப்புப் பிறப்பு (Interspecific crossing) ஏற்படும் சாத்தியம் உள்ளது. பொதுவாக விலங்குகளிலே இரு வேறு வேறு இனங்களுக்கிடையே புணர்ச்சி ஏற்படுவதில்லை.





ஆனால் நாயுக்கும் ஓநாயுக்கும் இடையே இனத்துக்கிடையான கலப்பப் பிறப்பு ஏற்பட முடியும். அதன் விளைவாகத் தோன்றும் வழித்தோன்றல் ஓநாய்-நாய் அல்லது ஓநாய் கலப்பினம் எனப் படும் ( Wolf-dog/ Wolf Hybrid). கோஏறுகழுதை (Mule) ஒரு கலப்பினம்.

கழுதையும் குதிரையும் இனம் கலப்பதால் உருவானது. ஆனால் இந்த கலப்பினங்கள் இனப் பெருக்கம் செய்யும் தகமை அற்றவை. ஓநாயின் முட்டைக்குப் பதிலாக சாமானிய நாயின் முட்டையை உபயோகிப்பது விஞ்ஞானிகளுக்குச் சுலபமாய் அமையும்.

மேலே நான் தந்த தகவல் நீங்கள் பலர் கேட்டுக் கேட்டு அலுத்துப் போன செய்தி என்பது எனக்கு நன்கு தெரிந்ததே. நான் சொல்லப் போவது இன்னொரு விசயம். ஆண் இனத்தின் வருங்காலம் பற்றியது. இயற்கையும் ஆண் இனத்திற்குப் பாதகமாய் உள்ளது. அதே போல செயற்கையும் ஆணின் மேல் கை வைக்கும் போலத் தெரிகிறது.

தொடர்ச்சி 6ம் பக்கம்...



# ஆண்களின் கதி ...

5ம் பக்கத் தொடர்ச்சி....

மனித இனத்திலே 23 சோடி நிறமூர்த்தங்கள் உள்ளன என்பது அறிந்ததே. அதில் 22 சோடிகளைத் தன்மூர்த்தம் ( Autosomes) எனவும் ஒரு சோடியை அயன் மூர்த்தம் அல்லது இலிங்கமூர்த்தம் ( Allosomes / Sex-Chromosomes) எனவும் அழைப்பதும் தெரிந்திருக்கும். இவற்றிலே தன்மூர்த்தங்கள் உடல் இயல்புகளையும் அயன் மூர்த்தங்கள் பாலியல் இயல்புகளைத் தீர்மானிப்பதாயும் கருதுவர். இந்த இரண்டிலே ஒன்று சற்றுச் சிதைவடைந்து காணப்படுகிறது. அதனை லு நிறமூர்த்தம் என்றும் மற்றதனை ஓ நிறமூர்த்தம் எனவம் அழைப்பார்கள் மனித இனத்திலே துர்ப்பாக்கிய வசமாக இந்தச் சிதைவடைந்த லு நிறமூர்தம் ஆண்களில் காணப் படுகிறது (XY). பெண்களில் இரண்டுமே நல்ல நிலையில் உள்ளன (XX). இலிங்க நிறமூர்த்தங்களாலேதான் பாலியல் தீர்மானத்துடன் சம்பந்தமான பரம்பரை அலகுகள் உள்ளன. X நிறமூர்தத்தில் பெண்மைக்கும் Y நிறமூர்த்தத்தில் ஆண் உறுப்புக்கள் விருத்திக்கும் வேண்டிய பரம்பரை அலகுகள் உள்ளன. இங்கேதான் ஒரு செய்தியைக் கூற வேண்டும். இந்தச் சிதைவடைந்த Y நிறமூர்த்தம் தனது கைங்கரியத்தை நிறுத்த வில்லைத் தொடர்ந்து சிதைவடைந்து கொண்டே இருக்கிறதாம்.

இதனாலே தொடக்க காலத்திலே அதில் காணப்பட்ட 1438 பரம்பரை அலகுகளிலே இப்போது வெறும் 45 மாத்திரமே உள்ளனவாம், மிகுதி 1393 போன இடம் தெரியவில்லை. கணக்குப் போட்டுப் பார்த்த பொழுது ஒவ்வொரு பத்து இலட்சம் வருடங்களில் 4.6 பரம்பரை அலகுகள் சிதைந்துள்ளன. இதன் படிக்கு இன்னும் பத்து மில்லியன் (10,000000) வருடங்களில் Y நிறுமூர்த்தம் இருந்த இடமே தெரியாது போய்விடும். அப்போ ஆண்களின் கதி?

அங்கேயும் இங்கேயுமாக திருநங்கைகள் ( transgender) பற்றிக் கேள்விப் பட்ருப்பீர்கள். அண்மைக் காலங்களில் பெரிதாக அடிபட்ட தென் ஆபிரிக்காவின் ஓட்ட வீராங்கனை செமேனியா இந்த வகையினர். பெரும் சர்ச்சைக்கு ஆளாகினார். திருநங்கைகள் ஆண்களாகப் பிறக்க வேண்டியவர்கள் ஆனால் விகாரம் ஏற்பட்டு Y நிறமூர்த்தத்தினை இழந்தமையால் ஒரு X நிறமூர்த்தத்தை மாத்திரமே கொண்டிருப்பார்கள். எனவே ஆண் உறுப்புக்கள் விருத்தியுறுவதில்லை. பெண்மைக்கான சில துணை இயல்புகள் மாத்திரம் தேன்றலாம்.

இயற்கை ஆண் இனத்திற்கு ஏற்படுத்திய வஞ்சம் 10 மில்லியன் வருடங்களில் ஆண் இனமே இல்லாமல் போக வழி வகுத்துள்ளதை காண்கிறோம்.

அப்படியாயின் 10 மில்லியன் வருடங்களில் உலக சமூகம் வெறும் பெண்களைக் கொண்ட சமூகமாத்தான் இருக்குமா?

ஆண்கள் இல்லாவிட்டால் இனப்பெருக்கம் நடைபெற முடியாதே. அப்படி என்றால் மனித இனமே முற்றாக அழிந்து போய்விடலாம் அல்லவா? மில்லியன் டொலர் வினா என்பார்களே அது இதுதானா? சரி போகட்டும் விடுங்கள். ஆனால் செயற்கையும் ஆண்களுக்கு எதிராகவே இயங்கப் போவதைப் பற்றிச் சற்றே சிந்தியுங்கள். முளைவகையாக்கல் எனும் செயற்கை முறையால் இனப்பெருக்கம் செய்யலாம் என கண்டு பிடித்த அன்றே ஆண்களுக்கும் சனியன் பிடித்து விட்டது எனலாம்.

ஒரு பெண் ஆணினது உதவி இல்லாமலேயே குழந்தை ஒன்றினுக்கு முளைவகையாக்கல் மூலம் தாயாகலாம் தானே. அவள் தனது முட்டை ஒன்றினை எடுத்து அதன் கருவினை அகற்றிய பின்னர் தனது உடற்கலத்தில் ஒன்றினை அதனுள்ளே செலுத்த அந்த முட்டை விருத்தியுற ஆரம்பிக்கும். உடனே அந்த முட்டையை தனது கருப்பையின் உள்ளே பதித்து கற்பதாரியாகி விடலாம். குழந்தை கருப்பையினுள்ளே விருத்தியுற்று முழுமையாக விருத்தியுற்றதும் பிறக்கிறது.

உடற்கலம் தாயினதாக இருந்தால் குழந்தை அப்படியே அச்சொட்டாகத் தாயின் பிரதியாக இருக்கும். மாறாக தாய் இன்னொரு பெண்ணிது உடற்கலத்தினைப் உபயோகித்திருந்தால் குழந்தை அந்தப் பெண்ணினது பிரதியாக அமையும். இப்பொழுது 10 மில்லியன் வருடங்களின் பின்னர் நடைபெறப்போவதைப் பற்றிச் சிந்திகலாம். அப்போ ஆண்கள் இல்லாமல் போகும் வாய்ப்பு உள்ளது என்றேன். முற்றாக மனித இனமே அழிந்து விடக் கூடிய நிலையும் ஏற்படலாம் என்றேன். ஆனால் இந்த முளைவகையாக்கல் பெண் இனத்தை அழிவிலிருந்து காப்பாற்றப் போவதைப் பார்த்தால் 10 மில்லியன் வருடங்களின் பின்னர் உலகமே அவர்கள் கையில் தான் என்பது புலனாகும்.

அப்போ அக்காலத்தில் குடும்ப வாழ்க்கை என்பதே இருக்க மாட்டாதா? இதனை எதிர் பார்த்துத்தானோ என்னவோ கனடா உட்பட்ட சில நாடுகளின் அரசுகள் ஒத்த இன திருமணத்துக்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளன.

இந்த நாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிப்பதைக் காணலாம். பிரான்ஸ் நாடும் இப்பட்டியலில் சேரவுள்ளது. அந்நாட்டின் அதிபர் அங்கீகாரம் கொடுக்க முன்வந்துள்ளார்.

ஆகவே விரைவில் உலகம் பூராவுமே ஒத்த இனத்திருமணத் தம்பதிகளைக் காண முடிறுயும். அவர்கள் குடும்பமாக வாழ்வார்கள். தேவையான பொழுது முளைவகையாக்கல் மூலம் பிள்ளைகளைப் பெற்று வம்சத்தை விருத்தி செய்வார்கள். முளைவகையாக்கலை இரண்டு வகையாக வகுத்துள்ளார்கள். மருத்துவத்துக்கான முளைவகையாக்கல் (Therapeutic cloning என்பது ஒரு வகை மற்றையது இனப்பெருக்கத்துக்கான முளைவகையாக்கல் (reproductive cloning). இதில் முன்னையதை பல அரசாங்கங்கள் அங்கீகரித்துள்ளன.

நோயியலில் வைத்தியத்துற்கு அது மிகவும் உபயோககரமானது என்பதால் குறிப்பிட்ட ஒரு அளவுடனே விருத்தியை நிறுத்தி விடவேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. இரண்டாவது, அரசாங்கங்களினால் விலங்கு இனப்பெருக்கத்துக்கு மாத்திரம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

மனித இனத்துக்கு மறுக்கப் பட்டுள்ளது. ஆனால் இது எத்தனை நளைக்கு என்பதே கேள்வி? மீண்டும் நோயியல் மருத்துவம் இதற்குத் துணை வரும். சுகதேகியான ஒரு ஆணினுடைய உடற்கலத்தினை உபயோகித்து முளைவகையாக்கல் செய்தால் சுகதேகியான பிள்ளை பிறக்கும் என்ற பிரச்சாரதின் காரணமாக இனப் பெருக்க முளைவகையாக்கலுக்கு அரசாங்கங்கள் அங்கீகாரம் கொடுக்கலாம்.கட்டாயமாக நடக்கும்.

இவை எல்லாம் இப்போ நடைபெற மாட்டாது ஆனால் எப்போ நடைபெறுகிறதோ அப்போ ஆண்களின் கதி. நினைக்கவே பயமாயுள்ளது.

**அப்போ நான் எங்கே?**

## 50 வது திருமண நாள் வாழ்த்து.



**திரு.திருமதி வி.கனகரட்ணம்**

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வத்தேகம- கண்டியை வதிவிடமாகவும் கொண்ட Dr.விஸ்வலிங்கம். கனகரட்ணம் தம்பதிகள் 29.01.2015 அன்று தங்கள் 50 வது திருமண நினைவு நாளை வத்தேகமவில் சிறப்பாகக் கொண்டாடினர். “நோயற்ற வாழ்வும் இணையற்ற அன்பும் என்றும் அமையவேண்டி” அன்பு மகன் கிரிதரன், மருமகள் ரோசினி பேத்தி அனிகா கிரிதரன். (கனடா) மகள் சிவகௌரி மருமகன் தவேந்திரன் (யேர்மனி-போகும்) மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் வாழ்த்தினார்கள்.

தகவல்: க.தவேந்திரன். Bochum Germany Tel: 0176 64 67 63 81

Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

Gopara Gnanam
Textiles & Jewellery Shop

தரமான ஆடைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
சிறந்த இடம்
இன்றே நாடுங்கள்....
Door to Door
பொதிச் சேவை
Germany-Sri-Lanka
35Kg 35€ - Colombo
35Kg 50€ பிற நகரங்கள்
Tel: 0231/5450028 Mob:01713306542
Rheinische Str. 81- 44137 Dortmund


உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.

Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal
rmb³
VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb³ ist Partner der Gothaer

# தமிழர் மரபுத் திங்கள் - மாசி

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்




தமிழர் பண்பாடு பற்றிய தேடல் இன்று தேவைப்படுகிறது. பல்லினப் பண்பாட்டுச் சூழலில் வாழும்போது ஒவ்வொரு இனத்தின் பண்பாடுபற்றியும் அறிய ஆவல் ஏற்படுவது இயல்பே. மேலும் தமிழரது இளந்தலைமுறையினர் தமது முன்னோரது பண்பாடுபற்றிய தேடலைச் செய்ய எண்ணும் போது தரவுநிலையிலே அவற்றை அறிய வழிசெய்ய வேண்டும். ஊடகங்கள் இப்பணியை முனைப்பாகவும் சிறப்பாகவும் செய்யும் வாய்ப்புப் பெற்றவையாகும்.

மனித வாழ்க்கையைத் திட்டமிடுவது பொருந்தாது என்பது பலருடைய கருத்து. ஆனால் தமிழர் வாழ்வியல் நடைமுறைகளை நோக்கும்போது இக்கருத்து தெளிவற்றது என்பதை நன்கு உணரமுடியும். காலம் பற்றிய கணிப்பு தமிழர் வாழ்வியல் நடைமுறைகளின் ஒரு வலுவான அடித்தளமாக விளங்கியுள்ளது. இயற்கையின் மாற்றம், விளைபொருள் நிலை என்னும் இரு விடயங்கள் தமிழர் பண்பாட்டில் இணைந்துள்ளன. அந்த வகையில் 'மாசித் திங்கள்' என்னும் காலப்பகுதி எவ்வாறு தமிழர் பண்பாட்டில் இணைந்துள்ளது என்பதை நோக்கலாம்.

மாசித்திங்கள் என்பதை நினைவில் நிறுத்த முன்னோர் கூறிய முதுமொழி ஒன்றுண்டு. 'மாசிப்பனி மூசிப்பெய்யும்'. பொதுமக்கள் வாய்மொழியாக இன்று வரையும் எல்லோருக்கும் அறிவுரையாகவே அமைந்துள்ளது. மேலைத்தேய நாடுகளில் மாசித்திங்களில் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும். அந்தக் காலத்தை ஓராண்டில் மக்கள் எதிர்கொள்ளும் மிகத் துன்பமான காலம் என்றே கூறலாம். அந்தப் பொழிவு இயற்கையின் கடமை. அதனை மனிதனால் கட்டுப் படுத்த முடியாது. எனவே அக்காலப்பகுதியை நினைவில் வைத்து மக்கள் தங்களுடைய செயற் பாடுகளை வகுத்துக்கொள்ள வேண்டும். தமிழர் வாழ்ந்த பிரதேசங்களிலும் மாசித்திங்கள் கடுங் குளிராக இருக்கும். பனி மழைத்துளி போலப் பெய்யும். வெளிப்புறமெங்கும் புகார் மூடியிருக்கும். எனவே மக்கள் நடமாட்டத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். எனவே மாசித்திங்களின் வருகைக்காக மக்கள் சில முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டியுள்ளது. பனிப்பொழிவின் துன்பத்தை நீக்க வெம்மையான சூழலைச் செயற்கையாக அமைக்க வேண்டியுள்ளது. இயற்கை யின் மாற்றததையும் மிக உன்னிப்பாக நோக்கியே செயற்படவேண்டியுள்ளது.

மாசித்திங்கள் பற்றிய தமிழிலக்கியப் பதிவுகளிலும் இக்கருத்து உள்வாங்கப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்து, 'மாசி நின்ற மாகூர் திங்கள்' என மாசித்திங்களைக் குறிப்பிட்டுள்ளது. ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழி என்னும் பாடல் தொகுப்பில் உள்ள முதலாவது பாடலில் இரண்டு திங்களின் பெயர்களும் நடைமுறைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

“தையொரு திங்களும் தரைவிளக்கி
தண்மண் டலமிட்டு மாசிமுன்னாள்
ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து
அழகினுக் கலங்கரித் தனங்கதேவா”

இங்கு தைத்திங்களில் தரையை விளக்கி கோலமிடும் மரபும் மாசித்திங்களில் தெருவில் வெண் மணல் பரவும் மரபும் அக்காலத்தில் நடைமுறையில் இருந்தமை பதிவுசெய்யப்பட்டுள்ளது. அடுத்த பாடலிலே மாசித்திங்களில் ஒரு சிறப்பான நடைமுறை பேணப்பட்டதை அறியமுடிகிறது.

“வெள்ளை நுண்மணற் கொண்டு தெருவணிந்து
வெள்வரைப் பதன்முன்னம் துறைபடிந்து
முள்ளு மிலாச் சுள்ளி யெரிமடுத்து
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா”

இப்பாடல் வரிகள் மாசித்திங்கள் வழிபாட்டு நடைமுறை ஒன்றினைத் தெளிவாக விளக்கியுள்ளன. தெருவை வெண்மணல் கொண்டு கவின்செய்வது மட்டுமன்றி விடிகாலையில் எழுந்து நீர்த்துறை யிலே நீராடி முள்ளில்லாத சுள்ளிகளைக் கொண்டு எரி ஓம்பி வழிபாடு நடந்துள்ளது. பெண்கள் இவ்வாறு எரியோம்பி நோன்பு நோற்ற செய்தியை ஆண்டாள் மட்டுமே பாடலில் பதிவுசெய்துள்ளாள் என்பது குறிப்பிடத்தக்கது.

தேவாரம் பாடிய இளம் அடியார் சம்பந்தர் பாடல் ஒன்றில் மாசித்திங்களின் இன்னொரு வழிபாட்டு நமைமுறை பற்றிய தகவல் பதிவாகியுள்ளது. அவர் பாடியுள்ள 'மட்டிட்ட புன்னை' என்னும் பதிகத்தில் பின்வரும் அடிகள் உள.

“மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்”

மடல்களால் செறிந்துள்ள தென்னைமரங்கள் நிறைந்த மயிலையம் பதியில் உறைகின்ற கபாலீஸ் வரன் கடலிலே சென்று திருநீராடல் செய்யும் விழா சிறப்பாக நடைபெற்றதைச் சம்பந்தர் பதிவு செய்துள்ளார். இந்த நீராடல் நடைமுறை இன்றும் தமிழர் வழிபாட்டு நடைமுறையாகப் பண்பாடாகப் பேணப்படுகிறது. மாசிக்கடலாடல் செய்வது ஒரு காலத்தின் நினைவைத் தொடரும் நிகழ்வாகும். இதே போன்று மாசித்திங்களில் வரும் சிவராத்திரிவிரதம் தமிழர்பண்பாட்டில் சிறப்புப் பெற்றுள்ளது. இந்த நோன்பு பற்றிய இலக்கியப் பதிவுகளும் புராண விளக்கங்களும் பல உள்ளன. பிரமனும் திருமாலும் யார் பெரியவர் என முரண்பட்டு நின்ற வேளையில் அவர்களுடைய முரண்பாட்டை நீக்கச் சிவன் அக்கினி மலைவடிவாகத் தோன்றினார். மாசித்திங்கள் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசித் திதியும் சோமவாரமும் திருவோண நட்சத்திரமும் கூடிய புண்ணிய தினத்தில் இரவு பதினான்கு நாளிகையளவில் இத்தோற்றம் நடந்தது.

அதன் அடியையும் முடியையும் தேடிப் பிரமனும் திருமாலும் சென்றபோதும் அவற்றைக் காணமுடியவில்லை. பலகாலமும் தேடியும் காணமுடியவில்லை. அவர்கள் களைத்து மீண்டபோது சிவன் அச்சோதியின் நடுவே லிங்கவடிவிலே தோன்றினார். அகந்தை நீங்கிய பிரமனும் திருமாலும் தரிசனம் பெற்ற இரவே சிவராத்திரியாகும். மனிதருக்கு இரவு ஒரு சாதாரண இரவு. உலக ஒடுக்க நிலையாகிய இரவு சிவனுக்குரிய இரவாகும். சிவராத்திரி மனிதருக்கு ஒரு நல்ல பயிற்சியையும் விளக்கத்தையும் தந்து நிற்கிறது. உணவையும் உறக்கத்தையும் ஒருநாள் ஒதுக்குவது மனத்தை அடக்க ஒரு பயிற்சியாகும். இதன் மூலம் ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் மனிதனுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். இந்த ஒரு நாள் நோன்பினால் மனிதன் மேலான நிலை அடையலாம்.

இளம் துறவுநிலைக்கு வழிகாட்டிய விவேகானந்தர் விழித்திரு, பசித்திரு, தனித்திரு எனக் கூறியுள்ளார். இந்த வழிகாட்டல் நோன்பு நோற்கும் பயற்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அறிவியலாக எல்லாவற்றுக்கும் விளக்கம் வேண்டிநிற்கும் இளைய தலைமுறைக்கு சிவராத்திரி நோன்பின் விளக்கம் மனதில் பதியவும் இது உதவும். ஆண்டில் மாசித் திங்களில் ஒரு நாள் சிவராத்திரியாகச் சிவவழிபாட்டிற்குரிய சிறப்புநாளாகத் தமிழர் பண்பாட்டில் இன்றும் நிலைத்துள்ளது.


தொடர்ச்சி 8 ம் பக்கம்...


Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சூடச்சூட சுவைகுன்றாது
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை
தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளனர்.
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

# காதல் பரிசாக ஜப்பானியக் காதல் பாடல்கள்!







## "அகவை நினைவுப் பரிசில்"

24.1. 2015 அன்று கனடா பெரிய சிவன் கோயில் மண்டபத்தில் ஜப்பானியக் காதல் பாடல்கள் என்னும் நூல் வெளியீடு நடைபெற்றது. இரண்டு ஊர்கள் ஒன்றாய்க் கூடி நின்றன. திருமலையும் தும்பளையும் சங்கமமாகிய ஒரு தம்பதியர் அந்த நிகழ்வின் பங்காளராக இருந்தனர்.

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஜப்பானியமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த ஜப்பானியக் காதல் பாடல்கள் என்னும் நூலை வெளியிட்டு அதனைத் தனது கணவர் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாசின் அகவை 75இன் இனிய காதல் பரிசாக வழங்கினார். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் புதிய பண்பாட்டின் தொடக்கமாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

பேராசிரியர் முனைவர் வண. ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் நிறைகுடமாக அமர்ந்து விழாவுக்கு தலைமை தாங்கி நடத்தியது அரங்கைப் பெருமைப்படுத்தியது. தமிழ்மொழி வாழ்த்தையும் கனடா நாட்டுப் பண்ணையும் வர்ணம் இசைக் கல்லூரி மாணவர்கள் இனிய இளங் குரலில் இசைக்க மண்டபம் விழாப் பொலிவுபெற்றது. வரவேற்புரையை வழங்கிய மனோன்மணி சண்முகதாஸ் தங்கள் அழைப்பை ஏற்று வந்த உறவினர்க்கும் ஊரவர்க்கும், நண்பர்களுக்கும் வரவேற்புடனான நன்றியினைக் கூறனார்.

நூல் வெளியீட்டுரையை மூத்த சான்றோர் கவிநாயகர் திரு. வி. கந்தவனம் நிகழ்த்தினார். காலம் வேண்டிநிற்கும் பணிகளில் இத்தகைய நூலாக்கமும் இன்றியமையாதது எனக் கூறினார். தமிழிலக்கிய அகப்பொருள் மரபும் ஜப்பானியக் காதல் பாடல்மரபும் ஒற்றுமையுடையதாயிருப்பதை நூல் தெளிவாகக் காட்டுவதையும் எடுத்துக் கூறினார்.நயப்புரை வழங்கிய திரு. பொ. அருந்தவநாதன் சங்க அகப் பாடல்களுக்கும் ஜப்பானிய அகப் பாடல்களுக்கும் அடிப்படையாக அமைந்த பொருளிலக்கண மரபை விளக்கி நூலை நயந்தார்.





சிறப்பு நிகழ்வாக மரபுரிமைத் திங்கள் நினைவுப் பரிசு மூவருக்கு வழங்கப்பட்டது. தமிழ்ப் பணி செய்யும் இளைய தலைமுறையினரான தாய்வீடு ஆசிரியர் திலீப்குமார், எழுத்தாளர் சாம்பசிவம் அகில், ஊடக இயக்குநர் அ. நவஜீவன் என்னும் மூவரும் பரிசு பெற்றனர். பரிசாக மனோன்மணி எழுதிய 21 நூல்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வும் கனடா நாட்டின் மரபுரிமைத் திங்களின் தனித்துவமான பெருமையை எல்லோருக்கும் உணர்த்தியது.

7ம் பக்கத் தொடர்ச்சி.

## தமிழர் மரபுத் திங்கள் - மாசி

சிவராத்திரி நோன்பின் பலன் பாவநீக்கமும் நாட்டுச் செழிப்பும் என முன்னோர் விளக்கியுள்ளனர். செய்த தவறுகளை உணர ஒரு நாள் தனிமையாக இருந்து ஆரஅமர எண்ணிப் பார்க்கும்போது அவற்றிற்கு மன்னிப்புக் கேட்க வாய்ப்பு ஏற்படும். அந்த மனப்பக்குவம் ஒரு நாடு தழுவிய உணர்வை ஏற்படுத்தும். அதனால் நாட்டின் வளம் பேணும் செயற்பாடுகள் தொடரும்.

இன்று மேலை நாடுகளில் ஒவ்வொரு சிறப்பு நடைமுறைக்கும் சிறப்பாக ஒரு திங்களை ஒதுக்கியுள்ளனர். அந்த வகையில் பனிப்பொழிவு அதிகமான மாசித் திங்களில் 'காதலர் தினம்' என ஒரு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நாள் இளையோர் செயற்பாட்டுக்காகவே உருவாக்கப்பட் டுள்ளது. 'காதலர் தினம்' Valantine Day என வழங்கப்படுகிறது. அன்றைய நாளில் பரிசுகள் பரிமாறும் நடைமுறையும் தொடர்கிறது. உலகம் முழுவதும் 'காதலர் தினம்' இன்று கொண்டாடப் படுகிறது. இந்த நாள் இளைய தலைமுறையைத் தொடர்பாடல் நிலையில் இணைக்கும் ஒரு செயற்பாட்டிற்கும் வாய்ப்பு அளித்துள்ளது. இணையத்தளத்தில் கவிதைகளும் குறுஞ்செய்திகளும் வாழ்த்துகளும் பரிமாறப்படுகின்றன. இதனால் மேலைத்தேயப் பண்பாட்டில் 'காதலர் தினம்' ஒரு பரபரப்பான உணர்வையே எல்லோரிடமும் பரப்பியுள்ளது. எனினும் இப்பண்பாட்டிலும் ஓர் உலகமய மாதல் கருத்தும் பேணப்படுகிறது. உலகம் முழுவதும் உள்ள இளையவர்கள் தமது பருவநிலையை உணர ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால் அதை உணர்ந்து செயற்படும் பழக்கம் இன்னமும் வழக்கமாகவில்லை.

தமிழர் பண்பாட்டில் மாசித்திங்கள் விளைபொருள் பேணும் ஒரு திங்களாகும். பனை வளம் பெற்றநாடுகளில் பனையின் ஓராண்டு உணவுப் பொருட்களான ஒடியலும் புளுக்கொடியலும் பதனிடப் படும் திங்கள் மாசியாகும். அதே போல ஓராண்டு எரிபொருளாகப் பயன்படும் ஊமலும் மாசித் திங்களிலே பாதுகாத்து வைக்கப்படுகிறது. இந்த ஊமல் புகையிலையை வாடவைக்கும் எரிகுடில் களின் எர்பொருளாகவும் பயன்படுத்தப்படும். பனை பற்றிய பயன்பாட்டில் மாசித்திங்களில் பின்வரும் சொற்கள் வழக்கிலுள்ளன: ஒடியல், கிழங்கு, புளுக்கொடியல், நெட்டி, தோகை, பீலி, தும்பு, ஊமல், பூரான், ஒடியல்மா, ஒடியற்பிட்டு, ஒடியற்கூழ், பனங்கிழங்குத் துவையல், சீவுபுளுக்கொடியல், ஒடியல் முறி. இவை தமிழ்ச் சொற்களாக இன்று புலம்பெயர் நாடுகளிலும் அறியப்பட்டுள்ளன. மாசித் திங்களும் இயற்கையின் கொடையை வழங்கும் திங்களாக நமது முன்னோர் வாழ்வில் சிறப்புற்று விளங்குகிறது. ஒரு திங்கள் மரபுத்திங்களாக மனித வாழ்வியல் நடைமுறைகளில் சிறப்பானவற்றை கொண்டிருப்பதை நமது இளந்தலைமுறையினர் அறியவேண்டும். அதனை மனதில் பதிய வைக்க வேண்டும். 'தையும் மாசியும் வைகறைத் துறங்கு'.




ShaRun Saree

all indian traditional dresses

திருமணப் பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள்
இன்னும் பஞ்சாபிகள் அனைத்தும் நீங்கள்
விரும்பும் ரகத்தில் எம்மிடம்

தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்!

30 வீதம் முதல் 50 வீதம் வரை
விலைக்கழிவில்....

02137/92 96 836
0178-35 79 015
0178-35 79 002

August-Macke.Str.79a
41470 Neuss.





# டீசலின் Diesel இன் விலை உயர்வு தாழ்வும் மசகு எண்ணெய் Crude oil விலையும்!





**அறிமுகம்:**

இன்றைய உலகின் அதி முக்கியமான அத்தியாவசியமான பொருளாகவும்,உலக பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு பொருளாகவும் ஏரிபொருள் (Oil) இருக்கின்றது.
ஓயிலின் விலை உலகச்சந்தையில் 2007 ஆண்டு மாசி மாதம் பரல் (barrel) 50 டொலராகவும் இருந்து 2008 ஆம் ஆண்டு ஆடி மாதத்திற்கிடையில் அதாவது 18 மாத இடைவெளியில் 150 டொலராக அதிகரித்தது. அதன் பின்னர் அடுத்த ஆறுமாத காலத்தில் இதன் விலையானது 150 டொலரில் இருந்து 35 டொலராக குறைவடைந்தது. இவ்வாறு ஆறு வருடத்திற்கு முன்னர் ஏற்பட்ட நிலமையைத்தான் நாம் இப்போது சந்திக்கின்றோம். அதாவது 2014 ஆடிமாதம் 108 டொலராக இருந்த ஓயிலின் விலை இன்று அதாவது ஆறுமாதகாலத்திற்குள் 45 டொலராகக் குறைவடைந்துள்ளது.

## Duty / Tax 67 %




ஒரு லீட்டர் டீசலில் விலை எவ்வாறு மதிப்பிடப்படுகின்றது என்பதனை கீழே உள்ள பெற்றோல் பம் படம் தெளிவாக அறிவிக்கின்றது ஒரு லீட்டரின் விலை 113 p ஆக இருந்தாலும் அதில் 67% வரியாகவும் (tax) ஆகவும் அறவிடப்படுவதை நீங்கள் அவதானிக்கமுடியும். இதில் retail கம்பனிகளான BP Shell என்பன 5 வீதத்திற்கும் குறைவான பகுதியையே தங்கள் இலாபமாக எடுக்கின்றார்கள்.

## உலக நாடுகளில் ஒரு லீட்டர் டீசலின் விலைகள்

இங்கிலாந்தில் ஒரு லீட்டர் ஓயிலின் விலை தற்போது 113 p ஆக இருந்தாலும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது மிக விலை கூடியதாகக் காணப்படுகின்றது. இதற்கு காரணம் 67 வீதம் Duty ம் Tax ம் ஆகும்.
மற்றய உலகநாடுகளில் **(diesel)** டீசலின் விலை:

Qatar 17 p, Malaysia 36p,USA 54p,Newzeland 55p,India 56p,Srilanka 56p,Australiya73 p, Polan79p, Spain 81p,Germany 86p, Turkey 99p, U.K 113p CANADA 99p

## எதிர்காலத்தில் diesel டீசலின் விலை?

டீசல் பெற்றோல் (diesel petrol) என்பவற்றின் விலைகள் crude oil விலையில் தங்கியிருப்பதால் crude oil க்கு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதனைப் சற்றுப் பார்ப்போம்.


இங்கே உள்ள crude oil வரைபடத்தைப் பார்த்தால் அதில் பச்சை நிறத்தால் வரையப்பட்ட கோடு கடந்த 15 வருடத்திற்கான support கோடாகக்






Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com

கருதப்படுகின்றது. எனவே தற்போது உள்ள விலையான 45 டொலர் இற்குகீழ் இதன் விலை குறையாவிட்டால், crude விலை மீண்டும் அதிவிரைவில் 2007-2008 ம் ஆண்டில் நடந்ததுபோல் 100 டொலர்வரை அதிகரிக்க வாய்ப்புக்கள் இருக்கின்றது. 45 டொலர் விலைக்கு கீழ் குறைவடைந்து விலை மேலும் அதிகமாக கீழே குறைவடைந்தாலும் 30 டொலருக்கு கீழே குறைவடைவதற்கான சாத்தியக்கூறுகள் மிகக்குறைவாகவே இருக்கின்றது.




## ஓயில் (Oil) விலை உயர்வு / தாழ்வுக்கான காரணம் என்ன?

ஓயில் இன் விலை ஏற்றத்தாள்வு இதனுடைய demand/Supply என்பதனைப் பொறுத்தே மாற்றம் அடைகின்றது. demand என்பது supply ஐ விட அதிகரிக்கம்போது விலை அதிகரித்தும்,supply demand ஐ விடக் குறையுமபோது குறைவடைந்தும் காணப்படும். 2009 ம் ஆண்டு முதல் 2014 ம் ஆண்டிற்கும் இடையிலான விலை அதிகரிப்புற்கு -BRIC நாடுகள் என்று அழைக்கப்படும் BRAZIL RUSSIA, INDIA,CHINA, போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியே முக்கிய காரணம் என்று கூறலாம்.
பொருளாதார வளர்ச்சியுடன் Commodity என்று அழைக்கப்படும் -Hedge Fund- என்று அழைக்கப்படும் Speculators உடைய வியாபாரமும் Oil ஓயில் விலை ஏற்றத்திற்கு முக்கிய காரணம் என்று கூறலாம். அதாவது எதிர்காலத்தில் ஓயிலின் விலை கூடும் என்று இவர்கள் கருதினால் இன்று Futures market- இல் oil ஐ கொள்வனவு செய்து பின்னர் எதிர்காலத்தில் விலை கூடும்பொழுது விற்பனை செய்து இவர்கள் இலாபம் அடைந்துகொள்வார்கள். கடந்த 6 மாத கால விலை குறைவிற்கும் இவர்கள் செயற்பாடே காரணம் என்று கூறலாம். நீங்கள் hedge fund traders போல் எவ்வாறு oil ஐ வாங்கி விற்பனை செய்வது என்பதனை அறிய விரும்பின் எனது மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும்.

**முழவுரை (conclusion)**

crude oil இன் விலை தற்போது 45 டொலராக இருந்தாலும், எதிர்காலத்தில் இதன் விலை அதிகரிப்பிற்கே அதிகவாய்ப்புக்கள் உண்டு. அதாவது oil ஓயில் விலை 45 டொலரில் இருந்து 100 டொலர் அதிகரித்தால் இந்த அதிகரிப்பு (diesel) டீசல் இன் விலையை 1 லீட்டருக்கு 150 p ற்கு மேலாக அதிகரிக்கும். Oil இன் விலை இவ்வாறு எதிர்காலத்தில் அதிகரித்தால் இந்த அதிகரிப்பு பணவீக்கத்தை (inflation) அதிகரித்து இங்கிலாந்து நாட்டு வட்டி வீதத்தையும் அதிகரிக்க செய்யும் வாய்ப்பு இருக்கின்றது.



T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

# மனித வாடையே பிடிக்காத இனமாக மாறிக்கொண்டு இருக்கிறது மனிதஇனம்!






இன்று முகப்புத்தகம் இணையத்தளங்களை மிஞ்சிவிட்டது. செய்தி முதல் கிண்டல்வரை அரங்கேறுகின்றது. பத்திரிகைகள் அச்சுக்குப்போய் வருவதற்குள் கூட்டாச்சிகளே கலைக்கப்பட்டு விடுகின்றன.
அன்று செய்திகள் வாசிப்பது இராஜகுரு சேனாதிபதி கனகரட்ணம் என்று சொன்னால் தேனீர் கடையில் கூட சத்தம் நின்றுவிடும்.
அப்படி செய்தி கேட்பார்கள். இன்று செய்திவாசிப்பவர்கள்தான் செய்தியே கேட்க வேண்டிய நிலையில்... நேயர்கள் ஆளுக்கு ஆள் கைத் தொலைபேசியும் WhatsApp ம் தொலைக்காட்சி வானொலி எல்லாம் நடத்திக் கொண்டு இருக்கின்றார்கள்.
அவ்வளவிற்கு தொடர்புச்சாதனம் வளர்ச்சி கண்டுவிட்டது. முன்பு திரைப்படங்களில் சண்டை முடியும்போது நாகேஷ் பொலீசை கூட்டிக்கொண்டு ஒருகாலை ஜீப்புக்கு வெளியே நீட்டியபடி வருவார்.



## காதலிக்க நேரமில்லை!

இது எல்லோருக்கும் முன்பு தெரியும். மற்றது வில்லன் கட்டாயமாக அடிவாங்குவான் என்பதும் அப்போ தெதரியும். அதுபோல இப்போ செய்தி வாசிப்பதை கேட்கும்போது பக்கத்தில் நிற்பவர் கொமன் அடிப்பார்.
இது நடந்து மூன்றுநாளாச்சே. பார் இப்ப பார் இவர் இராஜினாமா செய்திட்டார் என்று சொல்வார். இப்படி அவர் சொல்லி வாய் மூடமுன் அங்கு அச்செய்தி நேயர் வாயில் வந்த செய்தியாகவே வெளிவரும்.

பத்திரிகையை புரட்டிப்போட்டு அதற்கும் ஒரு நக்கல் இது பழைய பேப்பரோ அல்லது, பழைய சஞ்சிகையோ என்ன எல்லாம் எனக்கு தெரிஞ்சதாக இருக்கு.

நான் நேற்றுதான் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தனான் அங்கு இப்படி ஒன்று மில்லை. இப்படியாக செய்திகள் சொல்வார்கள். மத்தியில்தான் பத்திரிகைள் சஞ்சிகைகள் ஏன் வானொலிகள் தொலைக்காட்சிகள் யாவும் காசைக்கொட்டி எதிர்நீச்சல் அடித்துக்கொண்டு முன்னேறுகின்றார்கள்.

இங்கு பாருங்கள் விஜயகாந்தை போட்டு கலாய்ப்பதை..... ஓட்டப் பந்தயம் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் விஜயகாந்த் கலந்து கொள்கிறார். போட்டியை நடத்துபவர் 1, 2, 3 என்று கூறியதும் விஜயகாந்தை தவிர மற்றவர்கள் ஓடிவிட்டனர். நீங்கள் ஏன் ஓடவில்லை என்று அவரிடம் கேட்டதற்கு என் நம்பர் 4 என்றார்.
வங்கிக் கடன் வங்கி மேனேஜர்: சார், நாங்கள் உங்களுக்கு இன்டரஸ்ட்(வட்டி) இல்லாமல் கடன் அளிக்கிறோம். விஜயகாந்த்: உங்களுக்கே இன்டரஸ்ட் இல்லை என்றால் எனக்கு இந்த கடன் வேண்டாம்.



தங்கப் பதக்கம் விஜயகாந்த் செய்தித் தாளை படிக்கிறார், நீளம் தாண்டுதலில் இந்திய வீரர் தங்கப் பதக்கத்தை தவறவிட்டார். விஜயகாந்த் கமெண்ட்: முட்டாள், தங்கப் பதக்கத்தை அணிந்து கொண்டு ஏன் தாண்ட வேண்டும்.

பேஸ் புக் எல்லாம் இன்று எழுத்து மயம்தான். மௌசை ஒருக்க அமத்தி விட்டால் போதும் லைக் விழும்.

ஆளை ஆள் தெரியாது. தற்சமயம் நேரில் கண்டாலும் கதைக்க நேரம் இல்லை. வேறு யாருக்கோ லைக் அமத்தும் பணியில் அவர் இருப்பார்.

பல மாதங்களாக பல வருடங்களாக காணாத நண்பருக்கு மசேச் போட்டுபக்கொண்டு இருப்பார்.
அவரைச் சந்தித்து விட்டால் கையைக்கொடுத்துவிட்டு மறுகையால் மற்வருக்கு லைக் அமத்திக்கொண்டு இருப்பார். ஒரு அறையில் நத்தார் லீவுக்கு வந்த பிள்ளைகள் ஆளுக்கு ஆள் ஒரு ஐபாட்டுன் தம்பாட்டுக்கு வேறு யாருடனும் எழுதிக்கொண்டு இருப்பார்கள்.
அம்மா நாடகம் பார்த்துகொண்டு இருப்பா அப்பா இலங்கைச்செய்தி எல்லாத்தளத்திலும் எடுத்து ஆய்வு நடத்திகொண்டு இருப்பார். பக்கத்து வீட்டார் அவர்களுக்கு என்ன பிள்ளைகள் எல்லாம் வந்து இருக்கிறார்கள். குடும்பம் ஒன்றாகவே இருக்கின்றது.என்பார்கள். மனித வாடையே பிடிக்காத மனித இனமாக மாறிக்கொண்டு இருக்கிறது மனிதகுலம்.






# மீன் சாப்பிடாத மருத்துவர்களும் கூட மீன் சாப்பிடுங்கள் என்று தங்கள் நோயாளிகளுக்கு அறிவுறுத்துகிறார்கள்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்



## "மீன் சாப்பிடுங்கள்"

"மீன் சாப்பிடுங்கள்" என்று சொல்லாத மருத்துவர்களே இன்று இல்லை எனலாம்.மீன் சாப்பிடாத மருத்துவர்களும் கூட மீன் சாப்பிடுங்கள் என்று தங்கள் நோயாளிகளுக்கு அறிவுறுத்துகிறார்கள். அதுவும் முக்கியமாக கொலஸ்ட்ரோல், அதீத எடை, இருதய நோய்கள் போன்ற பிரச்சனை உள்ளவர்களை அதிகம்ஊக்குவிக்கிறார்கள்.

மீன் உட்கொள்வது எல்லோருக்கும் நல்லது. இருந்தபோதும் கர்ப்பிணிப்பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும் மீன் சாப்பிடுவதில் சற்று அவதானமாகஇருக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல் சில மேலை நாடுகளில் இருந்தது.

இதற்குக் காரணம் மீன்களில் இருக்கக் கூடிய சிறியளவு பாதரசம் என்றநகனிமமானது கரு உருவாகும் பருவத்திலும் முலைப்பால் அருந்தும் குழந்தைகளிலும் சில பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என அஞ்சப்பட்டதாலேயே ஆகும்.

இருந்தபோதும் அண்மையில் செய்யப்பட்ட ஆய்வுகள் இதை மறுதலிக்கின்றன.கரு உருவாகும் தருணத்திலும் முலைப்பால் அருந்தும் காலங்களிலும்,குழந்தைகள் வளரும் பருவத்திலும் மீனைக் குறைவாக உட்கொள்வதால் அவர்களின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான பல போசனைப் பொருட்களை இழக்க நேர்கிறது. இதனால் அவற்றின் வளர்ச்சி பாதிப்படைவதுடன் பொதுவான தேக ஆரோக்கியமும் பாதிப்பிற்கு ஆளாகும் என்பது தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவின் மருந்துகளுக்கான நிர்வாக சபையானது பாலூட்டும் தாய்மார்களும், கர்ப்பிணிகளும் வாராந்தம் உட்கொள்ளும் மீன் உணவின் அளவை அதிகரிக்க வேண்டும் என்கிறது. வாராந்தம் 8 முதல் 10 அவுன்சுகளுக்குக் குறையாத அளவு மீன் சாப்பிட வேண்டும் என்கிறது. இது கருவினதும் குழந்தைகளினதும் உடல் வளர்ச்சிக்கும் உடலுறுப்புகளின் உறுதிக்கும் அவசியம் எனச் சிபாரசு செய்துள்ளது. ஏனெனில்

மீனிலுள்ள புரதம் உயர்தரமானது.ஏனைய பல போசணைப் பொருட்களும் மீனில் உண்டு. ஆரோக்கியத்திற்கு கேடான நிறைந்த கொழுப்பு (saturated fat) மிகக் குறைந்த அளவே உண்டு. ஆனால் மிக ஆரோக்கியமான நல்ல கொழுப்பு ஆன ஒமேகா 3 கொழுப்பு அமிலம் அதிகம் உண்டு.

### மீன்களில் பாதரசம்

இருந்த போதும் மீன்களில் பாதரசம் ஆனது methyl mercury என்ற இரசாயன வடிவத்தில் இருக்கிறது. இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகளாவன மீனிலுள்ள ஏனைய போசணைப் பொருட்களால் கிட்டக்கூடிய நன்மைகளோடு ஒப்பிடும்போது மிகக் குறைவானது என ஆய்வுகள் கூறுகின்றன.

எல்லா மீன்களிலும் பாதரசம் சிறிதளவேனும் இருக்கின்ற போதும் சில மீன்களில்அதன் செறிவு அதிகம் உண்டு. சுறா, வால்மீன், கிங்க் மேகரல், மெக்சிகோவளைவில் பிடிக்கப்படும் ரைல் மீன் (tile fish) ஆகியவற்றில் அதிகம் உண்டுஎன்பதால் அவற்றை கர்ப்பிணிகளும் பாலுட்டும் தாய்மார்களும் தவிர்ப்பது நல்லதுஎன அமெரிக்காவின் FDC அறிவுறுத்துகிறது.



அத்துடன் அல்பர்கோர் ரியூனா(albacore tuna) உட்கொள்வதாயின் அதனை வாரத்தில் 6 அவுன்சிற்கு அதிகம் ஆகாதவாறு உட்கொள்வதில் தவறில்லை.

மிகக் குறைந்தளவு பாதரசத்தைக் கொண்ட மீன்களாக shrimp, pollock, salmon, canned light tuna, tilapia, catfishand cod ஆகியவற்றைச் சொல்கிறார்கள். இவற்றை அதிகம் உட்கொள்ளலாம்.

ஆறு, குளம், ஏரி போன்றவற்றிலிருந்து பிடிக்கப்படும் நன்னீர் மீன்களைப் பொறுத்த வரையில் அவற்றில் உள்ள பாதரசத்தின் அளவானது இடத்திற்கு இடம் மாறுபடக் கூடும்.

அவற்றின் பாதரச அளவு பற்றிய தரவுகளை அப்பிரதேச அரசுகள் வெளியிடாதவிடத்து வளர்ந்தவர்கள் வாராந்தம் 6 அவுன்ஸ்சிற்கு மேற்படாமலும் குழந்தைகள் வாராந்தம் 1/2 அவுன்ஸ்சிற்கு மேற்படாமலும் உட்கொள்ள வேண்டும் என அமெரிக்க மருத்துவ சபைகள் சொல்கின்றன.

இலங்கைக்கென தனியான ஆலோசனைகள் இருப்பதாகத்தெரியவில்லை.

மீன்களில் பல வகைகள் உண்டு.

### எண்ணெய்த் தன்மை மீன்கள்

சல்மன், வார்டின், மேகரல் trout and herring போன்றவை எண்ணெய் தன்மையான மீன்களாகும். இவற்றில் இருதயத்திற்கு மிகவும் நல்லதான omega-3 fatty acids என்ற கொழுப்பு கூடியளவு உண்டு. குழந்தைகளின் நரம்பு மண்டல வளர்ச்சிக்கும் ஒமேகா கொழுப்பு பெரிதும் உதவுவதால் கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் அவசியமானது. அத்துடன் ஒமேகா 3 கொழுப்பு அமிலமானது உயர் இரத்தஅழுத்தத்தைக் குறைக்கும், குருதிக் குழாய்களில் (நாடிகள் artery) கொழுப்புபடிவதைத் தடுக்கும் என்பதால் மாரடைப்பு அஞ்சைனா பக்கவாதம் போன்ற குருதிக் குழாய் நோய்களை ஏற்படுவதைக் குறைக்கும் என்பது நன்கு தெரிந்ததே.

இவற்றிற்கு அப்பால், மூப்படையும்போது ஏற்படும் பார்வைக் குறைபாடு நோய் ஏற்படாமல் தடுக்கும். மூப்படையும்போது ஏற்படும் முதுமை மறதிநோய் (Dementia) ஏற்படுவதைத் தடுக்கும், புரஸ்ரேட் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பைக் குறைக்கும் என்றெல்லாம் சில ஆய்வுகள் கூறுகின்றன. ஆயினும் இவற்றை உறுதிப்படுத்த மேலும் தெளிவான ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

### பலவகை மீன்களை

இவ்வாறான பல்திறப் பயன்பாடு கருதி ஒமேகா 3 மீன் எண்ணெயை மாத்திரைகளாக அடைத்து விற்பனை செய்கிறார்கள். அமோகமாக விற்பனை ஆகிறது. ஆயினும் இதனை விட இயற்கையாகவே மீனிலிருந்து பெறும்போது பலன் அதிகமாகக் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை.

எண்ணெய் தன்மையான மீன்களில் விற்றமின் டி (VitaminD) அதிகம் உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது. whitebait, pilchards, மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட சல்மன், சாடின் போன்றவற்றில் உள்ள எலும்புகளும் உட்கொள்ளப்படுவதால் அவற்றிலுள்ள கல்சியம் பொஸ்பரஸ் போன்றவை எமக்கு அதிகளவு கிடைக்கின்றன. இவை உறுதியான எலும்பைப் பேண எமக்கு உதவும்.

தொடர்ச்சி 12ம் பக்கம்.




உங்கள் அனைத்து இல்லக் கொண்டாட்டங்களுக்கும் 100 இருக்கைகளுடன் நீங்கள் விரும்பும் சோடனைகளுடன்

all you can eat Buffet daily from 11.00-22.00 only 6,-€

Om Namaste
Indisches Restaurant

every Sunday from 17.00-22.00
Vegetarian
all you can eat Buffet
10 vegetarain Currys
Rice,Salad,Soup,Samosa,
Desserts and and...
only 9,90 €

உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்திய உணவுகளை சுவையாக தயாரித்து அனைத்தையும் இந்நாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.

Offnungszeit: 11.00 -24.00

www.om-namaste@.com
e.mail: om-namaste@.de
facebook:om namaste

-கொத்துரொட்டி
-புரியாணி
-மசாலாத்தோசை
-பேப்பர் தோசை
-சிற்றூண்டிகள்
-Original Naan Pizza
இன்னும் இன்னும் இன்னும் ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

உடன் தொடர்பு கொள்ளங்கள்!
Brückstr 33
44135 Dortmund
0231 33 48 52 82



கமல்– ஸ்ரீதேவி



மூன்று முடிச்சு ஞாபகம் வருதா!



அக்ஷரா சரிகா [தாய்]









# அக்ஷரா ஹாசன் தனுஷ் அமிதாப்பச்சன் நடித்த ஷமிதாப் கிந்திப்பட இசை வெளியீடு!

### ரஜினி கமல் ஸ்ரீதேவி அமிதாப் சரிகா என பல நட்சத்திரங்கள் மீண்டும் ஜொலித்தன

அக்ஷரா ஹாசன் ரத்தத்திலேயே நடிப்பு ஊறியுள்ளதாக புகழாரம் சூட்டினார் நடிகர் தனுஷ். ஆர்.பாலகிருஷ்ணன் என்ற பால்கி இயக்கத்தில் பிப்ரவரி 6ம்தேதி வெளியாக உள்ளது ஷமிதாப் என்ற ஹிந்தி திரைப்படம். இதில் அமிதாப்பச்சன், தனுஷ், கமல்ஹாசன் மகள் அக்ஷரா ஹாசன் போன்றோர் நடித்துள்ளனர். இசைஞானி இளையராஜா இசையமைத்துள்ளார். பாடல்கள் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

படம் குறித்து தனுஷ் கூறியதாவது: ஷமிதாப் திரைப்படத்தில் மிகவும் சவாலான வேடம், அக்ஷராவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. முதல் படம் என்ற போதிலும், அக்ஷரா தனது கதாப்பாத் திரத்தில் அருமையாக நடித்துள்ளார். ஏனெனில் நடிப்பு அக்ஷராவின் ரத்தத்திலேயே கலந் துள்ளது. எந்த ஒரு காட்சியிலும் அக்ஷரா நடிக்க சிரமப்பட்டதை நான் பார்க்கவேயில்லை. அமிதாப்பச்சன் போன்ற ஜாம்பவானுடன் நடிக்க வாய்ப்பு கிடைக்கும் என்று நான் என்றுமே நினைத்ததில்லை. அவருடன் நடிப்பதே, சிறப்பான அனுபவம். இவ்வாறு தனுஷ் தெரிவித்தார்.

ஷமிதாப் படத்தின் இசை வெளியீட்டு விழா 23.01.2014 மும்பையில் பிரமாண்டமாக நடந்து முடிந்தது. இதில் கலந்துகொண்ட ரஜினி பேசியதாவது, “ஆரம்ப நாட்களில் நான் இளையராஜாவை ராஜா சார் என்று தான் அழைப்பேன். பின்னர் அவரது தோற்றம் மாறியது. அவரது பேரும் புகழும் உயர தொடங்கியது. அதன்பின் நான் அவரை ராஜா சுவாமி என்று அழைக்க தொடங்கினேன்” என்றார்.

பின்னர் பேசிய கமல், ” 'ஹே ராம்' படத்தில் முதலில் வேறொரு இசையமைப்பாளரைதான் நான் புக் செய்திருந்தேன். அவரது இசையில் அனைத்து பாடல்களையும் படமாக்கிவிட்டேன். ஆனால் அதில் எதிலும் எனக்கு திருப்தியில்லை. இறுதியாக இளையராஜாவிடம் சென்று நின்றேன். அவர் சம்மதம் சொன்னால் அனைத்து பாடல் களையும் மீண்டும் படமாக்க முடிவு செய்தி ருந்தேன். ஆனால் நான் படமாக்கிய பாடல்களை பார்த்து அதன் வாய் அசைப்பிற்கேற்ப அனைத்து பாடல்களையும் புதிதாக அவர் கம்போஸ் செய்து கொடுத்தார்” என பல சுவாரஸ்ய தகவல்களை வெளியிட்டார். ரஜினிகாந்த், கமல் ஹாசன், அமிதாப்பச்சன், ஐஸ்வர்யாராய், கமலின் முன்னாள் மனைவியும் அக்ஷராவின் தாயாருமான சரிகா தனுஷ் போன்ற பல முன்னணி நட்சத்திரங்கள் கலந்துகொண்டனர். சரிகாவைக் கண்டதும் கமல் எழுந்து சென்று சுகம் விசாரித்தார். ஒருவரை ஒருவர் கண்டதில் மகிழ்வு தெரிந்து.

---

11ம் பக்கத் தொடர்ச்சி

# “மீன் சாப்பிடுங்கள்”



### வெண்மையான மீன்கள்

வெண்மையான மீன்களில் Cod, haddock, plaice, pollack, coley, dab, flounder, red mullet, gurnard and tilapia போன்றவை அடங்கும். இவற்றில் கொழுப்புத்தன்மை மிகக் குறைவாகும். எனவே கொழுப்பு குறைந்த உணவு உள்ள உணவுகளை உண்ண வேண்டிய தேவை உள்ளவர்கள் இறைச்சிக்குப் பதிலாக இத்தகைய வெண்மை யான மீன்களை அதிகம் பயன்படுத்தலாம். இவற்றிலும் omega-3 கயவவல யஉனைள என்ற கொழுப்பு இருக்கிறது என்ற போதிலும் கொழுப்புள்ள மீன்களில் இருக்கின்ற அளவில் கிடைக்காது. குறைவாகவே கிடைக்கும்.

### கோதுள்ள கடலுணவுகள்

இறால், நண்டு, கடல் நத்தை (Cod, haddock, plaice, pollack, coley, dab, flounder, red mullet, gurnard and tilapia) போன்ற பலவும் அடங்கும். இவற்றில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் ஓரளவு கிடைக்கின்ற போதும் பொதுவாகக் கொழுப்பு குறைவாகவே இருக்கிறது. ஆனால் செலினியம், துத்தநாகம், அயோடின், தாமிரம் போன்ற அதிகம் உண்டு. எனவே உடல் நலத்திற்கு ஏற்றது.

இருந்தபோதும் இவற்றில் பக்றீரியா, வைரஸ் போன்ற கிருமிகள் இருக்கக் கூடும்.நன்கு கொதிக்கவைத்து சமைக்காவிடில் கிருமி தொற்றும் வாய்ப்பு அதிகம் (FoodPoisoning) என்பதும் உண்மை. அத்துடன் சில biotoxins இருப்பதுண்டு. இதன்காரணமாக தலைவலி, தலைச்சுற்று, தள்ளாட்டம், வாந்தி, வயிற்றோட்டம், வயிற்று வலி போன்றைவை தோன்றலாம். எனவே அவற்றைச் சமைக்கும்போதும்,சமைத்த பின் சேமிக்கும் போதும் அதிக அவதானம் தேவை.

மீன் மற்றும் நண்டு இறால் போன்ற கோது மீன் (shellfish) உணவுகளுக்கும்ஒவ்வாமை ஏற்பது அதிகம் என்பதை மறக்கக் கூடாது. கடி, சொறிவு, வயிற்றுமுறுக்கு போன்ற சாதாரண அறிகுறிகள் ஏற்படலாம். ஆயினும் தலைச்சுற்றுமயக்கம் போன்ற பல ஆபத்தான விளைவுகளும் ஏற்பட லாம்.

### கடலுணவு அலர்ஜி பற்றி வாசிக்க

ஒரு வகை மீனுக்கு ஒவ்வாமை இருந்தால் வேறு மீன்களுக்கும் இருக்கும்சாத்தியம் அதிகம். எனவே அவதானம் அவசியம். நாக்கிற்கு அடிமையாகி ஒரேவிதமான மீன்களை உண்பது நல்லதல்ல. பல்வேறு விதமான மீன்களை மாற்றிமாற்றி உண்ண வேண்டும் அல்லது கலந்து உண்ண வேண்டும். இதன் மூலம்மீன்களிலுள்ள பல்வேறு விதமான போசணைப் பொருட்களைப் பெற முடியும்.அத்துடன் உடல் நலத்திற்கு ஊறு அளிக்கக் கூடிய பாதரசம் போன்றவற்றின் பாதிப்பைக் குறைக்கவும் முடியும்.

மீன்களைப் பொரித்துச் சாப்பிடுவது நல்லதல்ல. பொரிக்கும்போது அதிகளவுஎண்ணை சேர்வதால் ஆரோக்கியத்திற்குக் கேடாகும். எனவே மீனைப் பொரித்துச்சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். மாறாக கறியாகச் சமைத்து உண்பது நல்லது.அல்லது வெப்பத்தில் சுட்டு வேகவைத்து அல்லது பேக் பண்ணியும் சாப்பிடலாம்.

எனவே மீன் உணவு நல்லது. எல்லா வயதினருக்கும் தேவையானது. பல்வகை மீன்களையும் மாறி மாறிச் சாப்பிடுங்கள். அவை உங்கள் ஆரோக்கிய வாழ்விற்குநல்லது. நன்றி: தமிழ்ர் தகவல்-கனடா





# நான் குண்டாயிருக்கக் காரணம் நானில்லை !

அளவுக்கு அதிகமாய் நொறுக்குத் தீனிகளை உள்ளே தள்ளுவதும், சோம்பித் திரிவதும் மட்டும் தான் உடல் குண்டாகக் காரணம் என நம்பியிருந்த நம்மை வியப்பூட்டுகிறது ஒரு புதிய ஆராய்ச்சி.

குண்டாய் இருப்பவர்களைப் பார்த்து, உன்னை ஒரு வைரஸ் தாக்கியிருக்கலாம், அதனால் தான் நீ ரொம்ப குண்டாய் இருக்கிறார் என சொல்வதில் பிழையில்லை என்கின்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள்.

யுனு 36 என அழைக்கப்படும் வைரஸுக்கும், உடல் எடை அதிகரிப்பதற்கும் தொடர்பு உண்டு என நிரூபித்திருக்கின்றனர் அறிவியலார். இந்த வைரஸ் மிக எளிதில் தொற்றக் கூடிய தன்மையுடையது. காய்ச்சல், ஜலதோஷம் போல தும்மினாலோ, இருமினாலோ, கைகுலுக்கினாலோ கூட பரவலாம் என அதிர்ச்சி மேல் அதிர்ச்சி இந்த ஆராய்ச்சியை நிகழ்த்திய நிகில் துராந்தர் எனும் பேராசிரியர்.

உடலில் இந்த வைரஸ் புகுந்தவுடன் நேராக நுரையீரலில் நுழைந்து அதில் முடிந்த அளவு தனது முத்திரையைப் பதித்து விடுகிறதாம். பின் அங்கிருந்து நேராக உடலிலுள்ள கொழுப்புத் தசைகளுக்குத் தாவி விடுகிறதாம். அப்படி நுழையும் வைரஸ் சும்மா இருக்காமல் அந்த கொழுப்புத் தசைகளை சட் சட்டென பலுகிப் பெருகச் செய்து உடல் எடை எசகு பிசகாய் அதிகரிக்க காரணமாகிவிடுகிறதாம்.

இப்படி தாக்குதலுக்கு உள்ளாகி தசைகள் பெருகிக் கொண்டே இருக்க, விஷயமே தெரியாமல் நாளொரு மேனியும் பொழுதொரு கிலோவுமாய் கூடிக் கொண்டே இருக்கும் உடலைப் பார்த்து நாம் கவலை கொள்கிறோம் என்கிறார் அவர்.

தும்மினாலும், இருமினாலும், கைகுலுக்கினாலும் கூட வைரஸ் பரவுமா, அப்படியானால் இனிமேல் குண்டானவர்களின் பக்கம் தலை வைத்துக் கூட படுக்க மாட்டேன் என உடனே முடிவு கட்டி விடாதீர்கள், ஏனெனில் குண்டாய் இருப்பவர்கள் எல்லோரிடமும் இந்த வைரஸ் இருப்பதில்லை.

இந்த வைரஸ் உடலில் ஆதிக்கம் செலுத்தும் வரை இந்த உடல் எடை அதிகரித்தல் நிகழும் எனவும், அந்த வைரஸ் பாதிப்பு விலகியபின் உடல் எடை அதிகரிக்காது எனவும் ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

ஆனால். சில மாதங்கள் இந்த வைரஸ் பாதிப்பு உடலில் இருந்தால் உடலின் எடை கணிசமாய் அதிகரித்து விடுமே எனும் நியாயமான அங்கலாய்ப்புக்கு சரியான விடையில்லை.

எனினும், உடல் எடை அதிகரிக்க இந்த வைரஸ் மட்டுமே காரணமில்லை என்பதை கவனத்தில் கொள்தல் இன்றியமையாதது. சரியான உடற்பயிற்சி இல்லாமலும், கட்டுப்பாடற்ற உணவுப் பழக்கம் காரணமாகவும் உடை அதிகரித்துக் கொள்பவர்கள் அந்தப் பழியை இந்த வைரஸ் மேல் சுமத்தாதிருக்கட்டும்.

## குண்டாக இருப்பது பற்றி இரு ஆய்வுகள்

வாழ்நாள் முழுவதும் புகை பிடித்துத் திரிவதும், அளவுக்கு மிக அதிகமான எடையுடன் இருப்பதும் ஒரே மாதிரியான பாதிப்பைத் தரும் என அதிர்ச்சியூட்டும் ஆராய்ச்சி ஒன்றை வெளியிட்டுள்ளனர் யூகே ஆராய்ச்சியாளர்கள்.
உடல் எடை அதிகரிக்கும் பிரச்சனை உலகளாவிய பிரச்சனையாக உருமாறியிருக்கிறது. பல்வேறு நாடுகளும் ஏதேனும் செய்து இந்த சிக்கலிலிருந்து மீண்டு வரவேண்டும் என முயன்று கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று இங்கிலாந்து.

இந்த ஆராய்ச்சி சுமார் 90 ஆயிரம் பேரை வைத்து மிகப் பெரிய அளவில் நடத்தப்பட்டது. இதன் முடிவாக, அளவுக்கு மிக மிக அதிகமாக எடையுடன் இருப்பவர்கள் தங்கள் வாழ்நாளில் பத்து ஆண்டுகளை இழக்கிறார்கள் என தெரிய வந்திருக்கிறது.
அதாவது சாதாரணமான உடல் எடையை விட 18 கிலோ அதிகமாய் இருப்பவர்களுக்கு வாழ்நாளில் மூன்று ஆண்டுகள் குறையும். சாதாரண உடல் எடையை விட சுமார் 40 கிலோ அதிகமாய் இருந்தாலோ ஆயுளில் 10 ஆண்டுகள் குறையும் என கணக்கு வைத்துக் கொள்ளலாம்.


எது சரியான எடை என எப்படிக் கண்டு பிடிப்பது ?
அதற்கு BMI எனும் அளவையை வைத்திருக்கிறார்கள். இத்தனை உயரமெனில் இந்த எடை சரியானது எனும் கணக்கே அது.
சுமார் ஐந்தடி உயரமுள்ள மனிதர் 45 கிலோ எடையுடன் இருப்பது ஆரோக்கியமானது. ஐந்தரை அடி உயரமெனில் 55 கிலோ, ஆறடி உயரமெனில் எழுபது கிலோ என உத்தேசக் கணக்கு வைத்துக் கொள்ளலாம். ஆண்கள் பெண்கள் வேறுபாட்டில் இவை சற்றே மாறுபடும்.

(எடை (பவுண்டில்) x 4.88) / (உயரம் அடி )2 என்னும் சூத்திரத்தை BMI கண்டறிய பயன்படுத்துகின்றனர். ஒரு கிலோ என்பது 2.2 பவுண்ட்
வாழ்நாள் முழுவதும் புகை பிடிப்பதும், உடல் எடை அதிகமாய் இருப்பதும் ஒரே போன்ற அச்சுறுத்தல் என்பது புதிய தகவல் என்கிறார் இந்த ஆராய்ச்சியை நடத்திய ரிச்சர்ட் பீட்டோ என்பவர்.
தேவையற்ற மேலைநாட்டு உணவுப் பழக்கங்களை தவிர்த்து, இயற்கை உணவுக்கும், சுகாதார வாழ்க்கை முறைக்கும் மாறுவதும், உடற்பயிற்சிகளை தொடர்ந்து செய்வதுமே இந்தச் சிக்கலில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ளும்.






# அடுப்படி



## இறால் பிரை (Fry)

இறால் பிரை (Fry)
தே. பொருட்கள்

இறல் 1/2 கிலோ
புளி 1தேசிக்காய் அளவு(சுமாரானது)
வெங்காயம் 200 கிறம்
தக்காளி 100 கிறாம்
மஞ்சள் 1/4 தே.கம
மிளகு 1.தே.க
மிளகாய்த் தூள்2 தே.க
மல்லித் தூள் 3தே.க
பூண்டு 6 பல்(பேஸ்ற்)
மாசித் தூள் 1மே.க
கறிவேப்பிலை,உப்பு,எண்ணெய் (தேவைக்கு)

செய்யும் முறை

இறாலை தோல் நீக்கி கழுவி தண்ணீர் வடிய விடவும். ஒரு தாச்சியில் எண்ணெய் சூடானதும் கறிவேப்பிலை தாளித்து வெங்காயம்,தக்காளியை வதக்கி, மஞ்சள் தூள்,மிளகாய்த் தூள்,மல்லித் தூள்,பூண்டு பேஸ்ற், சேர்த்து வதங்கியதும் இறால்,உப்பு, மாசித் தூள், புளியையும் விட்டு சேர்த்து பிரட்டி கொதிக்க விடவும். நன்றாக திரண்டு பிரை பதம் வந்ததும் இறக்கி விடவும்.

# எனது வாழ்க்கையில், மூன்று சக்தி வாய்ந்த பெண்களால் நான் சூழப்பட்டுள்ளேன்

### இந்திய மாணவ, மாணவிகள் மத்தியில் அமெரிக்க அதிபர் ஒபாமா

டெல்லி: பெண்களின் மதிப்பை காப்பாற்றுவதற்காக நாம் ஒவ்வொருவரும், தந்தையாகவும், மகனாகவும் மாற வேண்டும் என்று மாணவர்களுக்கு ஒபாமா அழைப்புவிடுத்தார். டெல்லியில் உள்ள சிரிபோர்ட் என்ற அரங்கத்தில், சுமார் 2000 இந்திய மாணவ, மாணவிகள் மத்தியில் அமெரிக்க அதிபர் ஒபாமா இன்று 27.1.2015 உரையாற்றினார். அப்போது அவர் பெண்கள் பற்றி கூறியதாவது:

எனது வாழ்க்கையில், மூன்று சக்தி வாய்ந்த பெண்களால் நான் சூழப்பட்டுள்ளேன் (மனைவி, இரு மகள்கள்). ஆனால் இந்திய பெண்கள், அனைத்து குடும்பத்தையும், தங்கள் குடும்பம் போல நினைத்து பாசம் காட்ட கூடியவர்கள். இந்திய பெண்கள், நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தங்களால் சாதித்து காட்ட முடியும் என்பதை நிருபித்துள்ளனர்.








பெண்கள் வெற்றிகரமானவர்களாக மாறினால்தான், அந்த நாடு வெற்றிகரமான நாடாக மாற முடியும். அமெரிக்க அதிபரான நான் ஏதாவது தவறு செய்தால் கூட என் மனைவி மிட்சேல் அதை எடுத்துச் சொல்ல பயப்பட்டது கிடையாது (இவ்வாறு ஒபாமா சொன்னபோது அருகே இருந்த மிட்சேல் முகத்தில் அத்தனை வெட்கம்). பெண்களுக்கு பிரச்சினை என்று வரும்போது, நாம் ஒவ்வொருவரும், தந்தையாகவோ, மகன்களாகவோ, சகோதரர்களாகவோ உதவ முன்வர வேண்டும். பெண்கள் மதிப்புக்கும், மரியாதைக்கும் தகுதியானவர்கள். எனக்கு அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதைக்கு தலைமையேற்றது ஒரு பெண் அதிகாரிதான் (பூஜா தாக்கூர்) என்பதில் இருந்து, பெண்களின் பலத்தை புரிந்துகொள்ள முடிந்தது. இவ்வாறு ஒபாமா தெரிவித்தார். பெண்களுக்கு எதிரான பலாத்கார சம்பவங்கள் இந்தியாவில் அதிகமாக நடப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுவந்தன. இந்த தோற்றத்தை மாற்றுவதற்காக ஒபாமாவின் அணிவகுப்பு மரியாதைக்கு பெண் அதிகாரி பூஜா தலைமை வகித்தார். முப்படையிலுள்ள பெண்கள் பிரிவினரின் அணிவகுப்பு குடியரசு தின விழாவில் முதல் முறையாக நடத்திக் காண்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



(குரு அரவிந்தன்)



# இங்கேயும் ஒரு நிலா!

அன்று பௌர்ணமி. மொட்டை மாடியில் நின்று உன் எழில் கொஞ்சும் அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன். கண்ணுக்குள் ஆயிரமாயிரம் கதைகள் சொல்லி என் கண்களுக்கு இனிய விருந்தளித்தாய். உன் பார்வையில் மயங்கி உன்னை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் வெட்கப்பட்டு நான் தலைகுனிந்தேன். தூரத்தில் தெரு விளக்கு அழுது வடிந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் மனதுக்குள் ஏதோ ஒரு இன்ப உணர்வு ஊற்றெடுத்து. என்னை அறியாமலே கையிலே இருந்த பென்சிலை எடுத்து மொட்டைமாடிச் சுவரிலே கிறுக்கினேன்.

”தலை குனிந்து நிற்கிறது
தெரு விளக்கு,
வானத்தில் முழுநிலா”

”வாவ்!” என்று ஆச்சரியப்பட்டாள் என் தங்கை.
“ஏன்?” என்று கேட்டேன்.
“உனக்குக் கூட ஹைக்கூ எழுதவருமா சூரியா?”
“ஹைக்கூவா? யார் சொன்னது? ஏதோ என் மனதில் பட்டதைச் சுவரிலே கிறுக்கினேன்”
”இல்லை கொஞ்ச நாளாய் நானும் பார்க்கிறேன், உன்னிலே ஏதோ ஒரு மாற்றம் தெரியுது”
”மாற்றமா? என்னிலா?”
““ஆமாம், அடிக்கடி கற்பனையில் மிதக்கிறாய், மௌனமாய் இருக்கிறாய், மொட்டை மாடிக்கு வந்து வானத்தை வெறித்துப் பார்க்கிறாய். என்ன ஆச்சு உனக்கு? வானிலை ஆராய்ச்சியா?“
”இது நல்லதிற்கில்லை” என்பது போல என்னை ஒரு பார்வை பார்த்து விட்டு அவள் கீழே போய் விட்டாள்.
காதல் வந்தால் கவிதை வருமாமே! எனக்கும் கவிதை வரப்பார்க்கிறது. நானும் ஒரு கவிஞனா? இல்லை நான் கவிஞன் இல்லை? அப்போ நான் யார்? ரசிகனா? அப்படித்தான் நான் இதுவரை நினைத்திருந்தேன், ஆனால் அதுவும் பொய் என்று இப்போ தான் தெரிகிறது. ஏனென்றால் நான் காதலிக்கிறேனாம். யாரை? உன்னைத் தவிர வேறு யாரை என்னால் காதலிக்க முடியும்? எத்தனை வருடமாய் உன் எழில் வதனத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அப்படி என்றால் எனக்குத் தெரியாமலே என் இதயத்தை உன்னிடம் பறிகொடுத்து விட்டேனா?
நான் சிறுவனாய் இருந்தபோது இந்த மொட்டை மாடியில் வைத்துத்தான் அம்மா எனக்கு உணவு ஊட்டிவிடுவாள். அப்போதெல்லாம் நான் சாப்பிடாமல் அடம் பிடித்தால் உன் அழகு முகத்தைக் காட்டித்தான் எனக்கு உணவு ஊட்டி விடுவாள். உன்னை எனக்கு அறிமுகம் செய்து வைத்ததே என் அம்மா தான். இப்பொழுதும் உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அம்மா அன்று பாடிய அந்தப் பாடல் தான் என் நினைவில் வருகிறது.
நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலைமேல் ஏறி வா
மல்லிகைப்பூ கொண்டு வா!
மல்லிகைப்பூ! அதன் தூயநிறமும் மணமும் எனக்குப் பிடித்தமானது.
அதனாலேயோ என்னவோ அப்போதெல்லாம் நீ மல்லிகைப்பூ கொண்டு வருவாய் என்று நான் எதிர் பார்த்துக் காத்திருந்ததுண்டு. அப்புறம் யாராவது மல்லிகைப்பூ சூடிவந்தால் அது நீதானா என்று பார்த்து ஏமாந்து போனதுமுண்டு. தூரத்தில் மிகத் தூரத்தில் என் கைகளுக்கு எட்டாமல் என்னைப் பார்த்து நீ அடிக்கடி சிரிப்பதுண்டு. சில நாட்களில் நீ வருவதே இல்லை என்று தெரிந்த போது எனக்குப் பெரிய ஏமாற்றமாகவும் இருந்ததுண்டு. உன்னை மீண்டும் எப்போது பார்ப்பேன் என்ற ஆவலை இந்தப் பிரிவு தான் தூண்டிவிட்டதோ தெரியாது.முதன் முதலாக பௌர்ணமி அன்று உன்னை நான் பார்த்தபோது உன் அழகிய முகம் என்னைக் கவர்ந்து இழுத்தது. அந்த அழகிய முகமே நிரந்தரமாக என் மனதிலும் பதிந்தும் விட்டது.

“வானமீதில் நீந்தி ஓடும் வெண்ணிலாவே- நீ தான் வந்ததேனோ யன்னலுக்குள் வெண்ணிலாவே!

என் படுக்கை அறை யன்னலுக்குள்ளால் நீ எட்டிப் பார்த்துச் சிரிக்கும் போதெல்லாம் கறுப்பும் வெள்ளையுமாய் ஒரு நாள் தொலைக் காட்சிப் பெட்டியில் போய்க் கொண்டிருந்த இந்தப் பாடல் வரிகளின் காட்சிகள் தான் என் நினைவிற்கு வரும்.
மேகங்களோடு நீ கொஞ்சி விளையாடும்போது அந்த மேகங்களாய் நான் இருந்திருக்கக் கூடாதா என்று ஏங்குவது உண்டு. அந்த ஏக்கத்தோடு நான் உன்னைப் பார்க்கும் போதெல்லாம் நீ முகம் நாணி மேகக்கூட்டத்தில் மறைந்து விடுகின்றாய்!
நான் சொன்னால் நம்பமாட்டாய் ஆனாலும் சொல்கிறேன். உன்னை யாராவது தீண்டினால் எனக்குக் கோபம் வருகிறது. இப்படித்தான் நீல்ஆம்ஸ்ட்ராங் உன்னைத் தொட்டபோதும் எனக்குக் கோபம் வந்தது. பக்கம் பக்கமாய் நாஸாவிற்குக் கண்டனக் கடிதம் எழுதிப் போட்டேன். எங்கேயோ ஒரு மூலையில் உன்காதலன் உனக்காகக் காத்திருக்கிறான் என்பது அவர்களுக்கும் தெரியட்டுமே என்று தான் எழுதிப் போட்டேன்.
சூரியன் இல்லாவிட்டால் உன்னிடம் ஒளி இல்லையாம். உன் முகத்தில் தெரிவது மேடுபள்ளமாம். அருகே சென்று பார்த்தால் அசிங்கமாம். எப்படி எல்லாம் இவர்கள் உன்னைப் பற்றிக் கேவலமாய்ப் பேசுகிறார்கள். பேசட்டும்! பேசுபவர்கள் பேசட்டும். உன்னைப் பார்த்து இங்கேயிருந்து இவர்கள் குரைப்பதால் நீ ஒன்றும் குறைந்து போகப் போவதில்லை!
இன்று காதலர் தினம்! உனக்காக தோட்டத்தில் இருந்து இந்த ஒற்றை ரோஜாவைப் பறித்துக் கொண்டு வந்திருக்கிறேன். இத்தனை வருடமாய் காதலர் தினத்திலன்று நான் மட்டும் தான் என் காதலை உன்னிடம் சொல்கிறேன். உனக்கேன் இது புரிய மாட்டேனென்கிறது?
ஒருவேளை நான் உன்மேல் வைத்திருப்பது ஒருதலைக் காதல் தானோ?

”வாழ்க்கைத் துணையிங்கிருக்க
ஏங்குவதா எட்டாத நிலவிற்கு
உனக்காகக் காத்திருக்கும்
இங்கேயும் ஒரு நிலா!”

படித்துப் பார்க்கிறேன். மொட்டை மாடிச்சுவரிலே மீண்டும் ஒரு பென்சில் கிறுக்கல். இம்முறை கிறுக்கியது நானல்ல. மதுநிலா! என் மாமன் மகள். என்னை நம்பி வந்த என் வாழ்க்கைத் துணை. இந்த சூரியாவைச் சுற்றிச் சுற்றி வளைய வரும் நிலா! காதல் வந்தால் கவிதை வருமாமே?
கேள்வியும் பதிலுமாய் அவளே கிறுக்கியிருந்தாள்.
மல்லிகைபூ வாசமும் மெட்டிச் சத்தமும் என் அருகே வந்தது. திரும்பிப் பார்த்தேன். மதுநிலா! ஏக்கத்தோடு என்னைப் பார்த்தாள். விழிகளில் காதல் பொங்கி வழிந்தது. நான் ஏக்கத்தோடு எப்படி உன்னைப் பார்ப்பேனோ, அதே ஏக்கப் பார்வை!

தொடர்ச்சி 19ம் பக்கம்



## காதலர்தினம் Feb.14



பிப்ரவரி 14ம் நாள் என்ன ஸ்பெஷல் என்று கேட்டால், ”காதலர் தினம்” என சட்டென சொல்லும் உதடுகளால் நிரம்பியிருக்கிறது உலகம்.
வேலன்டைன் கதைகளில் பல வடிவங்கள் உண்டு. அதில் பிரபலமானது புனித வேலன்டைன் பற்றியது. ரோம் நாட்டைச் சேர்ந்த அவர் ரோம போர்வீரர்களுக்குத் திருமணம் செய்து வைத்ததற்காகவும், கிறிஸ்தவ நெறியைப் பரப்பியதற்காகவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் சிறை அதிகாரியின் மகளான ஆஸ்டேரியஸைக் குணப்படுத்துகிறார். கடைசியில் மரண தண்டனை விதிக்கப்பட்டு மரணத்துக்குள் செல்லும் முன் ஆஸ்டேரியஸுக்கு ஒரு மடல் எழுதி, உனது வேலன்டைனிடமிருந்து ஒரு பிரியாவிடைக் கடிதம் என கையொப்பமிட்டுக் கசிந்துருகுகிறார். இதுவே வேலன்டைன்ஸ் டே ஆகி, காதலர் தினமாகி, காதலர்களின் மனதில் மன்மத அம்புகள் பாயும் தினமாக மாறியிருக்கிறது.

# காதலியுங்கள். காதல் என்பது கடவுள் தந்த அற்புத உணர்வு!



காற்றின் இழைகளில் மாலை வெயில் கலந்து வீசிக்கொண்டிருந்த ரம்மியப் பொழுது. மணலில் மெய் பரப்பி, காதலியின் உள்ளங்கையில் உள்ளத்தை வைத்து, அவளுடைய ரேகைகளில் ரயிலோட்டிக் கொண்டிருந்த காதலனிடம் காதலி கேட்டாள்.

### என்னை உனக்கு எவ்ளோ புடிக்கும் ?

”நாலு முழம் என அளந்து காட்ட காதலென்ன மல்லிகைச் சரமா ? இல்லை கால் கிலோ என நிறுத்துக் காட்ட காதலென்ன மளிகைச் சாமானா ?” காதலன் ரயிலின் வேகத்தில் கவித்துவம் காட்டினான்.
“இருந்தாலும் சொல்லேன்“ காதலி சிணுங்கினாள். சாம்ராஜ்யத்தை அசைக்கும் வலிமை காதலியின் சிணுங்கலுக்கு உண்டு என்பதையே வரலாறு பதிவு செய்திருக்கிறது. காதலன் சிலுவையில் தொங்கிய இயேசுவைப் போல கைகளை அகலமாய் விரித்தான். ” கம்பிக்குள் பாயும் மின்சாரத்தின் நீள அகலம் சொல்வாயா ? காற்றின் எடையை நிறுத்துப் பார்க்கச் செய்வாயா ? இதோ இந்த மணல் துகள்களை எண்ணி விட முடியுமா, அதோ அந்த நட்சத்திரங்களை கணக்கிட முடியுமா ? சொல்... என் காதலும் அப்படியே” காதலன் கவிதை சொன்னான்.

### எனக்காக எதையும் செய்வாயா ?

”செய்யும் எதுவும் உனக்காக என்றானபின், உனக்கான செயல் என்று தனியே ஏதுமில்லை. சொல். என்ன செய்ய வேண்டும் ? சங்கக் காதலி போல் மலர் பறிக்கச் சொல்வாயா ? இல்லை சமீபக் காதலியாய் காதில் வைரம் பதிக்கச் சொல்வாயா ?” காதலிக்கும் போது தமிழ் அமுதரசுரபியாய் வடியும் என்பதை காதலன் நிரூபித்துக் கொண்டிருந்தான்.
”அதெல்லாம் வேண்டாம். உன் நேர்மையான காதல் மட்டும் போதும்”
”ம்... அனுமனாய் இருந்திருந்தால் அகம் கிழித்துக் காட்டியிருப்பேன். மனிதனாய் பிறந்து விட்டேன். என் காதல் நேர்மையானது. சீதை சொன்னால் இந்த ராமன் தீக்குளிக்கவும் சம்மதமே” அவன் இதிகாசம் உரைத்தான்.
வேண்டாம். எனக்கு ஒன்றே ஒன்று கொடு போதும்
”என்ன வேண்டும் ? முத்தமா ? இல்லை மொத்தமா ?” காதலன் கண்சிமிட்டினான்.
”இல்லை. உன் கணினியைக் கொடு பாஸ்வேடும் தா. அப்படியே உன் ஃபேஸ்புக்கின் கடவுச் சொல்லும் கொடு. உன் மொபைலை கொடு, அதன் ரகசியக் குறியீடும் சொல்.” நவீனக் காதலி அமைதியாய்ச் சொன்னாள்.
நாக்கு நங்கூரமாய் தொண்டையோடு சிக்கிக் கொள்ள, தூண்டில் புழுவை விழுங்கிய கெண்டை மீனாய் காதலன் வியர்த்தான். காதலியைப் பார்த்து மிடறு விழுங்கினான். அவனுடைய சிந்தனைகளில் அவன் கணினியில் சேமித்து வைத்திருக்கும் ரகசியப் படங்கள் நினைவில் சுழன்றன. துழாவிய தளங்கள் பயமூட்டின. வாட்ஸ் அப் கடலைகள் கண்சிமிட்டின, ஃபேஸ்புக் உரையாடல்கள் ராட்சச கைவிரல்களை நீட்டின.
”என்ன பதிலே காணோம் ?” காதலியின் முகத்தில் அரை டன் ஏமாற்றமும், கண்களில் கரையுடைக்கத் தயாராகும் பெருங்கடலும் தெரிந்தன.

”என்னை நம்பவில்லையா ? நம்பிக்கையில்லாத இடத்தில் காதல் எப்படி வளரும்? என்னை தோண்டிப்பார்த்தால் தான் தங்கம் என ஒத்துக் கொள்வாயா ?” காதலன் தன் இயலாமையை மறைக்க தத்துவத்தை துணைக்கு அழைத்தான்.
”மடியில கனமில்லையேல் வழியில பயம் எதுக்கு ?” காதலி மென்மை உதிர்த்தாள். அவள் குரலில் வலியும், வலிமையும் தெரிந்தது.
”நம்பிக்கை இல்லாதவளோடு எனக்கெதுக்கு பயணம் ? ” காதலன் ஒட்டியிருந்த மணல் உதறி எழுந்தான்.
”நீ மணலை உதறலாம், மனசாட்சியை உதற முடியாது. போய் வாழ். அடுத்த காதலியிடமாவது நேர்மை பழகு !” காதலி எழுந்து நடந்தாள், வெளிச்சம் அவள் மனதை நிரப்பிக் கொண்டிருந்தது.
காதல் எனும் வார்த்தைக்கு இருக்கும் வசீகரம் ஆதியின் ஏதேன் தோட்டம் முதல் இன்றைய இணையத் தோட்டம் வரை நீண்டு கொண்டே இருக்கிறது. காதல் உரசிச் செல்லாத மனிதன் இருக்க முடியாது. காதல் வந்து கதவைத் தட்டும் போது கூரை பிரித்துக் கொடுக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள். காதல் வந்து கதவைத் தட்டுகையில் சன்னலையும் சேர்த்தே அறைந்து சாத்தும் மனிதர்களும் இருக்கிறார்கள். காதல் கவலைப்படுவதில்லை.
காதல் ஒரு நதியைப் போல நடந்து கொண்டிருக்கிறது. கிளை தாண்டும் மலர்கள் அதில் மிதக்கின்றன. வேரோடு குதிக்கும் செடிகளும் அதில் கலக்கின்றன. காதல் தன்னுள் பயணிக்கும் யாரையும் நிராகரிப்பதில்லை.
காதல் என்பது தனது அர்த்தத்தை இழந்து விட்டதாய்க் கூச்சலிடும் மனிதர்கள் அதன் புனிதத்தைப் புரிந்து கொள்ளாதவர்களாய்த் தான் இருக்க முடியும். கடலில் விழுந்து மரணமடைந்தவனின் தோழனுக்கு தண்ணீர் எப்போதுமே மிரட்சியைத் தருவது இயல்பு. அதற்காக தண்ணீரே பிழையென்று அவன் பாடம் எடுக்கலாமா ?




**காதலியுங்கள். காதல் என்பது .....**16ம் பக்கத் தொடர்ச்சி

காதலியின் நிராகரிப்பு காயம் தருவது இயல்பு, அதற்காக காதலே

**போலியென புலம்பல் நியாயமா ?**



தடம் புரண்ட காதலர்களும், வழி விலகிய காதலர்களும் மனித வரலாற்றின் ஆரம்ப காலங்களிலேயே ஆரம்பித்து விட்டனர். முடிவு காலம் வரை தொடரத் தான் போகிறார்கள். அதற்காக காதல் என்பது கலாச்சாரத்தின் வேர்களில் பாய்ச்சும் பாதரசம் என பதறித்துடிக்கத் தேவையில்லை.

விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்து நிறுத்தினர். இவளைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பதே சட்டம். நீர் என்ன சொல்கிறீர் என்று கேட்டனர். "உங்களில் பாவம் இல்லாதவன் முதல் கல்லை எறியட்டும்" என்றார் இயேசு. அத்தனை பேரும் கற்களைக் கீழே போட்டுவிட்டு திரும்பி நடந்தனர்.

"உங்களில் காதல் இல்லாதவன் முதல் கல்லை காதலர் மேல் எறியட்டும்" என இன்றைக்கு ஒருவர் சொன்னால் எத்தனை பேர் உண்மையிலேயே கல்லை எறிய முடியும் ?

பால்ய காலத்தில் உங்கள் பசுமைப் பிரதேசத்தில் சட்டென ஒரு பட்டாம்பூச்சி சிறகடித்திருக்குமே ? இல்லையா ? உங்கள் பதின் வயதுப் படிக்கட்டுகளில் பரவச மின்னல் ஒன்று கண்சிமிட்டியிருக்குமே ? அதுவும் இல்லையா ? உங்கள் இருபதுகளின் பயணத்தின் ஏதோ ஒரு குரல் உங்களை கனவுக்குள் கடத்திச் சென்றிருக்குமே ? இல்லையேல் முப்பதுகளில் முகத்தின் ஒரு வெட்கத் தாவணி உரசிச் சென்றிருக்குமே ? அப்போதும் இல்லையா ? உங்கள் நாற்பதுகளின் நாற்காலியில் ஒரு காதல் கனவேனும் வேர் பிடித்து வேர்வை துளிர்க்க வைத்திருக்குமே !!

இத்தனை அடுக்களைத் தாண்டியும் தப்பிப் பிழைத்த அதிசயப் பிறவியா நீங்கள் ? எனில் நிச்சயம் அது காதலின் குறையல்ல, காதலைக் காதலென அறிந்து கொள்ளாத உங்கள் பிழையே !

காதலுக்கென சில குணாதிசயங்கள் உண்டு. அதைக் காதலர்கள் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து விடுகின்றனர்.

உளவியலார் ராபர்ட் ஸ்டென்பர்க் மூன்று நிலைகளில் காதலின் பரிமாணத்தை விளக்குகிறார். முதல் நிலையில், மெல்லிய வயலின் இசை கேட்கும். காதல் மயக்கம் ஐம்புலன் கரைக்கும். காதல் நினைவில் டால்பின்கள் குதிக்கும். தேவதைகளின் சிறகுகளில் உயிர் புரண்டு படுத்து விளையாடும்.இது மின்சார வயர்கள் தொட்டுக்கொள்கையில் உருவாகும் ஸ்பார்க் போன்ற நிலை.

இரண்டாவது நிலையில் அந்த பரவசம் மெல்ல மெல்ல அன்னியோன்யமாய் மாறும். அதிக நேரம் செலவிடுதல், மனம் விட்டுப் பேசுதல், பாதுகாப்பை உணர்தல் எனும் நிலையை அடையும்.

மூன்றாவது நிலையில் ஒரு உறுதி நிலைக்கு இட்டுச் செல்லும். என்ன







நடந்தாலும் நம் நேசம் நீங்காது எனும் பரஸ்பர உடன்படிக்கையை மனம் இட்டுக்கொள்ளும்.

இந்த மூன்று நிலைகளும் சரியாக அமையப் பெற்ற காதல், வெற்றியை அடையும். இவற்றில் முதல் நிலையோடு நின்று விடும் காதலை இனக்கவர்ச்சி என்றும், இரண்டாவது நிலையோடு நின்று விடும் காதலை வேரற்ற தாவரம் என்றும் நாம் பெயரிட்டு அழைக்கலாம்.

உங்கள் இதயத்தில் மையம் கொண்ட புயல் நாளுக்கு நாள் வலுவடைந்து கொண்டே வருகிறதா ? விட்டுக் கொடுத்தல் என்பது உங்களுக்கு பிடித்தமான செயலாக மாறி வருகிறதா ?

பிடிக்காத ஒரு செயலைக் கூட பிடித்தமாய்ச் செய்யத் தோணுதா ? சட்டென பழைய நிகழ்வுகளெல்லாம் மறந்து புதிதாய்ப் பிறந்தது போல் தோணுதா ? உங்கள் இதயத்தின் தாழ்வாரத்தில் ஏதோ காதல் தாழம்பூ பூத்திருக்கலாம் !

ஒரு அழகிய முகத்தை விட, ஒரு கவர்ச்சியான அமைப்பை விட, ஒரு கம்பீரத் தோற்றத்தை விட ஒருவருடைய குணாதிசயம் உங்களை வசீகரிக்கிறதா ? ஒரு சிரிப்பு, ஒரு பேச்சு எனும் சில குணாதிசயங்களைத் தாண்டி ஒருவருடைய முழுமை உங்களால் ரசிக்கப்படுகிறதா ?

காட்டுத் தீயாய் சட்டெனப் படராமல் மெல்ல மெல்ல நிலக்கரிக் கனலாய் உங்கள் காதல் நாளுக்கு நாள் வெப்பம் கூட்டி வருகிறதா ?

ஒரு கணம் நெருப்பாய், மறுகணம் வெறுப்பாய் மாறி மாறி முகம் காட்டாமல் ஓர் மெல்லிய நேசம் தொடர்ந்து பயணிக்கிறதா ?

அடுத்த நபருடைய பலவீனத்தை பலமாய் மாற்ற உங்கள் பங்களிப்பை செய்து கொண்டே இருக்க விரும்புகிறீர்களா ?

காதல் வந்தபின்னும் மற்ற உறவுகளெல்லாம் முக்கியமானதாகவும், தேவையானதாகவும் தோன்றுகிறதா ?

நீண்ட நாட்கள் பேசாமலும், பார்க்காமலும், தொடர்பில்லாமலும் இருந்தால் கூட உங்கள் காதல் செடி செழித்து வளர்கிறதா ?

கருத்து வேற்றுமைகள் எழும்போது உணர்ச்சிகரமான சண்டைகள் நிகழாமல் நிதானமான உரையாடல்கள் நிகழ்கிறதா ?

திருமணம் நடந்தால் உங்களை விட அதிகமாய் நீங்கள் திருமணம் செய்து கொள்ளப் போகும் நபர் மகிழ்ச்சியாக இருப்பாரா ? என சிந்திக்கிறீர்களா ?

இந்தக் கேள்விகளுக்கு "ஆம்" எனும் விடை உங்கள் மனதிலிருந்து புறப்பட்டால் உங்கள் காதல் ஆரம்ப நிலையைத் தாண்டி ஆழமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது என்றே பொருள்.

காதல் என்பது வேர்களுக்கு விளம்பரம் செய்யாமல் கிளைகள் விரிக்கும் பூக்களைப் போன்றது. ஆனால் வேர்களை நிராகரித்தால் பூக்கள் விரைவிலேயே வாடிப் போகும். கிளைகள் பூக்கிரீடம் சூட்டும் போது வேர்களுக்குள் விழா நடக்க வேண்டும், அதுவே அற்புதக் காதல் !

காதலியுங்கள். காதல் என்பது மனிதனுக்குக் கடவுள் தந்த அற்புத உணர்வு. விளம்பரங்களின் வெளிச்சத்தில் அல்ல, திரைப்படங்களின் மிகைப்படுத்தலில் அல்ல, உணர்வுகளின் உரசலில் அல்ல, தேவைகளின் தேடலில் அல்ல... உங்கள் இதயத்தின் ஆழத்தில் காதலியுங்கள்.

காதல் என்பது வாழ்க்கையின் ஒரு துளிதான். ஆனால் அதற்குள் தான் அடங்கியிருக்கிறது யுகங்களின் பெருங்கடல்.

**அன்பைக் கொடுத்தல் முதல் நிலை**
**அன்பாகவே இருத்தல் உயர் நிலை !**







# நூலகத் திறப்பும், தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழாவும்!!

நிகழ்வின் நிழல்கள்








கடந்த 16.01.2015 வியாழக்கிழமை யேர்மனியில் டோட்மூண்ட் நகரத்தில் “தமிழர் அரங்கத்தில்“ தமிழர் திருநாளும், நூலகத் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. சைவம் இஸ்லாம் கிறிஸ்தவம் என்று மதங்களுக்கும் அப்பால் “தமிழர்திருநாளாக” அங்கு கொண்டாடப்பட்டது. இதனை அங்கு பொங்கலின் போதும் அவதானிக்க முடிந்தது. விழாவின் சிறப்பு அம்சமாக நூலகத்திறப்பு விழா இடம்பெற்றது. வாசிப்பு பழக்கம் அரிகிவரும் காலம். இதனை மனதில்கொண்டு புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் அதற்கான சந்தர்பத்தை அளிக்குமுகமாகவும் இந்நூல்நிலையம் அங்கு திறக்கப்பட்டது. டோட்மூண் நகரில் தமிழர்களின் பல வணிக ஸ்தாபனங்கள் இருக்கும் இடத்தில் இந்நூல்நிலையம் (தமிழர் அரங்கத்தில்) அமைந்துள்ளது சிறப்பானது. வாசகர்களுக்கு வசதியானதும் ஆகும். நூலகத்தை வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் திறந்துவைக்க கலை விளக்கு திரு.சு.பாக்கியநாதன் அவர்கள் நூலகத்தின் அவசியம்பற்றியும் அதன் வருங்காலத்திட்டம் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் பொங்கல் விழாவில் தமிழர்திருநாள் பற்றிய உரையை திரு.சபேசன் அவர்கள் நிகழ்த்தினார். தமிழர் அரங்கத்தினை அழகுற அமைத்த ஓவியர் சதீஸ் அவர் களுக்கும் திரு.சி.மகாலிங்கம் அவர்களுக்கும், அகரம் சஞ்சிகை முதன்மை ஆசிரியர் திரு த.ரவிந்திரன் அவர்கள் பொன்னாடை போற்றி கௌரவித்தார்.
இளம் கலைஞர்களுக்கு திரு.ஜீவகன் கோபரா ஞானம் ஆகியோர் பரிசுகளை வழங்கினர். கலைநிகழ்சிகள் சிறப்பாக நடைபெற்றன. இவ்விழாவினை தமிழ்படைப்பாளிகள் ஒன்றியம் வழங்கியிருந்தது.

## பேர்லின் நகரில் பரத நாட்டிய அரங்கேற்றம்

**செல்வி சுஜானா சுரேஷ்.**



பேர்லின் நகரில் கடந்த 12 ஆண்டுகளாக பரதம் பயின்று அரங்கேற்றம் கண்டுள்ளார் செல்வி சுஜானா சுரேஷ்.

இவர் ஸ்ரீ சுதர்ஷனா குமார் Dharshan Institue of Indian Dance (Kalakshetra)

அவர்களின் மாணவியும் சுரேஷ் விஜயமலர் தம்பதி களின் புதல்வியுமார்.

அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராக வானதி நர்த்த னாலய அதிபர் கலாநிதி வானதி தேசிங்குராஜா அவர் கள் கலந்து சிறப்பித்தார்.



## சஷ்டியப்த பூர்த்தி விழா

கிரியாஞானஜோதி சிவஸ்ரீ கணேச.சாமிநாதக் குருக்கள் அவர்களின் அறுபதாவது அகவை நிகழ்வு 29.12.2014 யேர்மனியில் ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் திருவருளுடன் யேர்மனி- வூப்பெற்றால் நவதுர்க்கா ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. அவரது ஆன்மீகப்பணியும் குடும்பமும் சிறக்க வெற்றிமணியும் சிவத்தமிழும் வாழ்த்தி மகிழ்கின்றது.







# ஆட்டைக் கழச்சு மாட்டைக் கழச்சு மனிதன் விட்டுவைத்தானா? மனிதக் கழிவையும்!



The Bio Bus (the poo bus)




## இங்கிலாந்தில் மனிதக் கழிவு எரிவாயுவில் இயங்கும் பஸ்: அப்படி என்றால் காக்கா பஸ்ஸா?

மனிதக் கழிவு எரிவாயுவில் இயங்கும் பஸ்: இங்கிலாந்தில் அறிமுகம்! மணப்பயம்! மனப்பயம்! பயணிக்கு இருக்குமா? அது மூக்கைபொத்துமா?
இலை குழை உணவுக்கழிவு என யாவற்றையும் பயன்படுத்திய மனிதன் இப்போ தனது கழிவுப் பொருளையும் விட்டுவைக்கவில்லை. அதில் இருந்தும் பெறுமதியான வாயுவைக் கண்டுபிடித்து விட்டான்.
மனிதக் கழிவு மற்றும் வீணாகும் உணவுப் பொருட்களிலிருந்து உற்பத்தியாகும் பயோ-மீத்தேன் வாயுவைக் கொண்டு இயங்கும் பஸ் இங்கிலாந்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் சேவை **Bristol Airport to Bath City Center** வரை பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது. Poo Bus என்று பெயரில் அறிமுகம் செய்யப்பட் டிருக்கும் இந்த பஸ்சில் பொருத்தப்பட்டிருக்கும் எரிவாயு கொள்கலனை முழுமையாக நிரப்பும் போது, 300கிமீ தூரம் வரை செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பஸ்சில் 40 பேர் பயணிக்க முடியும்.
டீசல் பஸ்களை ஒப்பிடும்போது இது 30 சதவீதம் குறைவான கார்பனை வெளியிடும் தன்மை கொண்டது. இதனால், சுற்றுப்புற சீர்கேட்டை குறைக்கும் தொழில்நுட்பம் கொண்டதாக குறிப்பிடப்படுகிறது.
ஓர் ஆண்டில் ஒருவரின் கழிவு மற்றும் அவர் வீணாக்கும் உணவுப் பொருட்களை கொண்டு இந்த பஸ்சை 59 கிமீ தூரம் வரை இயக்க முடியும். பிரிஸ்டல் விமான நிலையத்திலிருந்து பாத் என்ற இடத்திற்கு இந்த புதிய தொழில்நுட்பத்திலான பஸ் இயக்கப்படுகிறது.

இதுபோன்ற பஸ் நோர்வே நாட்டில் ஒஸ்யோவில் 2009 ஆண்டு 80 பஸ்கள் சேவையில் விடப்பட்டன. இது வெற்றிகரமாக ஓடுவதால், எதிர்காலத்தில் இன்னும் 2050 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்த படலாம் என தெரிவிக்கிறது ஒஸ்லோச் செய்தி ஒன்று.
பஸ் ஏறி இருக்கும்போது பஸ் என்னத்தில் ஓடுகிறது என்று எண்ணவேண்டாம். பின்பு மூக்கையும் வாயையும் பொத்திக்கொண்டுதான் பஸ்ஸில் இருக்கவேண்டும். மணப்பயம் மனப்பயம் மனிதனுக்கு என்றும் உள்ளதுதானே!
யேர்மனியில் பெருந்தெருக்களில் உள்ள வாகனம் தரிப்பு இடங்களில் மலசலம் கழிப்பதற்கே 70 பனிங் தேவை. அதில் 50 சதம் அங்குள்ள கடையில் பொருள் வாங்கலாம். (வெளியில் நாம் 30 சதம் வாங்கும் பொருளை அங்கு ஒரு யூரோவிற்கு வாங்கலாம். 50 சதம் ரோக் கனையும் கொடுத்து இன்னும் 50 சதம் கொடுக்க வேண்டும்.) யேர்மனியிலும் இந்த பஸ் அறிமுகமானால் அட நம்ம கழிவுதானே இனி காசாகிறதே என்று ஈவு இரக்கம் இனிகாட்டுமோ தெரியாது யேர்மனி. இது நடந்தால் இலவசமாக கழிவை கழிக்கலாம். ஒரு குறும்புபையன் சொன்னான் 'அட குசுவைக்கூடக் காசுபண்ணிறான் பாரு" என்று.

15ம் பக்கத் தொடர்ச்சி...

## இங்கேயும் ஒரு நிலா!



மொட்டை மாடியில் ஒற்றை ரோஜாவோடு தனியே நின்று உன்னோடு பேசுவதை இவள் பார்த் திருக்கலாம்.
என் நிலைமையைப் பார்த்து இவன் என்ன பைத்தியமோ என்று கணக்குப் போட்டிருக்கலாம், இல்லை அவளுக்காக நான் தனிமையிலே மொட்டை மாடியில் காத்திருப்பதாகக் கூட நினைத் திருக்கலாம்.
அவள் பார்வையில் ஒளி இருந்தது. பெயரில் நிலா இருந்தது. கூந்தலில் மல்லிகைப்பூ நிஜமாய் மணத்தது! என்னைப் போலத்தான் இவளும் காதலுக்காக ஏங்குகிறாளோ?
எனக்கு இப்போ உண்மை புரிகிறது. காதலுக்காக ஏங்குவதும், காத்திருப்பதும், கிடைக்காமல் போனால் மனம் உடைந்து போவதும்…!
தோல்விகள் எல்லாம் தோல்விகளுமல்ல, வெற்றி கள் எல்லாம் வெற்றிகளுமல்ல, எனக்குள் நானே ஆறுதல் சொல்லிக் கொள்கிறேன்.
வேண்டாம்! எனக்குக் கிடைத்த கசப்பான அனுபவம் அவளுக்கும் கிடைக்க வேண்டாம்! காதல் அன்புக்காக இனிமேல் அவளும் ஏங்க வேண்டாம்! நீண்ட பெருமூச்சில் என் ஏக்கம் தீர்த்தேன். என்னை அறியாமலே கையிலே இருந்த ஒற்றை ரோஜாவை அவளை நோக்கி மெல்ல நீட்டினேன். அதற்காகவே காத்திருந்தது போல பளீச்சென்று முகம் மலர அந்த ரோஜாவை வாங்கித் தலையிலே சூடியவள் என் மார்பில் முகம் புதைத்து விம்மினாள்.
அவளை அணைத்து தலையை மெல்ல வருடி விட்டேன். என் கற்பனைகள் எல்லாம் அவளது கண்ணீரில் கரைந்து போயிற்று.
இத்தனை வருடமாய் எட்டாத நிலா மீது நான் வைத்திருந்த காதலை ஒரு நொடியில் ஒட்டு மொத்தமாய் இவள் வாங்கி விட்டாள். ஒன்று மட்டும் எனக்குத் தெளிவாகப் புரிந்தது, கட்டிய மனைவியையும் காதலியாய்ப் பார்க்கலாம்! அவளையும் காதலிக்கலாம்!
இத்தனை நாள் என் கண்ணுக்குத் தெரியாமல் இந்த நிலவு எங்கே போயிற்று?
எனக்குள் என்னை அறியாமல் ஒரு உத்வேகம் துள்ளி எழுந்தது. கொஞ்சம் காதலித்துத்தான் பார்ப்போமே!
மனம் நெகிழ்ந்து அவள் முகம் நிமிர்த்திப் பார்த்தேன். இப்போ நான் பார்ப்பது நிஜம்! என் கண்முன்னால் இவள் நிஜம்!
எனக்காக காத்திருக்கு **இங்கேயும் ஒரு நிலா!**

Akchaya Digital Photography& Decoration
*Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration*
உங்கள் திருமணநாள் பிறந்தநாள், மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை, நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள், மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.
Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474








## லம்போகினி கார்



மைத்துனருக்குக் கலியாணம். ரொறன்ரோ விமான நிலையத்திற்கு என்னை அழைக்க வந்திருந்தார். தனது லம்போகினி வாகனத்தைப் புகழ்ந்தபடியே வந்தார்.
வீட்டை அண்மித்ததும் ஹோட்டலிற்கு முன்னால் காரை நிற்பாட்டினார்.
உணவை வாங்கி, காரில் ஏறியபோது ஸ்ராட் செய்ய மறுத்தது.
"லம்போகினியும் பழுதாகுமா?"
முழுசிப் பார்த்தான்.
இரவு பதினொன்று. காரை அங்கேயே நிறுத்திவிட்டுஇ ஹோட்டலின் உரிமையாளரான மைத்துனரின் நண்பருடன் வீடு வந்தோம்.

மறுநாள் காரை எடுக்கச் சென்றபோது, நான்குபக்கமும் செங்கல் அடுக்கப்பட்டு ரயர்கள் கழற்றப்பட்டிருந்தன.

## நம்மை வாழ வைத்த "அதிபர் பொ.கனகசபாபதி"






ஆசிரியராய் அதிபராய் எழுத்தாளராய் நண்பனாய் நல்ல சொந்தமாய் மாணவர் சொத்தாய் வாழ்ந்து மறைந்தவர் அமரர் பொ.கனகசபாபதி அவர்கள். (மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர்)
1966 களில் மகாஜனாக்கல்லூரியில் நான் மாணவனாக இருந்தபோது எனக்கு ஆசிரியராகவும் 1979 இல் நான் அங்கு ஆசிரியராக இருந்தபோது அவர் அதிபராகவும், அவர் கனடா வந்தபின் வெற்றிமணி பத்திரிகைக்கு நல்ல விஞ்ஞானக் கட்டுரைகள் படைக்கும் எழுத்தாளராகவும் இருந்தார்.
நல்ல நண்பனாகவும், எந்தநேரமும் அறிவுப்சிக்கு தீனிபோடும் ஆசானாகவும், உறவுக்கு ஓர் தந்தை போலாவும் திகழ்ந்தார். யேர்மனிக்கு பல தடவைகள் வந்துள்ளார். வந்தபோது எல்லாம் வெற்றிமணி எதாவது ஒரு நிகழ்சியினை ஒழுங்கு செய்து, அவரது ஆற்றலை நம்மவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்.
"வெற்றி நிலாமுற்றம்" நிகழ்வு வெற்றிமணி வாசகர் சந்திப்பும் 99 இதழ் வெளியீடும். 16.11.2003 டோட்மூண்ட் நகரில் இடம்பெற்றது.
அதிபர் அவர்கள் வெற்றிமணியில் எழுதிய விஞ்ஞானக் கட்டுரைகள் பின் "திறவுகோல்" என்ற நூலாக வெற்றிமணி வெளியிட்டது. திறவுகோலுக்கு அவர் இட்ட தலைப்பு "இது ஒரு விண்ணானம்." விஞ்ஞானத்தையும், நகைச்சுவை ததும்ப எழுதுவார். நூல்வெளியீடும் "பெற்றவர் கற்ற முற்றம் நிகழ்வும்" யேர்மனியில் சுவற்ரா நகரில் இடம் பெற்றது.
எனது தமிழே காதல் கவிதை வெளியீடு 2003 விழாவில் கவிதை நூல் ஆய்வினை சிறப்பாகச் செய்தார்.
2007ம் ஆண்டு கம்நகரில் இடம் பெற்ற "சிவத்தமிழ்" விழாவிற்கு தலைமை தாங்கி சிறப்பித்ததுடன் எனது "அதிசய உலா" நூலை வெளியிட்டும்வைத்தார். அவர் வெற்றிமணியில் எழுதிய சிறுவர்களுக்கான காலத்திற்கு ஏற்ற சிறுகதைகள், பலரது பாராட்டுதலையும் பெற்றது. அவற்றை 2000 ஆண்டு மாறன் மணிக்கதைகள் என்ற நூலாக வெளியிட்டோம்.
அவர் ஒரு "கூகுள்" மாதிரி, எப்ப எதனைக் கேட்டாலும் பதில் சொல்லவார். இறுதியாக அவர் எழுதிய "நம்மை வாழவைத்தவர்கள்" மற்றும் "மரம் மாந்தர் மிருகம்" 28.10.2012 யேர்மனியில் வெளியீடு செய்தோம். இவ்வெளியீட்டுக்கு யேர்மனி மகாஜன பழையமாணவர் சங்கமும் பெரும் ஒத்துழைப்பை நல்கியது. நம்மை வாழவைத்தவர்கள் பட்டியலில் அவரும் இணைந்துவிட்டார். அவர் அன்று எழுதிய ஒரு விஞ்ஞானக் கட்டுரையில் "இந்த அதிசயம் நடக்கும்! ஆனால் அப்போது "நான் எங்கே!" என்று முடித்திருந்தார். இக்கட்டுரை இந்த வெற்றிமணியில் இடம் பெற்றுள்ளது. அதிபர் அவர்களின் ஆத்மா சாந்தியடை பிரார்த்தனை செய்கின்றோம். -வெற்றிமணி-சிவத்தமிழ்.யேர்மனி






திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது
விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!

KS Services

அழைப்பிதழ்கள் முதல் திருமணத்தில்
அன்பளிப்பு வழங்கும் வரை
மணவறை அலங்காரம் மங்கலவாத்தியம்
ஒளி ஒலி உணவு சிற்றூண்டி டீஜே (DJ)
என அனைத்தும் நம்வசம்

E-Mail. info@ksservices.de
Web. www.ksservices.de





வாகன ஒழுங்கு தங்குமிட வசதி.
ஐரோப்பா தழுவியசேவை.
இன்னும் பல சேவைகள்

Tel. 0049 21025300247 Mobil. 004917610247194 / Mobil. 00491722192035

KS Services
Berliner Str. 49- 40880 Ratingen




# ஓட்சும் அவை விரட்டியடிக்கும் நோய்களும்!

இன்றைய பரபரப்பான உலகத்தில் நாம் செய்யும் பல்வேறு வேலைகளுக்கு நேரம் என்பதே போதுமானதாக இருப்பதில்லை. இந்த களேபரத்தில் நாம் சரியான உணவை, சரியான நேரத்தில் பெரும்பாலும் சாப்பிடுவதில்லை. எதிலும் வேகத்தை எதிர்ப்பார்க்கும் நாம் உணவையும் வேகமாக எதிர்ப்பார்க்க ஆரம்பித்து விட்டோம். அப்படி தலைத்தூக்கியது தான் ∴பாஸ்ட் ∴புட் கலாச்சாரம். ஆனால் அதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றி நம்மில் பல பேர் இன்று உணர்ந்து கொண்டோம். அதற்கான மாற்றாக நமக்கு கிடைத்தது தான் ஓட்ஸ். துரிதமாக உண்ண வேண்டுமானால் இதனை தாராளமாக தேர்ந்தெடுக்கலாம். நொடிப்பொழுதில் தயார் செய்து சாப்பிட்டு விடவும் செய்யலாம். ஓட்ஸ் என்பது உங்கள் உடல் நலத்தை மேம்படுத்தும் மிகச்சிறந்த முழு தானிய காலை உணவாக விளங்குகிறது. இந்த தானியத்தில் நார்ச்சத்து, புரதம், இரும்பு, மெக்னீசியம், பொட்டாசியம், செலீனியம், ∴போலேட் மற்றும் ஒமேகா-3 கொழுப்பமிலங்கள் போன்ற ஊட்டச் சத்துக்களும் வளமையாக நிறைந் துள்ளது. மேலும் உங்கள் உடல்நலத்திற்கு தேவையான சக்தி வாய்ந்த ∴பைட்டோ-நியூட்ரியன்ட்டுகள் மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் இதில் உள்ளது. ஓட்ஸ் உணவால் கிடைக்கும் உடல்நல பயன்களை ஊக்குவிக்க நட்ஸ், பழங்கள் அல்லது மசாலாக்களை அதில் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அளவுக்கு அதிகமாக சர்க்கரை சேர்த்துக் கொள்ளாதீர்கள். மாறாக, பழங்கள் மற்றும் மசாலாக்களின் இயற்கையான நறுமண சுவைகள் அதன் சுவையை மேம்படுத்தும். ஓட்ஸ் உணவால் அப்படி என்ன தான் பயன் கிடைக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? படியுங்கள்!

கொலஸ்ட்ராலைக் குறைக்கும் ஓட்ஸில் உள்ள நார்ச்சத்தில் லிப்பிட் கொழுப்பை குறைக்கும் நன்மைகள் உள்ளது. இதிலுள்ள கரையத்தக்க நார்ச்சத்து, கெட்ட கொலஸ்ட்ரால் அளவை குறைத்து, கொலஸ்ட்ராலை உங்கள் குடல் உறிஞ்சுவதையும் குறைக்கும். கூடுதலாக, ஓட்ஸில் அவெனாந்த்ரமைட் என்ற ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் உள்ளது. இது டுனுடு விஷத்தன்மைக்கு எதிராக பாதுகாக்கும். அதனால் கொலஸ்ட்ராலை குறைக்க வேண்டுமானால், ஓட்ஸ் உணவுடன் ஆரஞ்சு பழம் போன்ற வைட்டமின் சி வளமையாக உள்ள உணவு களையும் சேர்த்து உண்ணுங்கள்.

இதய குழலிய நோய் இடர்பாட்டை குறைக்கும் ஓட்ஸ் உணவில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் வளமையாக உள்ளது. இது இயக்க உறுப்புகளை எதிர்த்து போராடும். அதே போல் மாரடைப்பு ஏற்பட காரணமாக இருக்கும் தமனித் தடிப்பை உண்டாக்கும் விஷத்தன்மை அழுத்தம் மற்றும் அழற்சியையும் இது குறைக்கும்.



உடல் எடை குறைப்பிற்கு உதவிடும் உடல் எடையை குறைக்க படாத பாடுபடுபவர்களுக்கு ஓட்ஸ் ஒரு சிறந்த காலை உணவாக விளங்குகிறது. ஆரோக்கியமான உடல் எடையை பராமரிக்கவும் இது உதவிடும். வளமையான புரதம் மற்றும் நார்ச்சத்தை இது கொண்டுள்ளதால், இது உங்கள் வயிறை நிறையச் செய்து உங்களை திருப்தியாக்கும். மற்ற தானியங்களை விட ஓட்ஸ் உங்கள் வயிற்றை அதிகமாக நிறையச்செய்யும் என 2013 இல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு கூறுகிறது. சுவைமணம் இல்லாத ஓட்ஸை, ஓட்ஸ் கலந்த குளிர்ந்த தானியங்களுடன் ஒப்பிட்டு பார்த்த போது, சுவைமணம் இல்லாத ஓட்ஸே வயிற்றை அதிகமாக நிறையச் செய்து, ஆற்றலை அதிகரிக்க மற்ற உணவை நாடுவது குறைந்தது என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

இரத்தத்தில் உள்ள சர்க்கரையை சீராக்கும் ஓட்ஸில் கார்போஹைட்ரேட்ஸ் அதிகமாக உள்ளது. காலையில் உண்ணக்கூடிய மற்ற உணவுகளுடன் ஒப்பிடுகையில், இது நிலையான ஆற்றலை அளிக்கும் மூலமாக விளங்குகிறது. நார்ச்சத்து அதிகமாக இருப்பதால், உங்கள் உடல் அதை மெதுவாக செரிக்க செய்யும். இதனால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையில் திடீர் உயர்வு இருக்காது. ஓட்ஸ் போன்ற முழு தானியங்களை தொடர்ச்சியாக உட்கொண்டு வந்தால், டைப் 2 சர்க்கரை நோய் உண்டாவது குறையும் எனவும் அறிவியல் சார்ந்த ஆய்வுகள் கூறுகிறது.

இரத்த கொதிப்பை குறைக்கும் மிதமான இரத்த கொதிப்பை உள்ளவர்களுக்கு சுருக்கியக்க மற்றும் உச்சிவிரிவு இரத்த கொதிப்பை குறைக்க ஓட்ஸ் உதவுகிறது என 2002 இல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு கூறியுள்ளது. இரத்த கொதிப்பை குறிப்பாக கட்டுப்படுத்த, ஓட்ஸ் தவிடு மற்றும் முழு தானிய ஓட்ஸ் உதவுகிறது. கூடுதலாக, ஓட்ஸில் உள்ள நார்ச்சத்து மற்றும் மெக்னீசியம் இரத்த உறைக்கட்டி ஏற்படுவதை குறைக்கும். இதனால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். முழு ஓட்ஸ் மற்றும் இதர முழு தானியங்களை தினமும் உங்கள் உணவில் சேர்த்துக் கொண்டால், உங்கள் இரத்த அழுத்தம் கட்டுப்பட்டு, மாரடைப்பு ஏற்படும் வாய்ப்புகள் குறையும்.

மார்பக புற்றுநோய்க்கு எதிராக பாதுகாக்கும் ஓட்ஸில் லிக்னன்கள் மற்றும் என்ட்ரொலாக்டோன் போன்ற பைட்டோ-ரசாயனங்கள் வளமையாக உள்ளது. இது புற்றுநோய்களுக்கு எதிராக உங்களை பாதுகாக்கும்.

குறிப்பாக, மார்பக புற்றுநோய் மற்றும் இதர ஹார்மோன் சம்பந்தப்பட்ட புற்றுநோய்கள் ஏற்படாமல் தடுக்க என்ட்ரொலாக்டோன் உதவுகிறது. கூடுதலாக, ஓட்ஸ், கம்பு மற்றும் அதே போன்ற இதர உணவுகளில் உள்ள கரையத்தக்க நார்ச்சத்துக்கள் மார்பக புற்று அணுக்களின் மீது நேரடியான தாக்கத்தை கொண்டுள்ளது.

குடல்ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஓட்ஸில் அதிக நார்ச்சத்து இருப்பதால், அது உங்கள் பெருங்குடல் மற்றும் குடல் சார்ந்த ஆரோக்கியத்திற்கு பல பயன்களை அளிக்கிறது. பெருங்குடல் அழற்சியால் அவதிப்படுபவர்களுக்கு இது மிகவும் நல்லதாகும். மேலும் குடல் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தையும் இது குறைக்கும். கூடுதலாக, மலங்கழித்தல் நன்றாக நடந்திட தூண்டும்.



அதனால் மலச்சிக்கல் போன்ற பிரச்சனைகள் நீங்கும். உடற்குழி நோய் உள்ளவர்கள் கோதுமைக்கு மாற்று உணவாக இந்த முழு தானிய உணவை பயன்படுத்தலாம். இருப்பினும், இதில் சிறிய அளவில் பசையம் இருப்பதால், இதனை மிதமான அளவிலேயே உண்ண வேண்டும்.

உங்கள் உணவில் நார்ச்சத்தை சேர்த்துக் கொள்ளும் போது, அளவுக்கு அதிகமாக தண்ணீர் குடிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அப்போது தான் நார்ச்சத்து அதன் வேலையை ஒழுங்காக செய்ய முடியும்.

KSR BRIDAL ARTIST
தங்கத்தில் வைரம் பதித்ததுபோல் உங்கள் அழகுக்கு அழகூட்ட எம்மை நாடுங்கள்.மணப்பெண் அலங்காரம்.
மாலைகள் மற்றும் பூச்செண்டுகள்
அனைத்தும் ஓர் இடத்தில்.
**Make up**......
Bridal, wedding, puperty, party
Christian Make up......
**Threading** Eye brow Face.....
**Facial**...........
**hair style**
**hair straightening**
**hair curls**
Video & Foto
E-mail : kajas.makeup@hotmail.de
facebook : KSR Bridal Artist
KSR BRidal
Tel:02323 39 88 470
contact : 015236649870








## யேர்மனி–கஸ்ரொப்றவுக்சல் தமிழாலயத்தால் தைப்பொங்கல் விழா


கடந்த 17.01.2015 சனிக்கிழமையன்று கஸ்ரொப்றவுக்சல் தமிழாலயத்தால் தைப்பொங்கல் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் தமிழாலயத்திற்குரிய மாநிலப்பொறுப்பாளர் திரு.தா.நற்குணராஜா அவர்கள் மற்றும் தமிழாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து சறப்பித்தனர். சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட வெளிமுற்றத்தில் பொங்கலிடப்பட்டு கலந்து சிறப்பித்தவர்களுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மண்டபத்தினுள் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

## ஓட்சும் அது... 21ம் பக்கத் தொடர்ச்சி


மன அழுத்தத்தை அண்ட விடாது வெதுவெதுப்புடன் இதமளிக்ககூடிய இந்த காலை உணவு உங்களிடம் இருந்து பதற்றத்தையும், மன அழுத்தத்தையும் நீக்க உதவும். செரோடோனின் என்ற நரம்பியகடத்துகையின் உற்பத்தியை அதிகரிக்க மூளையை இது தூண்டி விடும். செரோடோனின் தான் உங்கள் மனநிலை, தூக்கம் மற்றும் பசியை கட்டுப்படுத்துவதாகும். கூடுதலாக, இதில் மெக்னீசியம் உள்ளதால் உங்கள் தூக்கத்தின் தரம் மேம்பட இது உதவும். இதனால் அமைதி ஏற்படும். இந்த காம்ப்ளெக்ஸ் கார்போஹைட்ரேட் உணவை கொஞ்சம் சாப்பிட்டாலும் போதும், உங்கள் மன அழுத்தம் நீங்கும். உடல் ஆரோக்கியம் மற்றும் மனநிலை பயன்களை அளிக்கும் இந்த உணவின் சுவையை மேம்படுத்த அதனுடன் ப்ளூபெர்ரி பழங்களை சேர்த்துக் கொள்ளலாம். ப்ளூபெர்ரியில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் மற்றும் வைட்டமின் சி வளமையாக உள்ளதால், மன அழுத்தத்தை போக்க சிறந்த உணவாக அது கருதப்படுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கும் முழு தானிய ஓட்ஸில் நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கும் ஊட்டச்சத்துக்கள் வளமையாக உள்ளது. டையட்டரி ஃபைபர் இதில் வளமையாக உள்ளது. நோய் எதிர்ப்பு அணுக்கள் செயல்பாடுகளின் மாற்றங்களுடன் இது சம்பந்தப்பட்டுள்ளது. மேலும் ஓட்ஸில் உள்ள பீட்டா-க்ளுக்கான்களில் நுண்ணுயிர் எதிர்ப்பி மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட் குணங்களும் உள்ளது. நுண்ணுயிர் தொற்றுகளுக்கு எதிராக உங்கள் நோய் எதிர்ப்பு அமைப்பு செயல்பட, அதனை மேம்படுத்த பீட்டா-க்ளுக்கான்கள் உதவும். நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கும் பயன்களை பெற வேண்டுமானால், சர்க்கரை அதிகமாக கொண்டுள்ள தற்போதைய உடனடி ஓட்ஸ் உணவை தேர்ந்தெடுக்காமல் பழமையான ரோல்ட் ஓட்ஸ் அல்லது ஸ்டீல்-கட் ஓட்ஸை தேர்ந்தெடுங்கள்.

சருமத்தை இதப்படுத்தும் உண்ணுவதற்கு மட்டுமல்ல ஓட்ஸ். உங்கள் சருமத்தை மென்மையாக வைத்து, அதற்கு நீர்ச்சத்து அளிக்கவும் கூட ஓட்ஸ் உதவுகிறது. ஓட்ஸ் குளியல் மேற்கொண்டால் அரிப்பு, சருமம் சிவத்தல், சரும எரிச்சல் போன்றவைகள் நீங்கும். அனைத்து வகையான சருமங்களுக்கும் இது ஒத்துப்போகும். இதில் அழற்சி எதிர்ப்பி மற்றும் இறந்த தோல்களை நீக்கும் குணங்களும் அடங்கியுள்ளது. இயற்கையான சுத்தப்படுத்தும் பொருளாக விளங்கும் ஓட்ஸ், சருமத்தில் அளவுக்கு அதிகமாக இருக்கும் எண்ணெய், அழுக்கு மற்றும் மாசுக்களை நீக்கவும் உதவும். மேலும் சூரிய ஒளி பாதிப்பில் இருந்து உங்கள் சருமத்தை பாதுகாக்க புற ஊதா உறிஞ்சியாகவும் இது செயல்படும்.








நிலாமகள்

# யேர்மனியில் கேர்லின் நகரில் பூத்துக்கிடக்கும் காதலர் பூட்டுக்கள்.

யோ்மனியில் கோ்லின் நகரில் றைன்நதி பாலம் (Hohenzollernbruecke bridge in Cologne, Germany) புகையிரத நிலையத்தை அண்டிய பகுதி, பெரிய தேவாலத்திற்கும் அருகில் இந்த காதல் பூட்டுக்கள் (Love Locks) அமைந்துள்ளது.

காதலா்கள் தங்கள் காதல் நினைவாக செய்யும் லீலைகள் நாடு, மொழி, மதம், கடந்து நிற்கின்றது. காதலுக்கு கண்ணில்லை என்றானபோது நாடென்ன மதம் என்ன.

நமது தாய்மண்ணில் காதலுக்காக வரைந்த ஓவியங்கள் இன்றும் மரங்களில் இருக்கின்றது. மரத்தில் இதயம் வரைவதும், காதலன் காதலி பெயர் பொறிப்பதும், ஓர் அலாதியான இன்பக்கொண்டாட்டம். மரங்கள் மட்டுமா பாடசாலைச் சுவா்கள், போக்குவரத்து பஸ்களின் இருக்கைகள் என்று எங்கு பார்தாலும் ஓவியமாக பெயா்களை எழுதிவைப்பார்கள். இது ஒரு வகை காதல் ஓவியம்.

அது எமது நாட்டில். இந்த எழுத்து ஓவியங்கள் இங்கும் உண்டு. காதலன் காதலி கண்ணில் அடிக்கடி படும் இடங்களில் எல்லாம் இந்த காதல் ஓவியங்களும் பெயா்களும் இருக்கத்தான் செய்கின்றன. இந்தப் பெயா்களில் என்னதான் இருக்கு என்று கேட்டுவிடாதீர்கள். அது காதலா்களுக்கு வெறும் பெயா்கள் அல்ல அதுவே அவா்களுக்குப் பிடித்த கவிதையாகவும் இருக்கும். சிலசமயம் அதுதான் அவா்களது தேசியகீதமாகவும் இருக்கும். காதலை வெளிப்படுத்தவும் அது வழியாக இருக்கலாம்.

அங்கு அந்த பாலத்திற்கு (the Hohenzollern Bridge ) வரும் காதலா்கள் தாங்கள் வாழ்வில் பிரிவது இல்லை என்ற மன உறுதியுடன் தங்கள் காதல் என்றும் நிலைத்திருக்க ஒரு பூட்டை அந்த கம்பிவலை வேலியில் ஒரு இடத்தில் பூட்டிவிடுவார்கள். பூட்டப்பட்ட இந்த இணைப்பு இனி விடுபட வேண்டியதே இல்லை. அந்தத்தேவையும் இல்லை. எனவே இதயப்பூட்டுள் காதலா்கள் தம்மை உள்வைத்து பூட்டிவிட்டு, இனிவாழ்வில் காதலைவிட்டு இருவரும் வெளியேறுவது இல்லை என்ற முடிவுடன் பூட்டிய சாவியையும் நதிக்குள் வீசிவிடுவார்கள்.

இப்படி ஆயிரம் ஆயிரம் கதாலா்கள் தினம்தோறும் தம்மைத்தாமே இதயச் சிறக்குள் பூட்டிவிட்டு, திறப்பை மகிழ்வாக எறிந்து விடுவார்கள். படத்தில் பாருங்கள் எத்தனை பூட்டுக்கள். இரு பக்கமும் அழகிய பல வண்ணப் பூட்டுக்களால் நிறைந்திருக்கும். பெரும்பாலான பூட்டுக்களில் எல்லாம் அவா்களது பெயரும் திகதியும் பொறித்திருக்கம்.

இந்த காதல் கலாச்சாரம் எத்தனையோ நூறுவருடங்களுக்க முன் இத்தாலி யில் இருந்து வந்திருக்கலாம் என்று அறிப்படுகின்றது. இந்தப் பூட்டுக்கள் பல வடிவில் இருக்கும் சில இதயம்போல், சில வா்ணத்தில் அமைந்ததாக மற்றும் சில சைக்கிள் பூட்டில் தொங்கும் பூட்டுக்காக என்று பல வடிவமாக இருக்கும். இவா்களது காதல் நிலைக்கிறதோ இல்லையோ பூட்டுவிற்பனையாளரது வாழ்வு நிலைக்கும் அது நிச்சயம்.

பாலத்தில் இருக்கும் பூட்டுக்களின் நிறை இரண்டு தொன்னையும் தாண்டிவிட்டது. இந்த காதல் பூட்டுக்கள் யோ்மனியில் கம்போ்க் நகரிலும் மற்றும் கனடா (வன்கூவா்) பாரிஸிலும் உள்ளது. அண்மையில் பாரிசில் உள்ள பாலத்தின் ஒரு பகுதி பூட்டின் பாரம் தாங்க முடியாமல் இடிந்து விழுந்த சம்பவமும் நடைபெற்றது.

இப்பூட்டுக்களை பூட்டிய காதலா்கள் காதல் கனிந்து மகிழ்வில் இருப்பவா்கள், அந்த இடத்திற்கு வந்து தமது நினைவுகளை மீட்பார்கள்.

ஒரு காதலன் கூறுகையில் “ நாம் ஒருவேளை சேரமுடியாது பிரிந்து விட்டாலும், நாம் இவ்விடத்தை மீண்டும் ஒரு முறைவந்து பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டால் நீ நம்பு! “நான் உனக்காக இங்கு காத்து இருகின்றேன்” என்று!

சத்தியம் செய். நான் உன்னை மறக்க மாட்டேன் என்று. எனக்கு நூறு வயதானாலும்!

காதல் வெற்றிபெற்றால், அது மிக இனிமையானது. அதுவே தோற்றுப் போனால் மிகவும் வலியானது.




Love = the most beautiful thing to have and the most painful thing to loose.

இப்படி பல காதல் வசனங்கள் காற்றாக அந்தக்காதல் பூட்டுக்களை தினம் வருடியவண்ணம் வீசுகின்றது.

ஆசை வெட்கம் அறியாது. அங்கு காதலா்கள் ஆங்காங்கு அது உண்மை என்பதை காட்டியவண்ணம் இருப்பார்கள்.

நீங்களும் யோ்மனியில் இந்த நகரத்திற்கு போனால் பாருங்கள். புகையிரதத்தில் அந்த பாலத்தைதாண்டிச் சென்றால் கவனியுங்கள், பூட்டுப்பூட்டாக பூத்திருக்கும் காதல் மொட்டுக்களை.

உங்களுக்குள்ளும் ஒரு காதல் இருந்தால் ஒரு பூட்டை வாங்கி பூட்டி வையுங்கள். திறப்பை உடன் எறிந்து விடுங்கள். எறிவதுபோல் நடித்து பாக்கெற்றில போட்டுவிடாதீர்கள். இது காதலின் வலிமையை குறைத்து வாழ்வில் வலியைத்தந்துவிடும். காதலிலும் நம்பிக்கைதான் வாழ்க்கை.

15.01.2015 முதல் புதிய முகவரியில் - Rheinische Str-72--- 44137 Dortmund



## கதை சொல்ல ஓர் கதை...

மீரா. குகன்



# சிறுவர் அரங்கம்

## அம்மாவின் பாசம்

ஆபிரிக்கா நாட்டின் அடர்ந்த காட்டினில் ஒரு தாய் மான் தனது மகன் மானுடன் வாழ்ந்து வந்தது . அந்தத் தாய் மான் தன் மகன் மான் ரெஜியிடம் மிகவும் பாசம் கொண்டிருந்தது. அவனைச் சீராட்டித் தாலாட்டி வேண்டியதை எல்லாம் செய்து மிகவும் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தது. தன் மகனிடம் மிகவும் செல்லமாக இருந்தாலும் நல்ல பண்புகளையும் ஊட்டி வளர்த்தது .
ரெஜியும் நாள்தோறும் படிப்பதும் தன் நண்பர்களான பிற மான்களுடன் விளையாடுவதுமாக பொழுதைக் கழித்து வந்தது. இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் வழமை போன்று விளையாடி முடித்து வீடு திரும்பும் வேளையில் ஒரு புதரினுல்லிருந்து ஒரு முனகல் சத்தம் ஒன்று கேட்டது. அருகே சென்று பார்க்கையில் அங்கு சிங்கம் ஒன்று புதரினுல் கிளைகளின் நடுவே சிக்குண்டு வெளியே வர முடியாது முனங்கிக் கொண்டு காணப்பட்டது .

ரெஜி சிங்கத்தைப் பார்த்ததும் அதனைப் புறக்கணித்து விட்டு செல்ல நினைத்தாலும் தன் அம்மா தனக்கு அறிவுறுத்தியதை நினைத்து ஒரு நிமிடம் யோசனை செய்தது . ” நீ என்றும் யாராவது ஆபத்தில் இருந்தால் உன்னால் இயன்றால் உதவி செய். அது உனது நல்ல பண்பை எடுத்துக்காட்டும் ” என்ற அம்மாவின் நல்ல அறிவுரையை நினைத்து பார்த்தது . புதர் அருகே சென்று தனது கொம்பினால் மெல்ல மெல்ல அப் புதர்களை விலக்கியது. சிங்கமும் சிக்குண்ட அப் புதர்களிலிருந்து மீண்டது .
தன்னைக் காப்பாற்றி விட்டு தன் வழியே சென்று கொண்டிருந்த ரெஜியைச் சிங்கம் கூப்பிட்டது. ரெஜி திரும்பிப் பார்த்தது. சிங்கமும் ரெஜியிடம் ” என்னை காப்பற்றியதற்கு மிகவும் நன்றி. எனது பெயர் லியோ. நாம் நண்பர்களாக இருப்போமா என்று கேட்டது ?.
அதற்கு ரெஜிக்கு என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை. நான் எப்படி ஒரு சிங்கத்துடன் நட்பு கொள்ளுவது? அம்மாவிற்கு விருப்பம் இருக்காதே எனத் தயங்கியது. அதற்கு சிங்கம் லியோ ” ஏன் என்னுடன் நட்பு கொள்ள தயங்க வேண்டும் ? நீ என்னுடைய நண்பன் என்று தெரிவித்தால் இக்காட்டில் இருக்கும் எல்லா மிருகங்களுக்கும் உன்னில் மதிப்பு வரும். ஆகவே நாம் நண்பர்களாகுவோம் ” எனக் கூறி றெஜியுடன் கை குலுக்கியது.
ரெஜிக்கு ஒரே உற்சாகமாக இருந்தது. இந்தக் காட்டின் ராஜாவாகிய சிங்கம் தன் நண்பன் என்று கூறிக்கொள்ளுவதில் பெரு மகிழ்ச்சி கொண்டது . அம்மாவிடம் ஓடிச் சென்று நடந்தவைகளை விபரமாக விளக்கியது. எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த அம்மா ”ரெஜி நீ ஆபத்தில் இருந்த சிங்கத்துக்கு உதவி செய்ததைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சி. ஆனால் சிங்கத்துடன் நட்பு வேண்டாம். அதை மட்டும் விட்டு விடு ” என்று அறிவுறுத்தியது. ரெஜிக்கோ அம்மாவிடம் மிகவும் கோபம் கோபமாக வந்தது . ” இந்த அம்மாவுக்கு ஒன்றுமே தெரியாது. எனது நண்பன் சிங்கத்தால் எனக்கு எவ்வளவு பெருமை . அம்மாவின் இந்த பேச்சை மட்டும் நான் கேட்கப்போவதில்லை ” என அம்மாவின் சொல்லை அலட்சியப்படுத்திவிட்டு வெளியே சிங்கத்துடன் விளையாடச் சென்றது. .
ரெஜிக்கு சிங்கத்தின் நட்பு கிடைத்தபின் தனது மான் நண்பர்களை எல்லாம் புறக்கணிக்க தொடங்கியது. சிங்கத்துடன் சேர்ந்து மற்றைய பலம் குறைந்த மிருகங்களைக் கேலி செய்வதும் அவர்களை விரட்டி அடிப்பதுமாக இருந்தது. அம்மா எவ்வளவோ எடுத்துக் கூறினாலும் ரெஜி அதைக் காதில் போட்டுக்கொள்ளாது தனது நட்பே எல்லாவற்றிலும் சிறந்தது எனக் கர்வம் கொண்டு அலைந்தது. ரெஜியின் மான் நண்பர்களுக்கு ரெஜியின் நடத்தை பிடிக்காததால் அவர்களும் தமது நட்பை முறித்துக்கொண்டனர் . அம்மா என்றும் போல ரெஜியின் தேவைகளை கவனமாக நிவர்த்தி செய்து கொண்டிருந்தாள்.

ஒரு நாள் சிங்கம் லியோவைத் தேடிப் பக்கத்துக் காட்டில் இருந்து விருந்தினராக இன்னொரு சிங்கம் ஒன்று வந்தது. லியோ பெருமையாக தனது நண்பன் ரெஜியை அதற்கு அறிமுகம் செய்து வைத்தது. ஆனால் விருந்தினன் சிங்கமோ ரெஜியை ஒரு ஏளனப் பார்வையுடன் நோக்கி விட்டு லியோவை ஒரு ஒதுக்குப் புறமாகக் கூட்டிச்சென்று ” என்ன லியோ உனக்கு வெட்கமாக இல்லை. போயும் போயும் ஒரு மானை நண்பன் என்று சொல்கிறாயே . உடனே அதன் நட்பை முறித்து விடு. இது எமது இனத்துக்கே அவமானம்” எனக் கூறிவிட்டு அகன்று சென்றது. லியோவுக்கு வெட்கமாகப் போய்விட்டது. விருந்தினன் சிங்கத்திடம் சென்று ” மன்னித்து விடுங்கள் . நான் இதை உணரவில்லை. இப்போது என்ன செய்யலாம் ? என்று கேட்டது . அதற்கு விருந்தினன் சிங்கமும் ” எனக்கு லேசாக பசிக்கிறது . இன்று எம்மிருவருக்கும் நல்ல மான் வேட்டை காத்திருக்கிறது ” எனக்கூறி ரெஜியைத் துரத்தத் தொடங்கியது .
ரெஜிக்கு ஒன்றுமே புரியவில்லை. முதலில் தன்னுடன் விளையாடுகிறார்களோ என்று எண்ணினாலும் விருந்தினன் சிங்கத்தின் கண்ணில் தெரிந்த வெறி அதற்கு பயத்தை ஊட்டியது. விரைவாக தப்புவதற்கு ஓடத் தொடங்கியது. ஓடிக்கொண்டே ”அம்மா காப்பாற்றுங்கள் ....காப்பாற்றுங்கள் ” என்று கதறியது. மகன் ரெஜியின் கதறல் தாயின் காதை எட்டியது. விரைந்து ஓடோடிச்சென்று சிங்கங்களுக்கும் தனது மகனுக்கும் இடையில் நின்றது. ” என்னைத் தாண்டித்தான் நீங்கள் என் மகனை அடையலாம் . எனது மகனுக்கு ஒருவரும் தீங்கு செய்ய நான் அனுமதிக்க மாட்டேன் ” என்று ஆவேசத்துடன் கத்தியது ”. இதை பொருட்படுத்தாது சிங்கங்கள் இரண்டும் மானை நெருங்கின. தாய் மானும் தனது சிறிய கொம்புகளைக் கொண்டு அந்த கொடிய சிங்கங்களுடன் சண்டை பிடித்தது. இவ்வாறு சளைக்காமல் சண்டை செய்து கொண்டே ரெஜியிடம் அவ்விடத்தை விட்டு உடனே நகர்ந்து வீட்டைச் சென்று அடையுமாறு கத்தியது . ரெஜியும் அம்மா கூறியதைப் போல உடனே அவ்விடத்தை விட்டுத் தப்பி ஓட்டம் பிடித்தது .

அம்மா மான் அந்த சிங்கங்களுடன் சண்டை பிடித்ததில் மிகவும் காயப்பட்டது. ஒருவாறு சாதுரியமாக அவைகளை திசை திருப்பிவிட்டு ஒளிந்துக்கொண்டது. சிங்கங்களும் தாய் மானைத் தேடிக் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றன. அன்றிரவு முழுவதும் காயங்களுடனும் ஒரு கண்ணையும் இழந்த தாய் மான் அந்த இடத்திலேயே ஒளிந்திருந்தது. மறுநாள் விடிந்ததும் நொண்டி நொண்டி வீட்டை வந்து அடைந்தது. ரெஜி அம்மாவைக் கண்டவுடன் ஆனந்தக்கண்ணீர் விட்டது. தன்னால் தன் அம்மாவுக்கு ஒரு கண்ணை இழக்க வேண்டி வந்ததை எண்ணி மிகவும் மன வருத்தம் கொண்டது. அம்மாவோ தன் மகன் ரெஜிக்கு ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை என்பதை எண்ணி மன நிறைவு கொண்டாள். தனது காயங்களை அந்த அன்பான தாய் ஒரு பொருட்டாகவே கொள்ளாமல் ரெஜிக்கு உணவு சமைக்க தனது ஒரு கண்ணுடன் சமையலறைக்குள் சென்றது . துஷ்டர்களை கண்டால் தூர விலகு .








HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
உங்கள் தாய் மொழியில்....
ஆங்கிலம், யோ்மன், பிரஞ், துருக்கி
மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.
பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள்
கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.



தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

# தமது பிள்ளைகள் தமக்குள் அந்நிய மொழி பேசும் போது அதை பார்த்து ரசிக்கும் பெற்றோர்கள்!



எல்லா மொழிகளிலுமே தொன்மையான மொழியும் இன்றைக்கும் பேசப்படும் மொழி எது என்று கேட்டால் அது தமிழாகத்தான் இருக்க வேண்டும். அவ்வாறு காலத்தால் தொன்மையான மொழி தமிழ் மொழி , இதற்கு ஒரு சான்றும் உண்டு. அதாவது "கல் தோன்றி மண் தோன்றா காலத்தில் முன் தோன்றிய மூத்த தமிழ் " என்று புலவன் படியுள்ளான். அப்படிப்பட்ட தொன்மை பொருந்திய தமிழின் பெருமையை கூறுவதை இட்டு நான் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். மற்றும் எங்களின் தமிழ் மொழிகளுக்கு வரி வடிவமும் ஒலி வடிவமும் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்றே. தமிழை நாங்கள் முத்ததமிழ், அமுதம், சங்கத்தமிழ், செந்தமிழ்,கன்னித்தமிழ் என்று எல்லாம் பலவாறு அழைக்கலாம்.

"தமிழுக்கு அமுது என்று பெயர் அந்த தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

தமிழை எங்களுடைய உயிருக்கு சமன் என்றும் குறிப்பிடுகிறார். அதாவது உடம்பு அழியுமே ஒழிய என்றைக்குமே உயிருக்கு அழிவில்லை என்று அந்த புலவன் அன்றைக்கு சொன்னது இன்றைக்கு உயிரைக் கொடுத்து காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது அந்த தமிழுக்கு.

இன்றைக்கு எந்த நட்டுக்கானும் சரி தமது நூற்றாண்டுக்கு முந்திய வரலாற்றை பாக்க வேண்டும் என்றால் அவன் லத்தின் மொழியில் தான் பாக்க முடியும் ஆனால் தமிழன் மட்டுமே தமது நூற்றாண்டுக்கு முந்திய வரலாற்றை பாக்க வேண்டும் என்றால் தனது தாய்மொழி தமிழில் பாக்க முடியும் அதாவது பத்துபாட்டு எட்டு தொகையில் தொடங்கி கலித்தொகை தொல்காப்பியம் திருக்குறள் என்று போய் கொண்டே இருக்க முடியும்

" நான் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் " என்று பாரதியார் குறிப்பிடுகின்றார்.அதாவது பாரதியார் எட்டு திக்கும் சென்றவர். அவர் பல மொழிகளை கற்று அதிலும் தேர்ச்சி பெற்ற ஒருவர்.அப்படி எல்லா மொழிகளும் கற்றுனந்த பாரதியார் கூட கூறுகின்றார் இனிமையான பொழி தமிழ் மொழி போல ஒரு மொழியும் இல்லை என்று,என்ன என்றால் எளிமையான மொழி தமிழ் மொழி.அப்படி பட்ட தமிழ் மொழி இன்று கவலைப்படும் அளவுக்கு மாறி வருகின்றதுதான் சோகம்.

அப்படி பட்ட தமிழ் மொழியை ஒவ்வொரு தமிழனும் கற்க வேண்டியதன் அவசியம் தான் என்ன ??????,,, எண் சாண் உடம்புக்கு தலையே பிரதானம் என்கிற மாதிரித்தான் ஒவ்வொரு தமிழனுக்கும் தமிழ் பிரதானமாக இருக்கின்றது. பண்டைய காலத்தை எடுத்து நோக்கினால் ஒவ்வொரு தமிழ் மன்னனும் தம்மோடு போர் தொடுத்து வந்த எதிரிகளை புறமுதுகிட்டு ஓட செய்த பெருமை அவர்களையே சாரும். அப்படிப்பட்ட தமிழை தான் நாங்கள் வீரத்தமிழ் அச்சமிள்ளாத்தமிழ் என்று எல்லாம் கூறுகின்றோம். அதாவது ஒவ்வொரு விட்டுக்கும் பல யன்னல்கள் இருப்பது மாதிரி நாங்கள் பல மொழியை கற்று கொள்ளலாம் தப்பே இல்லை அனல் பிரதான கதவாக தமிழ் மட்டுமே இருக்க வேண்டும் மொழி என்பது ஒரு கருத்தை மற்றவனுக்கு புரிய வைப்ப தற்கே தவிர மொழி என்பது அறிவு என்று நினைக்க கூடாது அது ஒரு பாசை அவ்வளவும் தான்

அடுத்து தமிழரின் பண்புகள் தமிழர்களுக்கு என்று ஒரு தனித்துவமான நல்ல பண்புகள் காணப்படு கின்றன.

அவனுடைய கலை கலாச்சாரங்களும் கூட தனித்துவமான சில பண்புகளை தன்னகத்தே கொண்டிருக்கின்றது.இப்படிப்பட்ட எங்கள் தமிழின் இன்றைய நிலைமை மிகமிக போசமானதாக போய் கொண்டு செல்லுகின்றது. அதாவது தமிழன் தனது தாய் மொழியை பேசுவதற்கு தயன்குகின்றான். அவன் அந்நிய மொழியையே பேசுவதில் அக்கறை கொள்கிறான். ஏன் என்றால் தமிழ் மொழியை அவன் வியாபார மொழியாகவும் அந்நிய மொழியை அவன் நாகரீக மொழியாகவும் கொள் கிறான்.

இன்று புலம் பெயர்ந்த நாடுகளை பார்ப்போமே யாயின் அங்குள்ள தமிழர்கள் தமிழர்களோட கதைக்கிறத்துக்கும் கூட தமிழ் மொழியை பயன்படுத்தாதது தான் கொடுமை. ஏன் என்றால் ,அவர்களுக்கு தமிழ் மொழி தெரியாது ,காரணம் தமிழ் மொழி தேவையில்லாத ஒரு மொழியாகவும், அதை படித்தால் தங்களுக்கு என்ன லாபம் என்றும் கேக்கும் சூழ்நிலை இன்று புலம்பெயந்த நாடுகளில் தலை விரித்து ஆடுகின்றன.

மற்றும் இப்படிப்பட்ட தமிழ் மக்கள் உருவாவதற்கு அவர்களுடைய பெற்றோரும் காரணமா கின்றார்கள். அதாவது தமது வீட்டிலையும் சரி தமது நண்பர்களோடும் சரி கதைக்கும் போது அவர்கள் அந்நிய பாசையிலேயே கதைக் கிறார்கள். தமது பிள்ளைகள் தமக்குள்ள அந்நிய மொழி பேசும் போதும் கூட அவர்கள் அதை பார்த்து ரசிக்கிறார்கள் என்றால் என்னவென்று சொல்ல?

இப்படி பட்ட தமிழ் குடும்பங்களை எடுத்து நோக்கினால் அது பெரும்பாலும் படித்த குடும்பமாகத்தான் இருப்பது வெக்கப்பட வைக் கின்றது. இவர்கள் வேறு யாராவது தமிழில் கதைத்தல் அதை கிழ்த்தரமாக எண்ணு கிறார்கள். இதனால் தமிழ் தெரிந்தவர்கள் கூட தமிழில் கதைப்பதற்கு பின்னுக்கு நிற்பது தான் என்னும் கேவலமாக உள்ளது.

மற்றும் தமிழ் மொழியுடன் பல்வேறுபட்ட நாட்டு மொழிகளும் சேர்ந்து தமிழ் மொழியை அழிக்கின்றது. அதாவது ஆங்கிலம் ,,சமஸ்கிரதம் ,,போர்த்துக்கல் ,ஒல்லாந்து மொழி ,மற்றும் வடமொழி ஏன்று எல்லா மொழிகளும் சேர்ந்து தமிழ் மொழியை மழுங்கடிக்கின்றது.

இந்நிலை மாறவேண்டும்.இப்படி தமிழ் போகும் என்றால் தமிழனுக்காக போராடியதெல்லாம் வீனாக போய் விடும்.ஈழத்தில் தமிழனை கொன்று தமிழை அழிக்கிறான் ,,புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மொழி தெரியாது தமிழை அழிக்கிறான். என்றால் எமக்கும் மகிந்தவுக்கும் என்ன வித்தியாசம் என்று கேள்வி எழ வைக்கின்றது.

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிந்து நில்லடா"

தமிழ் கோயில்


தமிழுக்கென்று கோவில் வேண்டும் அதில்
தலையனாய் வள்ளுவன் வேண்டும்...!
வள்ளுவம் பேசும் வாயிற்கெல்லாம் வல்லமை
பொங்கி வழிதல் வேண்டும்...!
சன்னதி சுற்றி வருகையிலே அவரவர்
சரித்திரம் சொல்லி நிற்க வேண்டும்...!
பாடல் பத்திரம் பொதிக்க வேண்டும் அதை
பலமுறை படித்து நெகிழ வேண்டும்...!
சரித்திரம் பேசும் கோவிலாக அது
உயர்ந்து வான்நோக்கி நிற்க வேண்டும்...!
அனுதினம் அர்ச்சனை செய்ய வேண்டும்
அதில் பசும்பால் அற்ற வள்ளுவனின் முப்பால் வேண்டும்...
இடப்புறத்தில் ஒரு சன்னதி வேண்டும் அதில்
கம்பன் சிரித்து லயிக்கவேண்டும்...!
தொல்காப்பியனும், இளங்கோவடிகளும்
ஔவையும் அகத்தியரும்
மாறாய் மாற்றுதுறாய்
பலர் சுற்றும் புறமும் சந்நிதியில் குடிக்கொள்ள
கால்கள் தரைபடற நடந்து செல்கையில்
அழகிய குடிலாகிய சந்நிதி வேண்டும்...
ரம்மியமும் ரௌத்திரமுமாய் அது மிளிர வேண்டும்..
ஒற்றை தலையனாய் அங்கு பாரதி வேண்டும்...
அவன் முன்னால் கைகூப்பி நின்று
'பல வேடிக்கை மனிதரைப் போலே நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ' என
உரக்க சொல்லி பெருமிதத்தோடு
அங்கு நான் சிரிக்க வேண்டும்...!
தமிழன் எப்போது தன்னை ஒரு தமிழனாக உணர்ந்து கொள்ளுறானோ அப்போதே அவன் அடிமை வாழ்க்கையில் இருந்து விடுபடுவான்

ந.அஜளுபன் (ஜெர்மனி)









# அமெரிக்கா பியரில் காந்தி இந்தியா செருப்பில் வாஷிங்டன்

## மந்திரமா அல்லது! இது வியாபாரத் தந்திரமா!

வெளிநாடுகளில் பீர் பாட்டில்களில் இந்துக்கடவுள்களின் படங்களை போட்டு விற்பனை செய்தனர். இதையும் தாண்டி அமெரிக்க நிறுவனம் காந்தி பெயரில் பீர் விற்பனை செய்தது. இதற்கு பதிலடியாக, ஜார்ஜ் வாஷிங்டன் பெயரில், அவர் படத்துடன் கூடிய செருப்பு தமிழகத்தில் தயாராகி வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காந்தி பீர் டின் அமெரிக்காவை சேர்ந்த நியூ இங்கிலாந்து ப்ரூவிங் கம்பெனி என்ற மதுபான தயாரிப்பு நிறுவனம், சமீபத்தில் “காந்தி பாட்“ என்ற புதிய வகை பீர் டின் ஒன்றை அறிமுகம் செய்தது. அந்த பீர் டின்களில் இந்தியாவின் தேசப்பிதா மகாத்மா காந்தியின் புகைப்படத்தையும் வெளியிட்டது.

இந்தியாவில் கண்டனம் அமெரிக்க நிறுவனத்தின் இச்செயலுக்கு கடும் கண்டனம் கிளம்பியது. டின் பீர் விளம்பரத்தில் உள்ள காந்தி படத்தை அகற்ற வேண்டும் என்று பல்வேறு அமைப்புகளும் கோரிக்கை விடுத்தன. ஆனால் இதற்கு அந்த நிறுவனம் மன்னிப்பு கோரியது. படம் அகற்றவில்லை அதேசமயம் பீர் பாட்டிலில் காந்தி படத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிகிறது. இணைய தளங்களில் இன்னும் காந்தி படத்துடன் கூடிய பீர் பாட்டில்களின் படங்கள் இடம் பெற்றுள்ளதாக உறுதிபடுத்தப்பட்டுள்ளன. பதிலுக்கு பதில் இந்நிலையில், இதற்கு பதிலடியாக அமெரிக்கா நாட்டின் தந்தை என அழைக்கப்படும் ஜார்ஜ் வாஷிங்டன் படத்துடன் கூடிய செருப்பை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார் கோவையைச் சேர்ந்த வழக்கறிஞர் கே.ராமசுப்பிரமணியம். வழக்கு தொடர்ந்தாலும் ”அமெரிக்க பீர் நிறுவனம் காந்தியடிகளின் படத்தை பீர் பாட்டிலில் இருந்து அகற்றவில்லை.

இது சம்பந்தமாக ஹைதராபாத்தை சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் வழக்கு தொடர்ந்துள்ளார். ஆனால் வெளிநாட்டைச் சேர்ந்தவரை இந்தியா கொண்டு வர நிறைய சட்ட நடைமுறைகள் உள்ளது. ஜார்ஜ் வாஷிங்டன் நம் நாட்டில் காந்தி போல அமெரிக்காவின் மதிப்பு மிக்க தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் அவரது படத்தினைப் போட்டு செருப்பு தயாரித்தால் என்ன என்று தோன்றியுள்ளது கோவையை சேர்ந்த ராமகிருஷ்ணனுக்கு. அதற்கு உடனடியாக செயல்வடிவமும் கொடுத்துவிட்டார்.

தயாராகிவரும் செருப்பு இது சம்பந்தமா 5, 6 கம்பெனியை அணுகியும் யாரும் தயாரிக்க முன்வரவில்லையாம். ஒரே ஒரு நிறுவனம் மட்டும் பெயரை வெளியில் சொல்லாமல் செருப்பு தயாரித்துள்ளனர். அமெரிக்க அதிபர், துணை அதிபர், ஸ்பீக்கர்கள், 50 மாகாண கவர்னர், இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் உள்ளிட்டோருக்கு இந்த செருப்புகளை இம்மாதம் (தை) கடைசியில அனுப்பி வைக்க உள்ளனர்.

இப்படி அமெரிக்கா இந்துக்கள் படங்களை செருப்பிலும் ஏன் ரொலைட்பேப்பர் மற்றும் மூக்குதுடைக்கும் ரிசுவிலும் ஏற்கனவே அடித்துள்ளது. இதுமட்டுமன்றி தெய்வப்படங்களை உடலில் பச்சைகுத்தியும் கொள்கின்றனர்.

அவர்கள் ஆண்டவன் என்று குத்துவதில்லை.ஆனால் அவர்களுக்கு அழகாக இருந்துவிட்டது. அதனால் குத்திக்கொண்டனர். அதுமட்டுமன்றி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பல்திறன் ஆற்றல் வாய்ந்தவர் என்று காட்டுவதற்கு நான்கு கரங்களுடன் சிவனைப்போல் வரைந்தும் இருந்தனர்.




இப்படி விளம்பரத்திற்காக ஆசியமக்களை புண்படுத்துவதும் பின்பு மன்னிப்புக் கேட்பதும்,நன்றாகத் தெரிந்துகொண்டும் தெரியாதமாதிரி செய்வதும் நடிப்பதும் பின்பு இந்துக்களைப் புண்படுத்திய படங்களை பெரிதாகப் போட்டு மன்னிக்கும்படி கேட்பதும், எல்லாமே வியாபாரத் தந்திரமே. இது மந்திரமா! அல்லது ! இது வியாபாரத் தந்திரமா!.


வவுனியாவில் காணி விற்பனை!

80 Acres of Private Land for Sale

வவுனியாவில் காணி விற்பனைக்கு உண்டு!
தாயகத்தில் வவுனியாவில் தமிழ் பகுதியில் 60 ஏக்கர் வயல் தோட்டம் செய்யக்கூடிய, நீர் வளமுள்ள குடி இருக்கக்கூடியதுமான காணி விற்பனைக்கு உண்டு.

Only Genuine Buyers call.Preferable Charitable organization Tel: 0044 79 32 45 64 64
K.Ramanathan

15 வது ஆண்டில்..
Kaneen electronics
ATHAVAN TV
ஆதவன் தொலைக் காட்சியின் யேர்மனி முகவர்
ஆதவன் தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள இடம்பெறவேண்டுமா! மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஆதவனில் ஒளிபரப்பவேண்டுமா! எம்மை நாடுங்கள். எமது துல்லியமான ஒளிப்பதி, ஒலிப்பதி உங்கள் நிகழ்ச்சிகளை மெருகூட்டும்.
500 இருக்கைகள் கொண்ட Wuppertal மண்டபம் வாடகைக்கு பெறுவதற்கும் வீடியோ போட்டோ எடுப்பதற்கும் எம்மை நாடுங்கள்
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Schevenhoferweg-24
42111 Wuppertal
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de

Mathan
Finanz Coach & Finanz-Adviser
காப்புறுதிகளிலும் கடன் எடுப்பதிலும் காசை எப்படி மீதப்படுத்தலாம்!
வீட்டுக்கான கடன் வட்டி 1.75வீதம் முதல்
(10 வருடங்களுக்கு நிலையானது)
தனிப்பட்ட கடன்களுக்கான வட்டி 3.45 %
காப்புறுதிகள் 20 வீதம் மீதப்படுத்தலாம்
வீடு வாங்கும் போது பிள்ளைகளுக்கான விஷேட சலுகைகள் !
mit staatlicher Förderung
z.B. Familie mit 2 Kindern
908 € pro Jahr
Zuschuss für die Immobilie.
Auch ohne Eigenkapital möglich.
finanzcoachffm@gmail.com
069 9586 4440 Mobil: 0174 / 3112258

# ஒரு நகைச்சுவை நடிகரை அழவைத்தால் மக்கள் நகைத்துவிடுவார்கள் ! விதியை மாற்றியவர். பாலச்சந்தர்.



மறைந்த பாலசந்தரின் வாழ்க்கையை ஒரு மனிதனின் புதுமைக்கான தேடல் என்று வகைப்படுத்தலாம். எம்.ஜி.ஆர்., சிவாஜி என்ற இருபெரும் நட்சத்திரங்களுக்கு மத்தியில் பாலசந்தரால் ஜொலிக்க முடிந்ததென்றால் அதற்கு காரணமாக அமைந்தது வழக்கமான பாதையி லிருந்து அவர் மாற்றி சிந்தித்ததுதான்.

பாலசந்தரின் முழுப் பெயர் கைலாசம் பாலசந்தர். பிறந்தது ஜுலை 9, 1930. சொந்த ஊர் நன்னிலம் அருகிலுள்ள நல்லமாங்குடி. தந்தை கைலாசம், தாயார் காமாச்சியம்மாள். நன்னிலத்தில் பள்ளிப் படிப்பை முடித்து அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பி.எஸ்.ஸி. படித்தார்.

நாடகத்தின் மூலம் சினிமாவுக்கு வந்தவர் பாலசந்தர். நாடகத்தை சினிமாவில் நுழைவ தற்கான வழியாக அவர் நினைக்கவில்லை. நாடகத்தின் மீதான பேராவலே அவரை சினிமாவுக்கு கொண்டு வந்தது. 1960 - இல் அரசு வேலையில் இருந்தபோதே நாடக உலகில் பிரவேசித்தார். நீர்க்குமிழி, மேஜர் சந்திரகாந்த், சர்வர் சுந்தரம் போன்ற அவரது நாடகங்கள் மக்கள் மத்தியில் சிறப்பான இடத்தைப் பெற்றன.


1965 -இல் அவரது திரையுலக பிரவேசம் நடந்தது. எம்.ஜி.ஆர். நடித்த தெய்வத்தாய் படத்துக்கு கேபி வசனம் எழுதினார். அதைத் தொடர்ந்து அவர் எழுதிய சர்வர் சுந்தரம் நாடகம், கிருஷ்ணன் - பஞ்சு இயக்கத்தில் திரைப்படமானது. நாகேஷுக்கு அந்தப் படம் புதிய அடையாளத்தை தந்தது.



கேபி இயக்குனரானது நீர்க்குமிழி படத்தில். நாகேஷ் ஹீரோ. முதல் படத்தில் ஒரு நகைச்சுவை நடிகரை நாயகனாக்க தனது திறமை மீது அதீத நம்பிக்கை ஒருவருக்கு இருக்க வேண்டும். ஒரு நகைச்சுவை நடிகரை அழவைத்தால் மக்கள் நகைத்துவிடுவார்கள் என்ற விதியை மாற்றியவர் கேபி -க்கு அது இருந்தது. முதல் படத்தில் மட்டுமின்றி தொடர்ச்சியாக அவர் இயக்கிய படங்களில் அது வெளிப்பட்டது.

நீர்க்குமிழி படம் மருத்துவமனை பின்னணியில் எடுக்கப்பட்டது. முழுக்க மருத்துவமனைதான். அடுத்தப் படமான நாணலை ஒரே வீட்டிற்குள் வைத்து எடுத்தார். இவையெல்லாம் இந்தக் காலத்தில்கூட தமிழில் சாத்தியமா என யோசிக்க வைப்பவை. ஒரு வீடு இரு வாசல் படத்தில் இரண்டு வெவ்வேறு கதைகளை ஒரே படத்தில் சொல்லியிருப்பார்

கேபி அரசியல், சமூகம், காதல் என்று பல தளங்களில் படத்தை தந்திருந்தாலும் உறவுச் சிக்கல்களை அவர் கையாண்டவிதம் அவரை பிற இயக்குனர்களிடமிருந்து தனித்துக் காட்டியது. அவர்கள், அபூர்வராகங்கள், மூன்று முடிச்சு போன்ற படங்களை சிறப்பாக குறிப்பிடலாம்.




தொடர்ச்சியாக நடிகர்களையும், தொழில்நுட்பக் கலைஞர்களையும் திரையில் அறிமுகப்படுத்தினார் கேபி. அதனை ஒருகடமையாகவே அவர் செய்தார். அவரது புதுமை தேடும் ஆர்வத்தின் ஒரு பகுதியாக இருந்தது அவர் புதுமுகங்களை அறிமுகப் படுத்தியது. நேரந்தவறாமை, கடமையில் முழுக் கவனத்தையும் செலுத்தி அதிலிருந்து விலகாமல் இருப்பது போன்றவை கேபியிடமிருந்து அவரது சிஷ்யர்கள் கற்றுக் கொண்ட பிரதான குணங்கள்.

பாரதியார் கேபியின் ஆதர்ஷமாக இருந்தார். தனது படங்களில் பாரதியார் பாடல்களை தொடர்ச்சியாக இடம்பெற வைத்தார். குறிப்பாக வறுமையின் நிறம் சிவப்பில் பாரதியார் பாடல்கள் அந்தப் படத்துக்கே தனி கம்பீரத்தை தந்தது. அதேபோல் இசையிலும் அவருக்கு பெரும் ஈடுபாடு இருந்தது.










பேராசிரியர் அ.சண்முகதாஸ்

# நகரமும் காதலியும்

நிலாவை, பூவை, ஆற்றை எல்லாம் தம்முடைய காதலிகளுக்கு உவமையாகக் கூறுவார்கள். ஆனால் பட்டினத்தை, அல்லது ஓர் ஊரை உவமையாக்கும் கவிதைகள் பற்றிக் கேள்விப்பட்டீர்களா? பண்டைக்காலத் தமிழ்க் காதலர்கள் தம்முடைய காதலிகளை பட்டினங்கள், நகரங்களுடன் இணைத்துப் பார்த்துள்ளனர். சங்கப் பாடல்களிலே ஒரு சிறப்பான பண்பு காணப்படுகின்றது. தமிழ்நாட்டிலிருந்த மிக வளமுள்ள நகரங்களைப் பெண்களுக்கு ஒப்பிட்டனர் சங்கப்புலவர்கள்.





இது வேறு மொழி இலக்கியங்களிலே காணப்படாத ஒன்று என தனிநாயக அடிகளார் குறிப்பிட்டுள்ளார். ஓர் ஆங்கிலேயக் காதலன் தன்னுடைய காதலியிடம் "நீ லண்டன் போல இருக்கிறாய்" என்று கூறுவதில்லை. "நீ சிக்காகோ போல உள்ளாய்" என்று அமெரிக்கக் காதலன் கூறுவதில்லை. ஆனால் பண்டைத்தமிழ்க் காதலன் தன் காதலியின் வளத்தினை "தொண்டியன்ன இவள் நலனே" என்று கூறுகிறான்.

தொண்டி மிகச் சிறந்த வளமுள்ள வயல்களைக் கொண்ட இடமாகும் இந்த வயல் அரிசி மிகச் சுவையானது. "பல பசுக்களுடைய பாலால் பெற்ற நெய்யில் கலந்த, தொண்டியின் எல்லா இடங்களிலுமுள்ள வயல்களில் பெற்ற நெல்லரிசியால் ஆக்கிய வெண்சோற்றினை" என்று குறுந்தொகைப் பாடல் கூறுகின்றது. பல விழாக்கள் கொண்ட இடமாக, நல்ல கடல் துறைமுகம் கொண்டதாக, இனிய இசை வீதிதோறும் இசைக்கும் நகரமாக தொண்டி விளங்கியது. பல வளங்களையும் நலன்களையும் கொண்டதாக இது அமைவதால், எல்லா நலன்களும் கொண்ட தன்னுடைய காதலி தொண்டியைப் போன்றவள் என காதலன் எண்ணுகிறான்.

## "மதுரையில் பறந்த மீன்கொடியை உன் விழிகளில் கண்டேனே! பாடலும் பாலச்சந்தரும்!

இயக்குனர் சிகரம் பாலசந்தர் பாடல்கள் எடுப்பதில் வல்லவர். அவரது படங்கள் மட்டுமின்றி பாடல்களும் புதுமை நிறைந்ததாக இருக்கும். வறுமையின் நிறம் சிவப்பு படத்தில் இடம்பெறும், சிப்பி இருக்குது முத்து இருக்குது பாடல் ஒன்றே போதும், அவரது திறமையை அறிய. தூர்தர்ஷனில் காவிய கவிஞர் வாலி தனது மலரும் நினைவுகளை பதிவு செய்த நிகழ்ச்சியில் இயக்குனர் சிகரமும் கலந்து கொண்டு பேசினார்.



மதுரையில் பறந்த மீன் கொடியை உன் விழிகளில் கண்டேனே என்ற வாலியின் அற்புதமான பாடல் குறித்தும், அந்தப் பாடல் தனக்கு கற்றுத் தந்த பாடம் குறித்தும் இயக்குனர் சிகரம் அதில் பகிர்ந்து கொண்டுள்ளார். "மதுரையில் பறந்த மீன்கொடியை உன் விழிகளில் கண்டேனே ரொம்ப அற்புதமான பாட்டு. எல்லா ஊர்ப் பெயர்களும் அதில் வரும். ஆனால் அதில ஒரு குழப்பம் ஆகிப்போச்சு. நான் ரொம்ப ரசித்த பாட்டு, ஜெமினி பிரமாதமாக நடிச்சிருப்பார். அந்தப் பாடல் இடைவேளையில் வரும். ஏற்கனவே ஒன்றரை மணிநேரம் தம்மடிக்காம தம்பிடிச்சு உட்கார்ந்திருக்காங்க. அப்ப இந்தப் பாட்டு வந்தவுடன் பாதிபேர் எழுந்து வெளியே போயிட்டாங்க. அப்போ எல்லாம் உள்ளுக்குள்ள சிகரெட் பிடிக்கக் கூடாதுன்னு சட்டம் இருந்தது. பல தியேட்டர்களிலும் இதே நிலை. "எப்பவுமே இடைவேளை வரும்போது டைரக்டர் ஜாக்கிரதையாக இருக்கணும். அங்கபோய் இந்த மாதிரி மென்மையான காட்சியை வைக்காமல் இடைவேளைக்குப் பிறகு கொடுத்தால் ரசிப்பாங்க. இடைவேளை நேரத்தில் இந்தப் பாட்டை கொடுத்ததால் எழுந்து போயிட்டாங்க. கொடுத்தது என் தப்பு. ஃபோன் பண்ணி பார்த்தால் எல்லா ஊர்களிலும் இதேநிலை என்றார்கள். கஷ்டமா போச்சு. மதுரையில் கூட எழுந்து போனார்கள் என்று சொன்னார்கள். சரி என்று சொல்லிவிட்டு அந்தப் பாட்டை எல்லா ஊர்களிலும் நீக்கச் சொல்லிட்டேன். "இதிலிருந்து என்ன கற்றேன் என்றால். ஒரு படத்தில் பாட்டு வைக்கிற இடத்தைக்கூட கவனமாக வைக்கவேண்டும். வெறும் சீனுன்னு நான் எழுதுறேன். நான் டைரக்ட் பண்ணிட்டு போயிடறேன். பாட்டு சீன் அப்படியில்ல. பாட்டுன்னா ஒரு கவிஞர் ஒரு மியூஸிக் டைரக்டர் நான் இருக்கிறேன். அப்புறம் நடன இயக்குனர். இவ்வளவு பேரும் சேர்ந்து செய்யும் உழைப்பு வீணாகக் கூடாது அல்லவா? அதனால ஒரு பாட்டு எந்த இடத்தில் போடணும், போடக் கூடாதுன்னு ஒரு முடிவுக்கு வந்தேன்."- இவரின் இந்த வார்த்தைகளிலிருந்து அவர் ஒரு திரைப்படத்தை, திரைப்பட ரசிகர்களின் மன நிலையை எப்படி நுட்பமாக அணுகி புரிந்து வைத்துள்ளார் என்பதை அறியலாம்.




பண்டித் கார்த்திக்
கருமாரி அம்மன் துணை
முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தைக் கணிப்பார்,
அத்தோடு கைரேகையும் பார்க்கப்படும்.
முகம் பார்த்தல் - கை பார்த்தல்
வியாபாரங்கள், எதிரிகள், உடல்நிலை, வேலை, குழந்தையின்மை, திருமணம், பணம், குடிபோதை, காதல், விவாகரத்து, கண்திருஷ்டி, குடும்ப ஒற்றுமை, படிப்பு, வாகனப்பொருத்தம், பிரச்சினையாவிற்கும் தீர்வுகாணப்படும்.
மந்திரம், தந்திரம், காத்துக் கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்.


பேசும் மொழி: தமிழ்
வாரத்தில் 7 நாட்களும் 10.00 முதல் 20.00 வரை சந்திக்கலாம்
private & confidential
HEINRICHSTR 26 | 44137 DORTMUND | GERMANY | + (0) 49 15212 921733 | + (0) 49 15216260484



பிருந்தா

Pirruntha Silk House
Textile & Jewellery
தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel:0711 61 58 976 Mob:0170 33 44 059
Ludwig Str.92- 70197 Stuttgart



திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி


சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450



மங்கல இசைக் குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236


நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.ரகுராமன்
Mob: 0049 157 89 15 95 71

# யாழ்தேவி கல்கிசையிலிருந்து காங்கேசன்துறை வரை



இலங்கையின் மிக நீளமான (256 மைல்) தொடருந்து மார்க்கத்தைக்கொண்ட வடக்கிற்கான முழுமைப்படுத்தப்பட்ட தொடருந்துச்சேவை நாளையிலிருந்து திட்டமிட்ட நேரவொழுங்கில் நடைபெறவுள்ளது. அந்தவகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்தேவி மற்றும் இரவுநேர தபால் தொடருந்து ஆகியன சுன்னாகம் வரையிலேயே தமது சேவையை மேற்கொள்ளவுள்ளன. ஏனைய இரண்டு அதிவேக தொடருந்துகளும் காங்கேசன்துறைவரை சேவையிலீடுபடுவதோடு காங்கேசன்துறைக்கும் யாழ்நகரிற்கும் இடையிலான குறுந்தூர தொடருந்தும் சேவையிலீடுபடும்.

இவற்றிற்கான நேர அட்டவணை தற்போது வெளியிடப்பட்டுள்ளது!



| யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் / දුම්රිය ස්ථානය - යාපනය / Railway Station - Jaffna | | பிரயாணச் சீட்டுக் கட்டணங்கள் / ප්‍රවේශ පත්‍ර ගාස්තු ලේඛනය / Ticket Fares | | யாழ்ப்பாணம் - கொழும்பு / යාපනය - කොළඹ / Jaffna - Colombo | |
|---|---|---|---|---|---|
| யாழ் தேவி / යාල් දේවි / YAL DEVI | 07.10 a.m | First Class Reservation | 900/= | Second Class Reservation | 700/= |
| | | First Class Observation Saloon | 1100/= | | 320/= 570/= |
| நகர்சேர் கடுகதி / නගරාන්තර සීඝ්‍රගාමී / Intercity Express Deyata Kirula | 11.00 a.m | Second Class Reservation | 800/= | Normal 3rd Class - Colombo | 520/= |
| குளிரூட்டிய நகர்சேர் கடுகதி / Intercity Express (A/C) | 01.45 p.m | Only First Class | 1500/= | | |
| இரவுத் தபால் / රාත්‍රී තැපැල් / Night Mail | 07.05 p.m | 1st Class Berth | 1400/= | Third Class Sleeprets | 500/= |
| | | Second Class Sleeprets | 700/= | Normal Ticket Fare | 320/= 570/= |

Dial 365 for Railway bookings

யாழ்தேவி தினமும் காலை 6.30க்கும் இரவுநேர தபால் தொடருந்து தினமும் மாலை 6.25க்கும் சுன்னாகம் தொடருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு இவ்விரு தொடருந்துகளும் யாழ்நகர் வரையிலான அனைத்து துணை நிலையங்களிலும் தரித்துநின்று பயணிகளை ஏற்றிச் செல்லும்.

குளிரூட்டப்பட்ட அதிவேகத் தொடருந்து கல்கிசையிலிருந்து காலை 5.10க்கு புறப்பட்டு பிற்பகல் 12.17மணியளவில் காங்கேசன்துறையை வந்தடைவதோடு மீண்டும் 1.25க்கு கொழும்பிற்கு பயணமாகும். இதன்போது சுன்னாகம், கோண்டாவில் ஆகிய துணை நிலையங்களில் தரித்துச்செல்லும்.

அதிவேகத் தொடருந்து தினமும் காலை 10.30க்கு கொழும்பு நோக்கிப் பயணிப்பதோடு காங்கேசன்துறைக்கும் யாழ்நகரிற்கும் இடையிலான அனைத்து துணைநிலையங்களிலும் தரித்துநின்று பயணிகளை ஏற்றிச்செல்லும்.

குறுந்தூர தொடருந்து தினமும் மாலை 7.00க்கு காங்கேசன்துறையிலிருந்து யாழ்நகரிற்கும் காலை 9.40க்கு யாழ்நகரிலிருந்து காங்கேசன்துறைக்கும் தனது சேவையிலீடுபடும். இதன்போது அனைத்து துணைநிலையங்களிலும் தரித்துச்செல்லும்.

யாழ்நகரிலிருந்து காங்கேசன்துறைவரை கொக்குவில், கோண்டாவில், இணுவில், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை அகிய எட்டு துணை நிலையங்கள் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

## படங்கள் சொல்லும் பாடம்








ராஜ ஜோதிடர் என்ற செல்லப் பெயர் கொண்டவர் இந்த அபயகுணவர்த்தனா. பல வருடங்களாக இவர் ராஜபக்சேவின் ஜோதிட ஆலோசகராக இருந்து வந்தார். இவர் சொல்லும் வார்த்தையை ராஜபக்சே அப்படியே ஏற்பாராம். ஜோதிடம் மட்டுமல்லாமல் எதிர் அரசியல்வாதிகளின் கெட்ட நேரத்தையும் கணித்து அதற்கேற்ப ராஜபக்சேவுக்கு ஆலோசனை சொல்வதில் இவர் கில்லாடியாம். இந்த பாயிண்ட்தான் ராஜபக்சேவுக்கு ரொம்பப் பிடித்துப் போய் விட்டதாம். ராஜபக்சே வேட்பு மனு தாக்கல் செய்யும் நேரத்தைக் கூட இவர்தான் கணித்துக் கொடுத்தார். மேலும் வேட்பு மனுவைக் கொடுக்கும்போது தேர்தல் ஆணையரின் வலது பக்கமாக மனுவை கொடுக்க வேண்டுமா, இல்லை இடது பக்கமாக இருந்து கொடுக்க வேண்டுமா என்பதைக் கூட ராஜபக்சேவுக்கு இவர் அறிவுறுத்தியதாகவும் ஒரு தகவல் உள்ளது. ஆனால் நட்ட நடுவில் ராஜபக்சேவை நோக்கி சனியன் படு வேகமாக வந்து பீடித்துக் கொண்டதைப் பற்றி அபயா எதையும் கணிக்காமல் போய் விட்டதுதான் கொடுமையானது! தேர்தலுக்கு முன்பு அபயகுணவர்த்தனா அளித்த ஒரு பேட்டியல் இதுவரை நான் அதிபரிடமிருந்து எந்தத் திட்டும் வாங்கியதில்லை. காரணம், தவறாக எதையும் நான் கணித்துக் கூறியதில்லை என்று கூறியிருந்தார். ஆனால் தற்போது மொத்தமாக ராஜபக்சேவின் அரசியல் வாழ்க்கையை இவரது வாக்கு கவிழ்த்து மூடி விட்டதுதான் சோகமே. ஆனால் தற்போது இந்த ஜோதிடர் தான் வேண்டும் என்றே ராஜபக்சேவை கவிழ்பதற்காக செய்த ஜோதிடச்சதி என்கின்றார். இப்போ அரசியல் எங்கும் கலந்துவிட்டது.



# ஹாலிவுட் ஹீரோக்கள் ”நீ இப்படி நடிச்சா தான் மக்கள் ஏற்பார்கள்” என்னும் மாய வலைகளில் அவர்கள் சிக்குவதில்லை.








குழந்தைகளைக் கவனித்திருக்கிறீர்களா ? சிறுவர் சிறுமியராய் இருக்கும் போது அப்பாவைப் போல வேட்டி கட்டவோ, அம்மாவைப் போல சேலை கட்டவோ ஆசைப்படுவார்கள். அவர்கள் வளர்ந்து நரைகள் நுரைக்கும் போது டை அடித்து சிறுவயது போல காட்டிக் கொள்ள பிரம்ம பிரயர்த்தனம் செய்வார்கள். ”அந்தந்த வயதில் என்னென்ன செய்ய வேண்டுமோ அதை சிறப்பாகச் செய்ய வேண்டும்”. இதுவே வாழ்க்கையின் சூட்சுமம்.

சூப்பர் ஸ்டாரைப் பற்றி நினைக்கும் போது கூட இப்படி ஒரு சிந்தனை தான் எழுகிறது. இளம் வயதாக இருக்கும் போது முதியவர் வேடமேற்று சிறப்பாக நடித்திருக்கிறார். வயதான காலத்தில் அவருடைய வயதுக்கேற்ற கதாபாத்திரங்களை ஏற்று நடிக்க மனம் மறுக்கிறது.

ஹாலிவுட் ஹீரோக்கள் தங்கள் உருவத்தை இளமையாகக் காட்டி, சின்ன வயது இளைஞர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ள முயல்வதில்லை. அவர்களுடைய வயதுக்குரிய கதாபாத்திரங்களையே பெரும்பாலும் ஏற்று நடிக்கிறார்கள். கல்லூரிக்குச் செல்லும் பெண்ணின் அப்பாவாகவோ, வேலைக்குப் போகும் பையனின் தந்தையாகவோ, சுருக்கம் விழுந்த முகத்தோடோ நடிக்க அவர்கள் தயங்குவதில்லை. காரணம், ”நீ இப்படி நடிச்சா தான் மக்கள் ஏத்துப்பாங்க” எனும் மாய வலைகளில் அவர்கள் சிக்குவதில்லை.

”வயசாகிப் போச்சு, மகள் மாதிரியான பெண்களோடு டூயட் பாட கஷ்டமா இருக்கு” என்றெல்லாம் நகைச்சுவை மிளிரப் பேசும் ரஜினிகாந்த் தனது கதைத் தேர்வில் அதையெல்லாம் கண்டுகொள்வதில்லை. ரஜினிக்குக் கொடுக்கப்படும் விலை மிகப்பெரிது, எனவே வினியோகஸ்தர்கள், தயாரிப்பாளர்கள் என எல்லோருமே இந்த ஆட்டத்தில் பொம்மலாட்ட விரல்களாகிப் போகின்றனர்.
பட்ஜெட், தனது சம்பளம் போன்ற பெரிய தளைகளை உடைத்தெறிந்து விட்டு நல்ல கதைகளில் ரஜினிகாந்த் நடிக்க வேண்டும். அல்லது குணசித்திர வேடங்களை அதிகமாய் ஏற்றுச் செய்ய வேண்டும். கோடிகளை அள்ளிக்கொடு என சம்பளம் பேசாமல், திரைப்பட லாபத்தில் விகிதம் கேட்கும் புது சூழலை உருவாக்க வேண்டும்.
அப்படி ஒரு சூழல் உருவானால் ரஜினி இதுவரை செய்து பார்க்காத எத்தனையோ வேடங்களைச் செய்ய முடியும். தயாரிப்பாளர்கள் எந்த வித நிர்ப்பந்தமும் இல்லாமல் படங்கள் தயாரிக்க முடியும். இயக்குனர்கள் தங்களுடைய சிந்தனைகளோடு சமரசம் செய்யாமல் படம் எடுக்கவும் முடியும்.

ரஜினிகாந்த் இல்லாத தமிழ் சினிமாவை நினைத்துப் பார்க்க முடியாது. அவர் நடித்தாலும், நடிக்காவிட்டாலும் சினிமாவின் அம்சமாகவே எப்போதும் பார்க்கப்படுவார். இதுவரை பணத்துக்காக நடித்தாகிவிட்டது. பத்து தலைமுறை படுத்துக் கொண்டே சாப்பிடுமளவுக்கு சொத்தும் சேர்த்தாகிவிட்டது. இனிமேல் வித்தியாசமான விருந்தை அவர் ரசிகர்களுக்குத் தரலாமே !

ஒரு காமராஜராகவோ, ஒரு போப் ஆகவோ, ஒரு அமெரிக்க ஜனாதிபதியாகவோ, ஒரு தலாய் லாமாவாகவோ, ஒரு நெல்சன் மண்டேலாவாகவோ, ஒரு ஸ்டீபன் ஹாக்கின்ஸ் ஆகவோ எத்தனையோ ஆயிரக்கணக்கான கதாபாத்திரங்கள் ரஜினியின் தீனிக்காய்க் காத்திருக்கின்றன. பணம், பட்ஜெட் எனும் இரட்டைத் தளைகளை உடைத்து விட்டால் சினிமாவில் இதுவரை சாதிக்காத பலவற்றை ரஜினிகாந்த் இனிமேல் சாதிப்பார் என்பதில் சந்தேகமில்லை.

ரஜினிகாந்த்க்கு இருக்கும் ரசிகர்கள் இருந்து கொண்டே தான் இருப்பார்கள் என்பதை அவருடைய செய்திகளுக்குக் கிடைக்கும் முக்கியத்துவத்தை வைத்தே புரிந்து கொள்ளலாம். அவரைப் பற்றிய துணுக்குச் செய்திகளை ஊதிப் பெருக்கியே குளிர்காயும் பத்திரிகைகள் பல உண்டு. எனவே, இப்படி நடித்தால் தான் நல்லது, அப்படி நடிப்பது கெட்டது எனும் மாயைகளை விட்டு அவர் வெளியே வரவேண்டும்.

மாறுவாரா ? மலையேறுவாரா என்பதை காலம் தான் முடிவு செய்யும்.

**ரஜினி ரசிகன்**


Milin Impex GmbH

Dortmund நகரில்

இலங்கையர்களுக்கான எவ்வித உணவுப்பொருட்களையும்
மொத்தமாகப் பெற்றுக்கொள் எமது இணையத்தளத்தை நாடவும்

Web :www.milinimpex.de


Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen





Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288

# திரை உலகம்





## அன்று விஜய்யை நாயகனாக வைத்து எவரும் படம் எடுக்க முன்வரவில்லை!

**எஸ்ஏசி**

விஜய்யை ஹீரோவாக்க நான் முயன்ற நேரத்தில் அவரை வைத்து படமெடுக்க யாருமே தயாராக இல்லை. அதனால்தான் அவருக்காக சொந்தமாக படம் தயாரித்து இயக்கினேன், என்றார் இயக்குநர் எஸ் ஏ சந்திரசேகரன்.

எஸ் ஏ சந்திரசேகரன் நாயகனாக நடித்து இயக்கியுள்ள படம் டூரிங் டாக்கீஸ். இந்தப் படத்தின் ட்ரலைர் வெளியீட்டு விழாவில் எஸ் ஏ சந்திரசேகரன் பேசுகையில், ”நான் சினிமாவில் சான்ஸ் கேட்டு அலைந்த நாட்களில் பிளாட்பாரத்தில் படுத்து தூங்கியிருக்கிறேன். எழு நாட்கள் வெறும் தண்ணீரைக் குடித்து பசியைப் போக்கிக் கொண்டேன்.
பின்னர் இயக்குநராகி நிறைய வெற்றிப் படங்கள் கொடுத்த பிறகு, ஒரு கட்டத்தில் இனி இயக்க வேண்டாம்.. தயாரிப்பதோடு நிறுத்திக் கொள்ளலாம் என நினைத்தேன். அப்போதுதான் என் மகன் விஜய் நாயகனாக ஆசைப்பட்டார். அவரை வைத்து இயக்குமாறு அன்றைக்கு முன்னணியில் இருந்த பல இயக்குநர்களையும் கேட்டுக் கொண்டேன். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன் என்றுகூடச் சொன்னேன். ஆனால் ஒருவரும் அவரை வைத்து படமெடுக்க தயாராக இல்லை. எனவேதான் நானே அவரை வைத்து படம் தயாரித்து இயக்கினேன்.

இன்றைக்கு விஜய் பெரிய ஹீரோவாகிட்டார். நல்ல மருமகள், பேரக் குழந்தைகள், போதுமான வசதி,

---

## நான் இயக்கிய படங்களில் மிகச் சிறந்தபடம் என்னை அறிந்தால்!

என்னை அறிந்தால்“ படத்திற்காக தொடர்ச்சியாக 32 மணி நேரம் அஜித் டப்பிங் பேசியதாக இயக்குநர் கௌதம் மேனன் தெரிவித்தார். பிப்ரவரி 5ம் தேதி வெளியாக இருக்கிறது. முதன்முறையாக “என்னை அறிந்தால்“ படக்குழு பத்திரிக்கை யாளர்களை சந்தித்தது. இயக்குநர் கௌதம் மேனன் பேசியது: “நிறைய பேர் பார்க்காத அஜித்தை இப்படத்தில் காட்டியிருக்கிறேன். அனை வருமே குடும்பத்தோடு இப்படத்தை பார்க்கலாம். உங்களுக்கு ஏற்றமாதிரி சில காட்சிகள் எல்லாம் வைக்கலாம் என்று இருக்கிறேன் என்று சொன்னேன்.



உங்களுக்கு எது சரி என்று படுதோ அதை செய்யுங்கள். உங்க பாணியிலேயே படம் இருக் கட்டும் என்று சொன்னார் அஜித்,.இதுவரைக்கும் 14 படங்கள் இயக்கி இருக்கிறேன்.
நான் இயக்கிய படங்களில் இந்தப் படத்தை என்னோட மிகச் சிறந்த படம் என்று சொல்வேன். அஜித் சார் படத்தில் 25 வயதில் இருந்து 40 வயது வரைக்கும் வரும் தோற்றங்கள்ல நடித்திருக்கிறார். இதற்காக சிறப்பான ஒப்பனை எதுவும் போடவில்லை.
யதார்த்தமா ஒருவர் எப்படி அந்தந்த காலகட்டங் களில் இருப்பாரோ, அப்படித்தான் அஜித் தன்னை மாற்றிக் கொண்டார்.

## எழுபத்தைந்து வயதில் எழும் காதல்!




ஒரு 75 வயது இளைஞனின் சுவாரஸ்யமான சேட்டைகள்தான் எனது டூரிங் டாக்கீஸ் திரைப்படம் என்றார் இயக்குநர் எஸ்ஏ சந்திரசேகரன். எஸ் ஏ சந்திரசேகரன் இயக்கி, தயாரித்து, கதையின் நாயகனாகவும் நடித்துள்ள படம் டூரிங் டாக்கீஸ். இளையராஜா இசையமைத்துள்ள இந்தப் படத்தில், எஸ் ஏ சந்திரசேகரனுடன், அபி சரவணன், பாப்ரி கோஷ், ஹேமமாலினி, அஸ்வின், காயத்ரி, ரோபோ சங்கர், ஆடுகளம் ஜெயபாலன் ஆகியோர் நடித்துள்ளனர்..

படத்தைப் பார்த்த பலரும் எஸ் ஏ சந்திரசேகரனைப் பாராட்டி வருகின்றனர். இந்தப் படம் ஒரு டிக்கெட்டில் இரண்டு படங்களாக ரசிகர்களுக்கு விருந்தளிக்கும்.சொந்தக் கதை இதில் ஒரு பாதி கதை என் சொந்த அனுபவங்கள்தான். நான் கடந்து வந்த பாதையை அப்படியே திரும்பிப் பார்த்தபோது தோன்றியவற்றை தொகுத்து படமாக்கியிருக்கிறேன். நான் ஏன் நடித்தேன்? அந்த வேடத்தில் ஏன் நான் நடித்தேன் என்றால்.. அந்த வாழ்க்கையை உணர்ந்தவன், அனுபவித்தவன் என்ற முறையில் என்னால்தான் அதை பிரதிபலிக்க முடியும் என்பதால்தான். மற்றபடி நான் ஒரு நடிகன் அல்ல. எழுபத்தைந்து வயதில் ஒருவனுக்கு காதல் வருகிறது. அந்த வயதில் வரக்கூடாததல்ல அது. இயற்கையான விஷயம் அது. அப்படி காதல் வயப்பட்ட ஒருவன் எப்படியெல்லாம் நடந்து கொள்வான் என்பதை சுவாரஸ்யமாகச் சொல்லியிருக்கிறேன்.சமூகத்துக்கு செய்தி இந்தப் படத்தில் கமர்ஷியலான விஷயங்களோடு சமூகத்துக்கு தேவையான ஒரு அழுத்தமான செய்தியைச் சொல்லியிருக்கிறேன். கிராமத்து மக்கள் படும் பாட்டைப் பதிவு செய்திருக்கிறேன:



19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்
LITTLE INDIA
Textile & Jewellery
அழகான ஆடைகளுக்கும் பஞ்சாபி வகைகளுக்கும் தங்க நகைகளுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்



Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

இதோ கோடை கால விடுமுறை உங்கள் விமானப் பயணத்திற்கு பதிவுக்கு முந்துங்கள்
EurAsian - Tours
VALUTRANS MONEY TRANSFER
துரித பண மாற்றுச் சேவை!
Rishi 0174 96 44 965
info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy



Further Str. 156
41462 Neuss



Jasmine Silk House
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
முக்கிய அறிவித்தல்
02.12.2014 முதல் 19.01.2015 வரை எமது ஸ்தாபனம் விடுமுறைக்காகப் பூட்டப்படும் என்பதனை அன்பான வாடிக்கையாளர்களுக்கு அறித்தருகின்றோம்!



HP:0173 1937 325 Tel:02102 844744 T.Mohanadas



ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை,
இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282
உரிமையாளர்: பா.கணேஷ்

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு
தரமும் சுவையும் தரும்...





CEYLON IMBISS
இலங்கை உணவகம்
திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை
Tel:0231- 7252859
Annen Str.1
44137 Dortmund

Celebrate this Valentines' Day in Traditional Indian style and win surprise gifts! Like us to know more.



காதலர் தினத்தை முன்னிட்டு உங்களுக்காக
MAYRAA வின்
சிறப்பு அன்பளிப்பு !!!
Heart Says...
உங்கள் இதயம் விரும்புவது...
MAYRAA
MAYRAA | Rheinische Str. 71a | 44137 Dortmund | Tel.: +49 231 5320421 - 0 | Web: www.mayraa.com
இந்த அன்பளிப்பு 14.02.15 வரை செல்லுபடியாகும்.

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
StaR - Impex
Asia & Afro Großhandel & Einzelhandel



மரக்கறி கடலுணவுப் பொருட்களின்
மொத்த இறக்குமதியாளர்கள்
எமது விலைகள் சலுகைகள்
அறிய எமது இணையத்தளம்



Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Web.Star-impex.net
StaR Impex : Inh :K.Sivasubramaniam
Mobil: 0172/2183703 - E-Mail: star-impex@live.de
Tel:0231 860 26 96 Fax: 0231/8602698
Kipper Str.3 44147 Dortmund Germany